
கல்கி
KALKI 4-5-75
60 காசு





எங்கள் புதிய தயாரிப்பிலே
ஷர்மிலா டாகூர் !
பாம்பே டையிங்கின் புதிய புடவை வகைகள். ப்யூர் காட்டன் மற்றும் ப்யூர் பாலியெஸ்டரிலே நடிகையரின் உள்ளம் கவரும் அணிவகுப்புகள் 'ஆஷியானா' 'ஷிஃபாலா'—எடுப்பான ஹை ட்விஸ்ட் வாயில்கள், 'ரேவிகா' மற்றும் 2 x 2 ஸ்விஸ் வாயில்கள்—புதுமையும் குளுமையும் நிறைந்தவை. கனவை நினைவாக்கும் 100% பாலியெஸ்டர்—பெண்களுக்குப் பெருமகிழ்ச்சி அளிப்பவை. கவர்ச்சியிலோ ஷர்மிலாவைப் போன்றே பிரமிப்பூட்டுபவை.
100% பாலியெஸ்டர் புடவைகள்—
பாம்பே டையிங்
HT-BD 8667

உங்கள் குழந்தையை இந்தக் கோடையில் வேர்க்குரு எங்கு தாக்கும்?



வேர்க்குரு எங்கு தாக்கினாலும், அதை முறியடிக்க உபயோகியுங்கள் ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரில் மட்டுமே நிருபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது. அது மூன்று வழிகளில் செயலாற்றுகிறது.

- வியர்வையை உறிஞ்சுகிறது; சருமத் துவாரங்கள் அடைபடுவதைத் தடுக்கிறது.
- பாக்டீரியா கிருமிகள் பெருகுவதைத் தடுக்கிறது.
- சுகமும் குளுமையும் தந்து, உடனடி நிவாரணம் அளிக்கிறது.

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரைக் குளித்தவுடனும், படுக்கும் முன்பும் உடம்பின்மீது தாராளமாகத் தூவுங்கள். உடனடியாக வேர்க்குருவைத் தடுக்கத் தாய்மார்கள் நம்பும் மருந்து கலந்த வேர்க்குரு பவுடர் இது ஒன்றுதான்!



சந்தன மணத்திலும் கிடைக்கிறது.


ஜான்ஸன்ஸ்* ப்ரிக்லி ஹீட் பவுடர் மட்டுமே உடல் எரிச்சலை நிறுத்துகிறது, அரிப்பிலிருந்து நிவாரணமளிக்கிறது உடனடியாக.

Johnson & Johnson*

OBM-4316 TM

கார் ஓட்டுவது சங்கடமாயுள்ளதா?

ஃபயர்ஸ்டோன் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறது.



ஸ்டீரிங்கைப் பிடித்ததும், வீதியில் நடப்போரின் மனநிலை, போக்குவரத்துச் சட்டங்கள், இரவில் காரோட்டுவது, இன்னும் பல விஷயங்களைக் கற்றறிந்திருக்க விரும்புகிறீர்கள். அதோடு கார் நீங்கள் சொல்லுகிறபடி கேட்க, நல்ல டயர்களும் வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஃபயர்ஸ்டோன் டயர்களைப் பொருத்தி, தைரியமாய்ச் செல்லுங்கள்.

ஃபயர்ஸ்டோன் டயர்களுக்குள்ள மூன்று சிறந்த தன்மைகளை அறிந்து பாராட்டுவீர்கள்.

- சாலையை அணைத்துச் செல்லும் தன்மை—வேகத்திலும், திருப்பத்திலும், நிறுத்துவதிலும் ஆபத்தில்லாதது.
- உறுதியான ஸ்பிரிங் தன்மை—கரடுமுரடான பாதைகளில் சமாளிக்கக் கூடியது.
- தனிப்பட்ட ட்ரிப்பிள்-ஸ்ட்ரெச்சுடன் அமைத்திருப்பதால் ஃபயர்ஸ்டோன் டயர்கள் வலுவாய் இருக்கின்றன; இதனால் நீடித்த உழைப்பு.

''புது ட்ரைவர்கள் கவனிக்க, ஃபயர்ஸ்டோன் தரும் குறிப்புகள்'', நீங்கள் கேட்டு எழுதினால், விளக்கப் படங்களுடன் கூடிய சிறு புத்தகத்தை இலவசமாய் அனுப்புகிறோம். முகவரி, ஃபயர்ஸ்டோன் டயர் & ரப்பர் கம்பெனி ஆஃப் இந்தியா ப்ரைவேட் லிமிடெட், உட்ஸ் ரோட், மதராஸ் 600 002. இப் பத்திரிகையின் பெயரையும் குறிப்பிட்டு எழுதவும்.



ஃபயர்ஸ்டோன் டயர்கள்

இந்திய சாலைகள், மற்றும் போக்குவரத்து நிலைகளுக்கேற்ப இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன.

RADEUS FS-II

கல்கி

ராக்ஷஸ சித்திரை 21
மே 4 1975

★

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





மந்திரி மாணிக்கம்.....


50,000 ரூபாய்
மதிப்புள்ள பரிசுகள்
பெறுங்கள்
பாரியின் 'ஏற்றதருணம் எது' போட்டியில்
சேருங்கள்
2 முதற் பரிசுகள் — ரூ 10,000 மதிப்புள்ள நகைகள், உங்கள் விருப்பம் போல்
2 இரண்டாவது பரிசுகள் — ரூ 5,000 மதிப்புள்ள நவீன குக்கிங் ரேஞ்ச் அல்லது ரெப்ரிஜிரேட்டர்
50 ஆறுதல் பரிசுகள் — ரூ 400 மதிப்புள்ள காஞ்சீபுரம் பட்டுச்சேலைகள்
முழு விவரங் களடங்கிய நுழைவுத்தாட்கள் உங்கள் அருகாமை யிலுள்ள பாரி விற்பனை யாளரிடம் பெறுங்கள்.
Parry's
பாரியின் 'ஸ்வீட் பாங்க்' தரமான பாரி மிட்டாய்கள் அடங்கியது. கண்ணைக் கவரும் ஆறு அழகிய வண்ணங்களில், 450 கிராம் மிட்டாய்களுக்கு விலை ரூ 12 தான்!
Parry's
பாரீஸ் கன்பெக்‌ஷனரி லிமிடெட், சென்னை
முந்துங்கள்! போட்டி முடியும் நாள் ஜீன் 15, 1975
SAA/PRS/1665
Parry's

கல்கி

மலர் 34

இதழ் 40

தற்கொலைத் தந்திரம்!

ஸைகோனை நோக்கி முன்னேறி வரும் கம்யூனிஸ்டுகளைத் தடுத்து நிறுத்த, தெற்கு வியட்நாம் ராணுவம், மூச்சுத் திணறச் செய்யும் கொடிய குண்டுகளைப் பயன்படுத்தி யிருக்கிறது. இக் குண்டுகள் சுற்று வட்டாரத்தில் சூழ்நிலையில் உள்ள பிராண வாயுவை ஈர்த்துக்கொண்டு அதனால் மனித இனமே இல்லாமல் அழித்துவிடக் கூடியவை.

இந்தப் பயங்கரத்தைப் பார்க்கும்போது அப்படியாவது ஸைகோனைக் காக்கா விட்டால் என்ன? கம்யூனிஸ்டுகளிடமே கொடுத்துவிட்டுப் போய்விடலாமே என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் இந்த அளவுக்கு அசுரத்தனமான போர் முறையைத் தெற்கு வியட்நாம் மேற்கொள்ளும்படி செய்தது எது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கம்யூனிஸ நயவஞ்சகம்தான் அது! சமாதான ஒப்பந்தம், உடன்படிக்கை எல்லாம் கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை போர்த் தந்திரங்களே என்பதாக மீண்டும் ஒரு முறை இதோ சீனாவில் நிரூபணமாகியுள்ளது.

அமெரிக்கா, தம்மையும் தம் நாட்டையும் கைவிட்டு விட்டதாகக் கூறித் தெற்கு வியட்நாமிய ஜனாதிபதி தியூ ராஜினாமா செய்துள்ளார். இப்படி ஓர் அவப் பெயரை வாங்கிக் கட்டிக்கொண்டாலும் பாதகமில்லை, பொருளாதார நஷ்டத்தையும் அமெரிக்க இளைஞர்களின் உயிர் நஷ்டத்தையும் இனித் தாங்க முடியாது என்று அமெரிக்கா தீர்மானித்து விட்டதானது கம்யூனிஸ்டுகளுக்கு இந்த அளவுக்குத் துணிச்சலைத் தந்துவிட்டது.

கம்போடியாவிலும் வியட்நாமிலும் நடந்தது நாளை தென் கொரியாவிலும் நேரலாம் என்பதால் கவலை கொண்டு அந்நாட்டு அரசு ஓர் அமைச்சரை அபிப்பிராயப் பரிவர்த்தனைக்காகத் தில்லிக்கு அனுப்பியது. இதே சமயம் செஞ்சீன மந்திரி ஒருவர் பாகிஸ்தானுக்குப் போயிருக்கிறார். வடக்குக் கொரிய மந்திரி சீனாவுக்குப் பறந்திருக்கிறார்.

இந்தச் சூழ்நிலைகளை யெல்லாம் உன்னி நோக்கிச் சரியான முடிவுகளுக்குப் பாரத அரசு வரவில்லை. கம்யூனிஸ ஆக்கிரமிப்பைக் கண்டித்துத் தில்லி அரசு ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அதுதான் போகட்டும், அப்படியே வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருந்துவிடக் கூடாதா? அதுவும் இல்லை.

'சுதந்திரத்துக்காக இந்தோ-சீன மக்கள் நடத்திய மாபெரும் வீரப் போராட்டத்தின் வெற்றிகரமான முடிவு' என்று கூறி சவான் இந்தக் கம்யூனிஸ அநாகரிகத்துக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்தளித்திருக்கிறார். தர்ம நியாய சிந்தனைகள் இந்திரா அரசிடமிருந்து அடியோடு விடைபெற்றுச் சென்றுவிட்டதை உறுதிப்படுத்தி யிருக்கிறார்.


இந்தியாவின் வடக்கு எல்லையில் பல மைல் விஸ்தீரணத்துக்கு நமது பிரதேசத்தைக் கபளீகரம் பண்ணி ஏப்பம் விட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான் கம்யூனிஸ்ட் சீனப் பகைவன். அவன் துணையுடன், தூண்டுதலுடன் பக்க பலத்துடன் இந்தோ சீனாவில் நடந்திருக்கும் ஆக்கிரமிப்புக்களை வரவேற்றுப் பேசுவது ராஜதந்திரமல்ல, தற்கொலைத் தந்திரம்!

ஒரு ஜே. பி போதாது!

உத்தரப் பிரதேச அரசு நடத்தும் மாதர் பாதுகாப்பு இல்லம் மாதர்களை மானபங்கப்படுத்தும் இல்லமாக மாறியதை அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். இந்த இல்லத்தில் மூன்று பெண்மணிகள் அடைந்த அவமானத்தை அடுத்துச் சமூகத்தில் உயர் மட்டத்தில் இருக்கும் பலரைப் பற்றிய அருவருப்பான, ஆபாசமான விவரங்கள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. ஸி. பி. ஐ. விசாரணை நடக்கும் என்று உ. பி. அரசு அறிவித்துள்ளது.

இந்த அநியாயங்களை யெல்லாம் பார்த்தால் இந்த நாட்டைத் தூய்மைப்படுத்த ஒரு ஜே.பி. போதாது; ஒன்பதாயிரம் ஜே.பி.க்கள் தேவை என்று தோன்றும்.

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்


முழு நிலா விழா
நிலவே, வா, வா....
தமிழ் நாடு
வறட்சி
அதிமுக
இந்தச் செயற்கைச் சந்திரன் தேவை தானா?
திராவிட பட்டர்!

ஆரிய பட்டர்

ஆரியபட்டர் உலகைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. இந்தியாவின் முதல் செயற்கைச் சந்திரன் மிகச் சிறப்பாக இயங்கி ஒவ்வொரு பாரத மகனையும் நெஞ்சம் நிமிர்ந்து நடக்கச் செய்திருக்கிறது.

வறுமை மக்களை வாட்டும்போது ஆரிய பட்டருக்கு இவ்வளவு செலவா? அவசியம் தானு என்று கேட்பது அசட்டுத்தனம். செயற்கைச் சந்திரன்கள் நாட்டின் அறிவு வளம் செல்வ வளம் பெருகப் பேருதவி புரிய முடியும் என்று நிரூபணமாகியுள்ளது. இது விஷயத்தில் இந்தியா பின் தங்குவதற்கில்லை. ஆனால் ஒன்று. விஞ்ஞான சாதனைகளை எந்த அளவுக்குத் திறம்பட அரசு பயன்படுத்திக்கொள்கிறது என்பதில்தான் நமது முன்னேற்றம் நிர்ணயிக்கப்படும். விஞ்ஞானிகளைப் பாராட்டுவதுடன் கடமை முடியவில்லை.

முதல் ஸ்புட்னிக்கை விட ஆரியபட்டர் மிகப் பெரிது என்பதாகப் பெருமையாகப் பேசப்படுகிறது. இதில் அர்த்தமில்லை. அன்று ராக்கெட் விஞ்ஞானம் பால பருவத்தில் இருந்தது. இன்றோ பெரிய விஞ்ஞானக் கூடங்களையே விண்வெளிக்கு அனுப்பும் அளவுக்கு ராக்கெட் விஞ்ஞானம் முன்னேறியுள்ளது.

ருஷ்ய ராக்கெட்டில் ஏறி விண்வெளியை அடைந்தது நமது செயற்கைச் சந்திரன். நாமே அதனை விண்வெளிக்கு அனுப்புமளவுக்கு ராக்கெட் விஞ்ஞானம் இங்கு இன்னும் முன்னேறவில்லை. இத்தகைய சக்தி வாய்ந்த ராக்கெட்டுகள் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ராட்சத ஏவுகணைகளாகவும் பயன்படக்கூடுமாதலால் ருஷ்யா என்ன அமெரிக்கா கூட இது விஷயத்தில் நம்முடன் ஒத்துழைப்பது அரிது. அதிலும் அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றலும் நமக்கு இருப்பதாக நாம் காட்டிக் கொண்டிருப்பதால் வல்லரசுகள் தயங்கவே செய்யும்.

ஆயினும் ராக்கெட் விஞ்ஞானத்தில் நமது விஞ்ஞானிகள் முன்னேறத்தான் போகிறார்கள். இந்தியச் செயற்கைச் சந்திரனை இந்திய ராக்கெட்டே விண்வெளிக்குக் கொண்டு செல்லத்தான் போகிறது; நாமும் பார்க்கத்தான் போகிறோம்.

பல கோடிகள் அரோகரா !

அரசுடைமையான பதினாறு பாங்குகளில் நடந்துள்ள மோசடிகள் பற்றிய அறிக்கையைப் பார்த்தாவது சோஷலிஸவாதிகளின் கண் திறக்காதா என்று ஏங்குகிறோம்.

கடந்த ஆறு ஆண்டுகளுக்குள் 380 மோசடிகள் நடந்துள்ளன. இவற்றில் நஷ்டமான தொகை ரூ. 4.20 கோடி; மீட்கப்பட்ட தொகை 35 லட்சம்!

கதை இதோடு முடிந்து விடவில்லை. இவை மோசடிகள் என்றால் தகிடுதத்தங்களுக்குத் தனியே கணக்குத் தருகிறது ரிஸர்வ் பாங்க். மூன்றே ஆண்டுகளில் 426 தகிடுதத்தங்களால் ரூ. 5.28 கோடி நஷ்டம்! மீட்கப்பட்டது ரூ. 40 லட்சம்தான்!

தனியார் துறையில் இருந்தால் மோசடிகளே நடக்காதா எனலாம். இந்த அளவுக்கு நிச்சயம் இராது என்பதுடன் தனியார் துறையில் பாங்குக்கு ஏற்படும் நஷ்டம் ஒருசில பங்குதாரர்களை மட்டும்தான் பாதிக்கும். ஆனால் அரசுடைமையான பாங்கின் நஷ்டம் ஒவ்வொரு பாரதப் பிரஜையின் நஷ்டமுமாகும்.

கருணாநிதி அண்டு கோ

மீன் பிடிப்போருக்காகத் தூத்துக்குடி துறைமுகத்தினை ஆழப்படுத்துவதற்கு ஒரு நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட தாமதம் ரூ. 26 லட்சம் நஷ்டத்துக்கு வழி

ராஜாஜி சிந்தனை

ராவண லீலா !

வடக்கிலும் தெற்கிலும் நடந்த கோர யுத்தமே இராமாயணம் என்னும் வேடிக்கையைக் கண்டு அழுவதா சிரிப்பதா தெரியவில்லை. ரைடர் ஹாகார்டு என்னும் ஆங்கில ஆசிரியர் 'ஷி' என்ற ஒரு கதை எழுதினார். அதை ஓர் உண்மைச் சரித்திரமாக எண்ணி அதைக் கொண்டு ஆப்பிரிக்க தேசத்துப் பூர்விக சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தால் நகைப்பார்கள். ஆனால் அதை ஒத்ததே இராமாயண இதிகாசத்தை ஆரிய—திராவிடப் போராக்குவதும்.

இந்தப் பண்டித சிகாமணிகளில் சிலர் ராவணனை ஒரு தமிழனாகப் பாவித்து வருகிறார்கள்! அதிலும் ராமனைத் தீயவனாகவும் இராவணனை உண்மையில் நல்லவனாகவும் கருதிப் பார்க்கிறார்கள். தமிழர் இம்மாதிரி ராவணனைப் பாராட்டிப் பார்ப்பதைக் கண்டு தெலுங்கர் நகைப்பார்கள்.

வால்மீகி முனி அல்லது யார் முதலில் பாடினரோ அந்தக் கவிஞர், ஓர் அரக்கனைக் கற்பித்தார். உள்ளும் புறமும் மகா பயங்கரமாக இருந்த ஒரு பிரகிருதியைச் சிருஷ்டித்தார். தமிழர் சிலர் அந்த அரக்கனை நம் குல புருஷன் என்று வைத்துக் கொள்ள முற்படுகிறார்கள் ! கதையைச் சரித்திரமாக்கி அதனின்று பகைமை உண்டாக்கிக் கொண்டு ஒருவரையொருவர் தாக்கி இல்லாத துக்கத்தைச் சம்பாதிக்கப் பார்க்கிறோம்.

— ''பொருளற்ற சண்டைகள்'' என்ற கட்டுரையிலிருந்து

வருத்திருக்கிறது. ஒவ்வொரு நாள் தாமதத்தாலும் நாற்பதாயிரம் ரூபாய்க்கு அதிகமாக நஷ்டமாகும் என்று சம்பந்தப்பட்ட இலாக்காவில் யாருமே உணரக் காணோம் என்று அரசாங்கக் கணக்குகளைப் பரிசீலிக்கும் கமிட்டி வருத்தம் தெரிவித்திருக்கிறது.

இந்த நஷ்டம் தவிர தமிழக அரசின் அசிரத்தை, அலட்சியம் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேறு பல நஷ்டங்களையும் பட்டியல் போட்டுத் தந்திருக்கிறது மேற்படி கமிட்டி.

லஞ்ச ஊழல் என்றால் நிரூபித்துக் காட்டு. ராஜினமாச் செய்கிறேன் என்று 'கருணாநிதி அண்டு கோ' சவால் விடலாம்.

ஆனால் நிரூபிக்கப்பட்டுவிட்ட இதுபோன்ற கவனக் குறைவுகளுக்கும் அமைச்சர் குழாம் தான் பொறுப்பேற்க வேண்டும்.

சென்னையில் கலாட்டா !

சென்னை கோகலே மண்டபத்தில் இந்திய இளைஞர் சங்கம் (YMIA) சார்பில் ஸ்ரீ மோகன்தாரியாவும், ஸ்ரீ கிருஷ்ணகாந்தும் பேசினர். மோகன்தாரியா பேசுகையில் ஒரு சிலர் கூச்சல் போட்டு, செருப்பை மேடைக்கு விட்டெறிந்து ரகளை செய்தனர். கூட்டத்தினர் அவர்களைப் பிடித்துப் போலீஸாரிடம் ஒப்படைத்தனர். இப்படிக் குழப்பம் விளைவிக்க வந்தவர்கள் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள். பிரசங்கிகளும் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள். மோகன் தாரியாவும், கிருஷ்ணகாந்தும் இந்திரா அம்மையாரால் ஒதுக்கப்பட்டவர்கள். அவர்கள் ஒதுக்கப்பட்டதற்குக் காரணமே, ''அம்மையாரே! நீங்கள் மக்களுக்கு என்னவெல்லாமோ வாக்குறுதிகள் அளித்தீர்கள். அவற்றை நிறைவேற்றுங்கள். மக்கள் அமைதி இழந்து வருகின்றனர். இனியும் பொறுமையைக் கடைப்பிடிக்கமாட்டார்கள்'' என்று எச்சரிக்கை செய்ததுதான்.

இந்தச் சாதாரண எச்சரிக்கையைக்கூட இந்திரா காங்கிரஸில் உள்ளவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. குழப்பம் விளைவிக்கப் பார்க்கின்றனர். இவர்கள் ஜே.பி.யைப் பார்த்து, 'பாஸிஸ்ட்' என்று கூறுவது விந்தையாக இருக்கிறதல்லவா ?

இவரைப் பற்றி

ப. உ. சண்முகம்

ஆகஸ்ட் 15ம் தேதி பிறந்தவர் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு ப.உ.ச. ! பெங்களூர் செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் படிப்பு முடிந்ததும் அரசியல் இவரை ஈர்த்தது. 21ம் வயதில் திருமணம் நிகழ்ந்தது. ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும்—அளவான குடும்பம் ! திருவண்ணாமலை நகர சபைத் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது இவருக்கு வயது இருபத்து



மூன்றுதான்! இவரும் இவரை எதிர்த்துப் போட்டியிட்டவரும் தலா 11 வாக்குகள் பெற்றனர். திருவுளச் சீட்டுப் போட்டதில் திரு ப.உ.ச. வெற்றி பெற்றார்!

கோகலே மண்டபத்தில் மறைமலை அடிகள் தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தபோதுதான் அண்ணாவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு முதன் முதலாக இவருக்குக் கிட்டியது. பாதாள லிங்கம் திறப்பு விழாவுக்கு ராஜாஜி திருவண்ணாமலைக்கு வந்திருந்தபோது ராஜாஜி — பெரியார் சந்திப்பு நிகழ்ந்தது. சுமார் 45 நிமிட நேரம் இருவரும் உரையாடினர். அப்பொழுது திரு ப.உ.ச.வின் இல்லத்தில்தான் பெரியார் தங்கியிருந்தார். அங்கிருந்து ராஜாஜியைக் காணப் பெரியார் சென்றபோது ப.உ.ச.வும் உடன் சென்றார்.

தொழிலாளர் நலத் துறை, வருவாய்த் துறை, உணவுத் துறை முதலிய துறைகளின் அமைச்சராக இருந்துள்ள திரு ப.உ.ச. அன்பு ததும்பப் பேசுபவர். நல்ல மேடைப் பேச்சாளர். இன்று பொதுப் பணித் துறை அமைச்சர்.


சோகியால்

வடக்கே திபெத், கிழக்கே பூட்டான், மேற்கில் நேபாளம் தெற்கே மேற்கு வங்காளம் — இவற்றுக்கிடையே உள்ள 2818 சதுர மைல் பரப்புள்ள சிறிய நாடு சிக்கிம். மக்கள் தொகை (1973 கணக்குப்படி) இரண்டு லட்சத்துப் பத்தாயிரம். இவர்களுள் சுமார் 67 சதவிகிதம் இந்துக்கள், முப்பது சதவிகிதம் பௌத்தர்கள். ரயில் போக்குவரத்து, ரேடியோ நிலையங்கள் இன்னும் இந்த நாட்டுக்குள் நுழையவில்லை. மக்களின் முக்கிய தொழில் விவசாயம். இங்கு பிரசுரமாகும் நாளிதழ்கள் நான்கு. தலைநகர் காங்டாக்.




பால்டன் தொண்டுப் நாம்கியால் எனும் சோகியாலின் ஆட்சியிலிருந்த நாடு சிக்கிம். சோகியால் என்றால் மகாராஜா. பிரிட்டிஷார் இந்தியாவை ஆண்டு வந்த போது அவர் பாதுகாப்பில் இருந்து வந்தது சிக்கிம். 1950ம் ஆண்டு முதல் இந்நாட்டின் பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டு விவகாரம் ஆகியன பாரதத்தின் பொறுப்பில் உள்ளன. 1963ம் ஆண்டு அப்போது இளவரசராக இருந்த பால்டன் தொண்டுப் நாம்கியால், ஹோப் குக் எனும் அமெரிக்கப் பெண்மணியை மணந்தார். நாம்கியால் சோகியாலாக அரியணை ஏறியதும் ஹோப் குக் மகாராணி ஆனார். இவருக்கு இரு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. கடந்த ஒன்றரை வருடங்களாக ஹோப் குக் நியூயார்க் நகரிலேயே வசித்து வருகிறார். சோகியாலின் இரண்டாவது மகன் இளவரசர் வாங்சக் லண்டனில் இருக்கிறார். — 'பாணன்'

அன்றும் இன்றும்



நேற்று நிறுவப்பட்டது ஜோதி யூனிபில்ட் பம்பு



இன்றே காணமுடிந்தது இன்ப நாள் இதனை


முன்னேற்றத்தின் இரகசியம்—

ஜோதி யூனிபில்ட் பம்பு

வெற்றி மிகு ஜோடி



ஜோதி யூனிபில்ட் பம்பு



ஜோதி ஸ்டார்ட்டர்

ஆழ ஈர்ப்பு (டீப் ஸக்ஷன்) மூலம் செவ்வனே நீரிறைக்கும் திறன், அன்றாடப் பழுதுபார்ப்புத் தொல்லைக்குத் தீர்வு, மின்சாரச் செலவுகளிலே மிச்சம், நீடித்த ஆயுள்—இவை யாவும் ஜோதி யூனிபில்ட் பம்புகளிலே கிடைக்கும் முக்கிய நன்மைகள். இக் காரணத்தினால் தான் ஜோதி பம்பு காப்பியடிக்கப் படுகிறது. ஜோதி ஆராய்ச்சி நிலையத்தின் ஓயாத முயற்சிகளின் பயனாக, எப்போதுமே விவசாயிகள் இந்தப் பம்பையே கோருகின்றனர்.

ஜோதி லிமிடெட், பரோடா 390 003

quality is our creed.

everest/24/JY-tm

கிளை: எயர் லைன்ஸ் ஹோட்டல், 177/179 மவுண்ட் ரோடு, சென்னை. போன்: 85007.
வியாபாரிகள்: ராஜும் & கோ; சதி ரோடு, ஈரோடு; ராஜா டிரேடிங் கோ; அருணாசல ஆசாரித் தெரு, சேலம்; ஆட்டோமேட்டிக் பம்பு ஸ்பெஷலிஸ்ட்ஸ், 4 பாண்டி பஜார், சென்னை;
முருகன் ஆட்டோமேட்டிக்ஸ், காளியம்மன் கோயில் தெரு, உசிலம்பட்டி;
பிரீமியர் இண்டஸ்ட்ரீஸ், செம்புதாஸ் ஸ்ட்ரீட், சென்னை.

முருகப்பெருமான் — 8



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகள்

''ஸ்கந்தலோகம்'' என்று வால்மீகி ராமாயணத்திலிருந்து ஒரு வார்த்தை சொன்னேன். 'ஸ்கந்தர்' என்பதும் சுப்ரமண்யரின் பிரக்யாதி வாய்ந்த பெயர். 'ஸ்கந்த்' என்கிற தாது (root)வுக்கு 'வெளிப்படுவது' என்று அர்த்தம். மேகத்திலிருந்து மின்னல் வெளிப்படுவது போல் சிவஜோதியிலிருந்து ஆறு பொறிகளாக வெளிப்பட்டு வந்ததால் 'ஸ்கந்த' நாமம் உண்டாயிற்று. இதை விசேஷமாக வைத்தே புராணத்துக்கு ''ஸ்காந்தம்'' என்ற பெயர் வந்திருக்கிறது. தமிழில் இதைக் காஞ்சீபுரத்திலிருந்த கச்சியப்ப சிவாச்சாரியார் 'கந்த புராணம்' என்று செய்திருக்கிறார். 'ஸ்கந்தன்' தமிழில் 'கந்த'னாகிறான்.

இருந்தாலும் தமிழ் நாட்டில் மருமகனாக இருப்பவன் வட தேசத்தில் மகனாகவே—குமாரனாகவே — விசேஷிக்கப்படுகிறான். சகல ஜீவ ராசிகளும் ஆதி தம்பதியின் குழந்தைகளாயிருக்க, ''பிள்ளை என்றால் இவன்தான்'' என்று சொல்லும்படியாக முருகனுக்கு இருக்கிற மகிமை என்ன? பார்ப்போம்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஒளவைப் பாட்டி சொல்கிறாள் என்றால், அந்தத் தெய்வமே அன்னையும் பிதாவுமாகி — ஒரு பாதி அன்னை, ஒரு பாதி பிதா என்று — அர்த்தநாரீச்வரராக உட்கார்ந்திருக்கிறது. இது நமக்குப் பரம லாபம் என்று விட்டே போகிறோம். ஆனால் அப்புறம் இதனாலேயே சில குழறுபடிகள், சண்டை கூட உண்டாகின்றன. காலில் போய் விழலாம் என்றால் ஒரு கால் ஈச்வரனுடையது, மற்றது அம்பாளுடையது என்று இருக்கிறது. இப்படியிருந்தால் உடனே நம்மை அறியாமல், 'ஒப்புப் பார்க்கிறது' (comparison) உண்டாகி விடும். அது உண்டானால் அனர்த்தம்தான். எந்தக் காலிலே விழுவது என்பதே தெரியாது போகும். அர்ச்சனை செய்யப் போனால் 'இவருக்கு ஒரு தினுசு புஷ்பத்தால் அர்ச்சனை பண்ண வேண்டும், அவளுக்கு இன்னொன்றால் பண்ண வேண்டும் என்கிறார்களே; இந்தப் பக்கத்துப் பூ அந்தப் பக்கத்தில் விழுந்தால் அபசாரமாகிவிடுமோ?' என்று கலக்கமாயிருக்கிறது. 'கடாக்ஷம்' வேண்டும் என்று கேட்கிறபோதோ வலது கண்ணா, இடது கண்ணா என்று குழப்பம்.

குழப்பம் போதாதென்று சண்டையே மூட்டி விடுகிறார் ஒரு கவி. அப்பைய தீக்ஷிதரின் வம்சத்தில் பிறந்து, மதுரையில் மந்திரியாகப் பரிபாலனம் செய்த நீலகண்ட தீக்ஷிதர்தான் அவர். ''ஆனந்த ஸாகர ஸ்தவம்'' என்று மீனாக்ஷியைத் துதிக்க ஆரம்பித்தவர் தம்பதியருக்குள் கலகம் மூட்டி சந்தோஷப்படுகிறார். ''அம்மா, இதென்ன உன் பதி அக்கிரமக்காரராக இருக்கிறார்? உன் புகழை யெல்லாம் அவர் அல்லவா திருடிக் கொண்டிருக்கிறார்? காமதகனர், மன்மதனை எரித்தவர் என்று பெயர் வாங்கி விடுகிறாரே, எரித்தது நெற்றியின் நடுவில் இருக்கிற கண்ணல்லவா? அது வலது பாகம், இடது பாகம் இரண்டுக்கும் பொது. எனவே உனக்கும் அந்த நெற்றிக் கண்ணில் பாதி உண்டு. வெற்றியிலும் பாதி உனதாக இருக்க அவர் மட்டுமே பேரை அடித்துக்கொண்டு போய்விட்டாரே! போனால் போகிறது. இதிலாவது பாதி உரிமை அவருக்கு இருக்கிறது. இதைவிட அநியாயம் அவரைக் 'கால காலன்' என்பதுதான். காலனை உதைத்தது எந்தக் கால்? இடது கால் அல்லவா? அது முழுவதும், நூறு பெர்ஸென்டும் உன்னுடையதல்லவா? நீ செய்த மிருத்யு ஸம்ஹாரத்தை அவர் தமதாகத் தஸ்கரம் பண்ணி விட்டாரே!'' என்கிறார். ஜனனம் மரணம் இரண்டையும் கடக்க முறையே, காமஜயம், காலஜயம் பண்ண வேண்டுமானால் அம்பாள் அருளின்றி முடியாது என்பதை கவித்வ ஸ்வாதந்த்ரியத்தோடு, ஸ்வாதீனத்தோடு இப்படிச் சொல்கிறார்.

ஆனால் அவர் ரொம்பப் பெரியவர். சண்டை மூட்டிவிட்டதோடு அவர் நின்று விடவில்லை. எல்லாச் சண்டைகளும்—வாழ்க்கைப் போராட்டமே — தீர்ந்து போகும்படியான பரமப் பிரேமை இந்த அர்த்தநாரீச்வரருக்குள் எங்கே ஊற்றெடுக்கிறது என்பதையும் 'சிவலீலார்ணவ'த்தில் சொல்கிறார்.

பார்வதீ-பரமேச்வரர்களின் எல்லா அங்கங்களையும் பிரித்துப் பிரித்துப் பாகம் பண்ணுகிறோமே! பிரித்துச் சொல்ல முடியாமல் ஓரிடமும் இவர்களிடம் இல்லையா?

பிரிக்க முடியாமல் இருப்பது எது? அணு (Atom)தான். அதற்கு மேலே பிரித்துக் காட்ட முடியாது என்று நம்மை நிறுத்தி வைப்பது அணுதான். இப்படி அணு மாத்திரமாக ஒன்று அர்த்தநாரீச்வர ஸ்வரூபத்தில் இருந்து விட்டால் போதும், பிரச்னை தீர்ந்தது. அதை ஸ்மரித்து விடலாம். 'இவளுக்கு, அவருக்கு' என்று அதைப் பாகம் போட முடியாது. அது இருவருக்கும் சொந்தமாயிருக்கும். அதில் ஒப்புவமை, ஒருத்தரை விட்டோம், ஒருத்தருக்கு அபசாரம் செய்தோம் என்கிற தோஷங்கள் உண்டாவதற்கே இல்லை. அப்படி மனசில் கலக்கமில்லாமல் தியானிக்கும்படியாக, அம்மை அப்பரின் கூட்டு அநுக்கிரகத்தைப் பெற்றுத் தருகிற அணுமாத்திரமான அங்கம் உண்டா என்று தேடுகிறோம். இங்கேதான் கவி நமக்குச் சகாயம் பண்ண வருகிறார். (தொடரும்)

1932-ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.

ராமநவமியில் நாதோபாசனை

குண்டும் குழியுமான சாலைகள், குடிதண்ணீர் வசதிக் குறைவு, சுகாதார வசதி களின்மை போன்ற பல குறைகள் பழைய மாம்பலத்துக்கு உண்டு. ஆயினும் என்ன? அங்கே ஸ்ரீராம் சமாஜ் இருக்கிறது. மேல மாம்பலம்வாசிகள் தங்களுக்குள்ள பல குறைகளை மறந்து விடும்படி நிறைவான பணி புரிந்து வருகிறது. மிதிலாபுரி கல்யாண மண்டபம், பக்கத்தில் அசுவமேத மகா மண்டபம் இரண்டும் மேற்கு மாம்பலம் வாசிகளுக்குப் பெருமை தருவன.

செயற்கைக் குளம் வெட்டி நீர் நிரப்பி அதில் வேதமோதுவோரை நின்று வருண ஜபம் செய்யச் சொன்னார்கள் ராம் சமாஜத்தினர். மழை பொழிகிறதோ இல்லையோ, அசுவமேத மகா மண்டபத்தில் தப்பாமல் கான மழை ராமநவமி உற்சவத் தொடரில் பெய்து கொண்டிருக்கிறது. அந்த மழைகளுள் ஒன்று நேதுநூரி கச்சேரி.

கோடையை மறக்கச் செய்து அங்கே வீசிய காற்றைப் போலவே மோகனத்தில் (பவநுத) சுகமாக ஆரம்பமான ஜிலுஜிலுப்பு கச்சேரியில் கடைசி வரை நீடித்தது என்றால் கல்யாண வசந்தத்தில் தென்றலின் குளுமையை அனுபவித்தது பற்றிக் கூறவும் வேண்டுமா? 'மனமே நாதத்தில் ஆசை கொண்டு பிரும்மாநந்தத்தை அடைவாயாக' என்று தியாகையர் கூறுவதன் முழுப் பொருளையும் உணரச் செய்தார் நேதுநூரி. அதன் பிறகு கல்யாணி கர்ணாமிர்தமாய் இருக்கக் கேட்பானேன்? இரவு நீண்ட நேரமாகி விட்டதை உத்தேசித்து ராகமாலிகையின் போது ஹம்ஸா நந்தியைப் பாடகருக்குப் பிறகு தாம் வாசிக்காது தலையசைத்து விட்ட லால்குடி, ஸஹானாவில் தம்மையே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் நாத ஜாலங்களைக் கொட்டித் தீர்த்தார்.

தனியின்போது வேலூர் ராமபத்திரனும் விநாயகராமும் ஆற்றலில் ஒருவருக்கொருவர் சளைக்காத லவகுசர்கள் போல் (அசுவமேத மகா மண்டபமாயிற்றே!) சக்கைப் போடாக வாசித்து ரசிகர்களைப் பரவசத்தில் ஆழ்த்தினார்கள்.

ஆழ்வார்பேட்டை வீனஸ் காலனியில் எஸ். ஜி. ரத்னம் அய்யர் தலைமையில் நடக்கும் ஆஸ்திக சமாஜத்தின் இறையுணர்வூட்டும் பணிகள் சென்னைவாசிகளுக்குப் புதிதாக எடுத்துச் சொல்ல வேண்டியவையல்ல. அரங்கம் டெக்னிகலரில் தயாராகும் ஒரு புராணத் திரைப்படத்துக்கான காட்சி ஜோடனை போல் அழகழகான தெய்வச் சிலைகளுடன் காட்சி தருகிறது. ஸ்ரீராமநவமி கச்சேரிகள் இங்கே ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமியின் மணியான கச்சேரியுடன் தொடங்கின.

ஆரம்பத்தில் சற்று ஒத்துழைக்காதது போல் தோன்றிய சாரீரம் வசதிப்பட்ட சமயத்தில் பிலஹரியைச் சுருக்கமாகவே பாடியது ஏமாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. இந்தச் சமயத்தில் ஸ்ரீரஞ்சனி ஆலாபனையை ஆரம்பித்தாரே பார்க்கலாம்! உயர்ந்த சுருதியிலும் இழைவாக ஒத்துழைக்கும் சாரீரத்தின் நாதம் இதயத்தை யெல்லாம் நிரப்பிச் சிரத்துக்குள்ளேயே கூட ஏறி மயங்கச் செய்தது. இதன் பிறகு தோடி பிரமாதமாய் அமைந்து விட்டது என்பது சம்பிரதாயச் சொல்லாகி விடும். 'தம்புராவை அழகுடன் கையில் ஏந்தி நிர்மலமான மனத்துடனும் ஐஸ்வரத்துடனும் நியமம் தவறாமல் உன்னை பூஜை செய்பவர்களைப் பாலித்தருளும் தயாளன் நீ அல்லவா?' என்று தியாகையர் கேட்கிறாரே அந்த வரியைத் தான் கூற வேண்டும். ஆக கச்சேரி மனம் கவரக் கேட்பானேன்? யதுகுல காம்போஜி (பாஹிராம) புரியை அறிந்தவர்களை யெல்லாம் நெஞ்சம் நெகிழச் செய்திருக்கும். அவரது சிஷ்யை தானே ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமி?

நல்ல கச்சேரிக்கும் உயர்ந்த கச்சேரிக்கும் இடையில் வித்தியாசம் ரொம்ப உண்டு. ஆனால் உயர்ந்த கச்சேரிக்கும் மிக உயர்ந்த கச்சேரிக்கும் இடையில் வித்தியாசம் மிகக் குறைவு. இந்தக் குறைந்த அளவு வித்தியாசத்தைக் கச்சேரியை அமைத்துக் கொள்ளும் விதத்தால் ஈடு செய்து பெரும் புகழ் பெற வேண்டியவர் ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமி.

— வி. ஏ.




வான்மழைக்குப் பிரார்த்தனை

கான மழையால் பிரார்த்தனை
ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமி



குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்-கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லா-வற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களி லிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகிய வற்றுக்கான நுட்பகுணமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான்முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைத்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ள-தோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

சிவகாமியின் சபதம்

அமரர் **கல்கி**



மூன்றும் அத்தியாயம்

ருத்ராச்சாரியார்

காஞ்சி நகரமானது முன்னம் மகேந்திர வர்ம சக்கரவர்த்தியின் காலத்தில் இருந்தது போல் கலைமகளும் திருமகளும் குதூகலமாகக் கொலு வீற்றிருக்கும் பெருநகரமாக இப்போது விளங்கியது.

இரு புறமும் கம்பீரமான மாடமாளிகைகளை யுடைய விசாலமான வீதிகளில் எப்போது பார்த்தாலும் 'ஜே ஜே' என்று ஜனக் கூட்டமாக இருந்தது. மாடு பூட்டிய வண்டிகளும், குதிரை

பூட்டிய ரதங்களும் மனிதர் தூக்கிய சிவிகைகளும் ஒன்றையொன்று நெருக்கி வீதியையும் அடைத்தன.

ஸ்திரீகளும் புருஷர்களும் விதவிதமான வர்ணப் பட்டாடைகளும் ஆபரணங்களும் அணிந்து அங்குமிங்கும் உலாவினார்கள்.

ஆலயங்களிலே பூஜா காலத்து மணி ஓசையும் மங்கள வாத்தியங்களின் கோஷமும் இடை விடாமல் கேட்டுக் கொண்டிருந்தன.

சமஸ்கிருத கடிகைகளில் வேத மந்திரங்களின் கோஷமும், சைவத் தமிழ் மடங்களில் நாவுக்கரசரின் தெய்விகமான தேவாரப் பாசுரங்களின் கானமும் எழுந்தன.

சிற்ப மண்டபங்களில் கல்லுளியின் 'கல் கல்' ஒலியும், நடன மண்டபங்களில் பாதச் சதங்கையின் 'ஜல் ஜல்' ஒலியும் எழுந்து கலைப் பற்றுள்ளவர்களின் செவிகளுக்கு இன்பம் அளித்தன.

வீதிகளை நிறைத்திருந்த ஜனக் கூட்டத்தில் இடையிடையே கத்தி கேடயங்களைத் தரித்த போர்வீரர்கள் காணப்பட்டனர். அவர்கள் எதிர்ப்புறமாக வரும் வீரர்களைச் சந்திக்கும் போதெல்லாம் ஒருவருடைய கத்தியை ஒருவர் தாக்கி முகமன் கூறிக்கொண்டார்கள்.

இவ்வாறு வீரர்கள் சந்திக்கும் இடங்களிலெல்லாம் ஜனங்கள் கூடி, ''மாமல்லர் வாழ்க!'', ''புலிகேசி வீழ்க!'', ''காஞ்சி உயர்க!'', ''வாதாபி அழிக!'' என்ற கோஷங்களை எழுப்பினார்கள்.

கலகலப்பு நிறைந்த காஞ்சி நகரின் வீதிகளின் வழியாக மாமல்ல சக்கரவர்த்தியின் ரதம் சென்று, பிரசித்தி பெற்ற ருத்ராச்சாரியாரைத் தலைமை ஆசிரியராகக் கொண்ட சமஸ்கிருத கடிகையின் வாசலை அடைந்து நின்றது.

உள்ளே இருந்த ஆசிரியரும் மாணாக்கருமாகச் சிலர் வெளிவந்து, ''ஜய விஜயீபவ!'' என்று கோஷித்துச் சக்கரவர்த்தியை வரவேற்றார்கள். மாமல்லரும் மானவன்மனும் கடிகைக்குள்ளே பிரவேசித்தார்கள்.

அந்த நாளில் பரத கண்டத்திலேயே மிகப் பிரபலமாக விளங்கிய அந்தச் சர்வ கலாசாலையின் கட்டிடம் மிக விஸ்



தாரமாக இருந்தது. அழகான வேலைப்பாடமைந்த தூண்கள் தாங்கிய மண்டபங்களிலே ஆங்காங்கு வெவ்வேறு வகை வகுப்புக்கள் நடந்து கொண்டிருந்தன.

ருக்வேதம், யஜுர்வேதம், சாம வேதம் ஆகியவற்றை வெவ்வேறு மண்டபங்களில் தனித் தனியாக வித்தியார்த்திகள் அத்தியயனம் செய்து கொண்டிருந்தார்கள்.

வேதங்களிலும் வேதாகமங்களிலும் பூரணப் பயிற்சியுள்ள ஆசிரியர்கள்





அந்தக் காலத்தில் காஞ்சிக் கடிகையிலேதான் உண்டு என்பது தேசமெங்கும் பிரசித்தமாயிருந்தது.

இன்னும் வெவ்வேறு மண்டபங்களில் சாஸ்திர ஆராய்ச்சியும், காவிய படனமும் நடந்து கொண்டிருந்தன.

ஒரு மண்டபத்தில் வியாகரண சாஸ்திரம் படித்துக் கொண்டிருந்தார்கள். மற்றொரு மண்டபத்தில் வால்மீகி இராமாயணம் படிக்கப்பட்டது. இன்னொரு மண்டபத்தில் பகவத்கீதை பாராயணம் நடந்தது. வேறொரு மண்டபத்தில் காளிதாசனுடைய சாகுந்தல நாடகத்தை மாணவர்கள் நாடகமாக நடித்துக் கொண்டிருந்தார்கள்.

இதெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் மாமல்லவரும் மானவன்மனும் மேலே சென்றார்கள்.

கடைசியாக அவர்கள் வந்து சேர்ந்த மண்டபம் சிறிதும் சந்தடியில்லாத நிச்சப்தமான ஒரு மூலையில் இருந்தது. அந்த மண்டபத்தின் மத்தியில் போட்டிருந்த கட்டிலில், கிருஷ்ணாஜினத்தின் மீது ஒரு தொண்டு கிழவர் சாய்ந்து படுத்திருந்தார். தும்பை மலர்போல நரைத்திருந்த அவருடைய தாடி நீண்டு வளர்ந்து தொப்புள் வரையில் வந்திருந்தது. அவருடைய சடா மகுடம் வெள்ளை வெளேறென்று இலங்கியது. இந்தக் கிழவர்தான் அந்தப் புகழ்பெற்ற சம்ஸ்கிருத கடிகையின் தலைவர் ருத்ராச்சாரியார். அவர் படுத்திருந்த கட்டிலுக்கு அருகில் ஆசிரியர்கள் நாலு பேர் தரையிலே உட்கார்ந்து தைத்ரீய உபநிஷதம் பாடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மாமல்லரின் வருகையைப் பார்த்ததும் அவர்கள் பாடத்தை நிறுத்தி விட்டு எழுந்து சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்தி விட்டு அப்பால் சென்றார்கள்.

''பல்லவேந்திரா! தங்களை எழுந்து வரவேற்பதற்கும் அசக்தனாகப் போய் விட்டேன். மன்னிக்க வேணும். விஜய தசமியன்று புறப்படுகிறீர்கள் அல்லவா?'' என்று ஆச்சாரியார் கேட்டார்.

''புறப்படுவதற்கு எல்லா ஆயத்தமும் ஆகிவிட்டது. ஆனால், பாண்டிய குமாரன் இன்னும் வந்து சேரவில்லை. வராக நதிக் கரையிலேயே தங்கியிருக்கிறான். ஏதோ தேக அசௌக்கியம் நேர்ந்து விட்டதாம்!''

''பிரபு! பாண்டியன் வந்தாலும் வராவிட்டாலும் நீங்கள் விஜயதசமியன்று கிளம்பத் தவற வேண்டாம். இந்த விஜயதசமி போன்ற கிரக நட்சத்திரச் சேர்க்கை ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு தடவைதான் ஏற்படும். இராமபிரான் இலங்காபுரிக்குப் படையெடுத்துப் புறப்பட்டது இம்மாதிரி நாளிலேதான்.''

''அப்படியானால் இராமபிரானைப் போலவே நானும் வெற்றியுடன் திரும்புவேன் அல்லவா?'' என்று மாமல்லர் கேட்டார்.

''அவசியம் விஜய கோலாகலத்துடன் திரும்புவீர்கள். ஆனால், அதைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிட்டாது.''

''குருதேவா! அப்படிச் சொல்லக் கூடாது!'' என்று மாமல்லர் பரிவுடன் கூறினார்.

''அதனால் என்ன? நான் இவ்வுலகை விட்டு மேல்உலகம் போன போதிலும் இந்தக் காஞ்சியையும் கடிகையையும் என்னால் மறந்திருக்க முடியாது. மாமல்லரே! தாங்கள் வாதாபியிலிருந்து திரும்பி வரும் நாளில் நான் தங்கள் தந்தை மகேந்திர சக்கரவர்த்தியையும் அழைத்துக் கொண்டு இந்தக் கடிகைக்கு மேலே வந்து நிற்பேன். நாங்கள் இருவரும் தேவலோகத்து பாரிஜாத மலர்களைத் தூவித் தங்களை வரவேற்போம்'' என்று ருத்ராச்சாரியார் கூறியபோது, மாமல்லரின் கண்கள் கலங்கிக் கண்ணீர் கசிந்தன.

நான்காம் அத்தியாயம்

நாவுக்கரசர்

ஏகாம்பரேசுவரர் கோயில் சந்நிதியில் இருந்த சைவத் திருமடத்திலும் அன்று மிக்க கலகலப்பாக இருந்தது.

திருநாவுக்கரசர் பெருமான் சில நாட்களாக அந்த மடத்தில் எழுந்தருளியிருந்தார். அப்பெரியாரின் இசைப்

"ஸ்ரீ யோகாம்பிகை அதிஷ்டானம்"
ஸ்ரீ யோக கருமாரி அம்மன் அதிஷ்டானம்

திருவேற்காடு - டெலிபோன்: 83785 - சென்னை - 77





புதுக்கோட்டை புவனேஸ்வரி பீடாதிபதி **ஸ்ரீமத் சாந்தானந்த சரஸ்வத்யவதூத ஸ்வாமிகள்** ஸ்ரீ சக்ரபூர்ண மஹாமேருவை மேற்படி அதிஷ்டானத்துக்கு அளித்து மஹாபிரதிஷ்டை செய்தனர்.

மழை பொழிவதற்கு உலக நலனுக்கும், 3வது ஆண்டு ஸ்ரீ சதசண்டி மஹாயாகம் 15-5-75 ஆதி சங்கரர் ஜெயந்தி அன்று ஆரம்பித்து, 24-5-75 விசாக பௌர்ணமி அன்று மதியம் 12 மணிக்கு மஹாபூர்ண ஆஹுதி நடைபெறும். அன்று மாலை 6 மணிக்கு ஸ்ரீ சக்ர பூர்ண மஹாமேருவுக்கு விசேஷ நவாபரண பூஜை நடைபெறும்.

ஸ்ரீ M. பக்தவத்ஸலம் முன்னாள் முதல் அமைச்சரும், **திருமதி சௌந்திரா கைலாஸமும்** சிறப்புரை வழங்குவார்கள்

	காலை 4 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை	மாலை 3 மணி முதல் இரவு 9 மணி வரை
16-5-75	ஸ்வர்ண ஆகர்ஷண கணபதி ஹோமம்.	ஸ்ரீ பிச்சுமணி (வீணை) "மாதா மரகத ஸ்யாமா" திருமதி தங்கம் கோபாலன் குழுவினர்.
17-5-75	நவக்ரஹ ஹோமம்.	இந்து சமய மன்றம், பூந்தமல்லி பஜன், இந்து சமய மன்றம், மந்தைவெளி பஜன்
18-5-75	ஸ்ரீ புவனேஸ்வரி ஹோமம்.	இந்து சமய மன்றம், மயிலை பஜன், திருமதி கல்பகம் ஸ்வாமிநாதன் (வீணை)
19-5-75	ஸ்ரீ அன்னபூரணி ஹோமம்.	திருமதி சீதாலக்ஷ்மி நாராயணன் குழுவினர்.
20-5-75	ஸ்ரீ ஸ்கந்த ஹோமம்.	பேபி விஜயலட்சுமி (வீணை)
21-5-75	அதர்வண பத்ரகாளி ஹோமம்.	குமாரி ஹேமலதா (வீணை) (Disciple of Chittibabu)
22-5-75	ஸ்ரீ சந்தான கோபால ஹோமம்.	திருமதி கோமளவல்லி குழுவினர்.
23-5-75	ஜெயதுர்கா ஹோமம்.	அலமேலு சகோதரிகள் குழுவினர். திருமதி ராஜலக்ஷ்மி நாராயணன் குழுவினர்
24-5-75	கோ பூஜை. கஜ பூஜை. கன்னிகா பூஜை. சுவாசினி பூஜை. வடுக பூஜை. வசோத்தாரை ஸ்ரீ சத சண்டி ஹோமம் மஹாபூர்ணஆஹுதி ஸ்ரீ யோக கருமாரி அம்மனுக்கு மஹா அபிஷேகம். 64 உபசாரங்கள். மஹா தீப ஆராதனை.	சங்கீதவல்லி டி. வி. ரத்தினம் குழுவினர்.
25-5-75	ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜெயந்தி.	ஸ்ரீ காமகோடி பெரியவாள் ஆசிபெற்ற ஆதி சங்கரர் கீர்த்தனைகள் அரங்கேற்றம்.

ஒரு ஹோமத்திற்குக் கைங்கர்யம் செய்பவர் ரூ. 150/-ம் பூஜித்த ஸ்ரீ யோக கருமாரி அம்மன் வெள்ளி டாலர் வேண்டுபவர் ரூ. 15/-ம் மேற்படி விலாசத்திற்கு அனுப்பவும்.

தலைவர்: அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார்
உபதலைவர்: அம்பிகை அடிமை ஸ்ரீ N. சங்கரன், (ஸ்தாபகர்) திருவேற்காடு

ஸ்ரீ M.V. சுவாமிநாதன், B.Com., *Secretary* — ஸ்ரீ S. தியாகராஜன், B.Sc., *Jt. Secretary* — ஸ்ரீ M. விஸ்வநாதன் *Treasurer*

ஹோமக் கமிட்டி

ஸ்ரீமதி K. S. ஜானகி ஸ்வாமிநாதன் *Secretary* — ஸ்ரீ R. V. ரமணி, B.E., *Treasurer*

வாழ்க்கையில் சந்தோஷமளிக்கும் பல தருணங்கள் ஏற்படுகின்றன

தலைவலி உங்கள் சந்தோஷத்தை கெடுக்க விடாதீர்கள்



2 ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்

ASPRO
Nicholas

மைக்ரோ:பைன் ஆஸ்ப்ரோ வலியை அதிவேகமாக வெளியே இழுத்து விடுகிறது

A.G.62 TM

பாடல்களை மாணாக்கர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக நாவுக்கரசர் அப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு அருகில் அமர்ந்திருந்த ஆயனச் சிற்பியின் கண்களும் கசிவுற்றிருந்தன.

ஏகாம்பரேசுவரர் கோயிலில் உச்சிக் கால பூஜைக்குரிய மணி அடித்தது; பேரிகை முழக்கமும் கேட்டது.

மாணாக்கர்கள் பதிகம் பாடுவதை நிறுத்தி உணவு கொள்வதற்காகச் சென்றார்கள்.

நாவுக்கரசரும் ஆயனரும் மட்டும் தனித்திருந்தார்கள்.

''சிற்பியாரே! பத்து வருஷங்களுக்கு முன்னால் இதே இடத்தில் உம்முடைய புதல்வி அபிநயம் பிடித்தாள். அந்தக் காட்சி என் கண் முன்னால் இன்னமும் அப்படியே நிற்கிறது. 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்று மாணாக்கர்கள் சற்றுமுன் பாடியபோது உம் புதல்வியை எண்ணிக் கொண்டேன். என்னை அறியாமல் உடனே கண்ணீர் பெருகிவிட்டது'' என்றார்.

''அடிகளே! எனக்கும் அந்த நினைவு வந்தது; அன்றைக்கு நாங்கள் புறப்படும் போது என்னைப் பின்னால் நிறுத்தித் தாங்கள் ஓர் எச்சரிக்கை செய்தீர்கள், சுவாமி! தாங்கள் எச்சரித்தபடியே நடந்துவிட்டது.''

''ஆம், ஆயனரே! எனக்கும் அது ஞாபகம் வருகிறது. 'இப்பேர்ப்பட்ட தெய்வீகக் கலைத் திறமை பொருந்திய பெண்ணுக்கு உலக வாழ்க்கையில் கஷ்டம் ஒன்றும் வராமல் இருக்க வேண்டுமே!' என்ற கவலை ஏற்பட்டது. அதைத்தான் உம்மிடம் சொன்னேன்.''

''சுவாமி! தங்களுடைய திரு உள்ளத்தில் உதயமான எண்ணம் எவ்வளவு உண்மையாய்ப் போய்விட்டது? சிவகாமிக்கு வந்த கஷ்டம் சொற்பமானதா? கனவிலும் எண்ணாத பேரிடியாக அல்லவா என் தலையில் விழுந்து விட்டது? பச்சைக் குழந்தையாகத் தொட்டிலில் கிடந்தபோதே அவளை என்னிடம் ஒப்புவித்து விட்டு அவள் தாயார் கண்ணை மூடிவிட்டாள். அதுமுதல் பதினெட்டு வயதுவரையில் என் கண்ணின் மணியைப் போல் அவளைப் பாதுகாத்தேன். ஒரு நாளாவது நாங்கள் ஒருவரை யொருவர் பிரிந்து இருந்ததில்லை. அப்படி வளர்த்த குழந்தையைப் பிரிந்து இன்றைக்கு ஒன்பது வருஷமாயிற்று. இன்னமும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன். அடிகளே! ஒரு பாவமும் அறியாத எங்களைக் கருணைக் கடலான பெருமான் ஏன் இத்தகைய சோதனைக்கு ஆளாக்கினார்? நாங்கள் இறைவனுக்கு என்ன அபசாரம் இழைத்தோம்?'' என்று ஆயனர் கேட்டபோது அவரது கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீர் பொழிந்தது.

''ஆயனரே! வருந்த வேண்டாம். இறைவனுடைய திருவுள்ளத்தின் இரகசியங்களை மானிடர் அறிவது கடினம். அடியேனும் என் மனமறிந்து இந்தப் பூவுலகில் யாருக்கும் எந்தத் தீமையும் செய்ததில்லை. ஆயினும் இந்தச் சட உடலம் எத்தனையோ துன்பங்களை அநுபவித்தது. சிற்பியாரே! அடியேன் கண்ட உண்மையை உமக்குச் சொல்கிறேன். நாம் துன்பம் என்று நினைப்பது உண்மையில் துன்பம் அல்ல; இன்பம் என்று கருதுவது உண்மையில் இன்



பம் அல்ல. இன்ப, துன்ப உணர்ச்சியானது உலக பாசத்தினால் ஏற்படுகிறது. இந்தப் பாசத்தைத்தான் பெரியோர் மாயை என்கிறார்கள். மாயை நம்மை விட்டு அகலும்போது இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை என்பதை அறிவோம். அந்த இறைவனுடைய திருவருளாகிய பேரின்பம் ஒன்றுதான் மிஞ்சி நிற்கக் காண்போம்.''

''சுவாமி! தங்களுடைய அமுத மொழிகளில் அடங்கிய உண்மையை நான் உணர்கிறேன். ஆயினும், என்னை விட்டுப் பாசம் அகலவில்லையே? என்ன செய்வேன்?''

''பாசம் அகலுவதற்கு வழி இறைவனை இறைஞ்சி மன்றாடுவதுதான்!'' என்றார் நாவுக்கரசர்.

"நான் மன்றாடவில்லையா? மன்றாடியை எண்ணி இடைவிடாமல் மன்றாடிக்கொண்டுதானிருக்கிறேன். ஆயினும் என் மகள் மேல் உள்ள பாசம் விடவில்லையே? ஈசனைப் பிரார்த்திக்க நினைக்கும்போதெல்லாம் தூர தேசத்திலே, பகைவர்களின் கோட்டையிலே சிறையிருக்கும் என் மகளின் நினைவு தானே வருகிறது? 'இறைவா! என் மகளைக் காப்பாற்று. என் வாழ்நாள் முடிவதற்குள்ளாகச் சிவகாமியை இந்தக் கண்கள் பார்க்கும்படி கருணை செய்!' என்றுதானே வரம் கேட்கத் தோன்றுகிறது! என்ன செய்வேன்?" என்று ஆயனர் கூறி விம்மினார்.

"வேண்டாம், ஆயனரே! வருந்த வேண்டாம்!" என்று அவருக்கு ஆறுதல் கூறினார், உழவாரப் படை தரித்த



உத்தமர். மேலும், "உமது மனோரதந்தான் நிறைவேறப் போகிறதே! மாமல்ல சக்கரவர்த்தி வாதாபிப் படையெடுப்புக்குப் பெரும் படை திரட்டியிருக்கிறாரே? இறைவன் அருளால் உம் மகள் திரும்பி வந்து சேருவாள். கவலைப்பட வேண்டாம். அதுவரையில் நீர் என்னுடன் இந்த மடத்திலேயே தங்கியிருக்கலாமே? அரண்ய வீட்டில் தனியாக ஏன் இருக்க வேண்டும்?" என்றார்.

"அடிகளே! மன்னிக்க வேண்டும்.. பல்லவ சைனியத்தோடு நானும் வாதாபிக்குச் செல்கிறேன்..." என்று ஆயனர் கூறியது வாகீசருக்குப் பெரும் வியப்பை அளித்தது.

"இதென்ன ஆயனரே! போர்க்களத்தின் பயங்கரங்களைப் பார்க்க ஆசை கொண்டிருக்கிறீரா? மனிதர்களின் இரத்தம் ஆறு போல் ஓடுவதைப் பார்க்க விரும்புகிறீரா? வெட்டப்பட்டும் குத்தப்பட்டும், கால் வேறு, கை வேறு, தலை வேறாகக் கிடக்கும் உடலங்களைப் பார்க்கப் பிரியப்படுகிறீரா?" என்று பெருந்தகையார் வினவினார்.

ஆயனர் சிறிது வெட்கமடைந்தவராய், "இல்லை, அடிகளே! அதற்காகவெல்லாம் நான் போகவில்லை. என் மகளைப் பார்த்து அழைத்து வரலாமே என்ற ஆசையினால்தான் போகிறேன்" என்றார்.

இந்தச் சமயத்தில் மடத்தின் வாசற்புறத்திலிருந்து சில ஸ்திரீ, புருஷர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் நமக்கு ஏற்கனவே தெரிந்தவர்கள்தான்.

சேனாபதி பரஞ்சோதி, அவருடைய மனைவி உமையாள், நமசிவாய வைத்தியர், அவருடைய சகோதரி ஆகியவர்கள் உள்ளே வந்து நாவுக்கரசருக்கு நமஸ்கரித்தார்கள்.

எல்லோரும் உட்கார்ந்த பிறகு, நமசிவாய வைத்தியர், "சுவாமி! விடை பெற்றுப் போக வந்தேன்!" என்றார்.

"ஆகா! ஊருக்குத் திரும்பிப் போகிறீர்களா? எனக்குக்கூடத் திருவெண்காட்டு இறைவனைத் தரிசிக்க வேண்டுமென்றிருக்கிறது. மறுபடியும் சோழ நாட்டுக்கு யாத்திரை வரும்போது தங்கள் ஊருக்கு வருவேன்" என்றார் வாகீசர்.

"இல்லை, அடிகளே! நான் திருவெண்காட்டுக்குப் போகவில்லை. வடக்கே வாதாபி நகருக்குப் போகிறேன்."

"இது என்ன? காஞ்சி நகரிலே ஒருவருமே மிஞ்ச மாட்டார்கள் போலிருக்கிறதே? ஆயனர்தாம் அவர் மகளை அழைத்து வருவதற்காகப் போகிறார்; நீர் எதற்காகப் போகிறீர், வைத்தியரே?"

"வைத்தியம் செய்வதற்காகத்தான் போகிறேன், சுவாமி! சைனியத்தோடு ஒரு பெரிய வைத்தியர் படையும் போகிறது. அதன் தலைவனாக நானும் போகிறேன். சளுக்கர்கள், தர்ம யுத்தம், அதர்ம யுத்தம் என்கிற வித்தியாசம் இன்றி யுத்தம் செய்கிறவர்கள். முனையில் விஷம் ஏற்றிய வாள்களையும் வேல்களையும் உபயோகிப்பவர்கள். நம் மகேந்திர சக்கரவர்த்தியின் மீது விஷக் கத்தி பாய்ந்த செய்தி தங்களுக்குத் தெரியுமே. சக்கரவர்த்திக்குச் சிகிச்சை செய்தபோது அந்த விஷத்துக்கு மாற்றுக் கண்டுபிடித்தேன். அதன் பயனாக, யுத்தத்துக்கு நானும் வரவேண்டுமென்று பல்லவ சேனாதிபதியின் கட்டளை பிறந்தது!" என்று கூறிய நமசிவாய வைத்தியர், சேனாதிபதி பரஞ்சோதியைப் பெருமையுடன் பார்த்தார்.

''ஆ! இந்தப் பிள்ளைதான் தேசமெல்லாம் பிரசித்தி பெற்ற பல்லவ சேனாதிபதியா?'' என்று கூறித் திருநாவுக்கரசர் பரஞ்சோதியை உற்றுப் பார்த்தார். ''இவனுடைய முகத்தில் சாத்விகக் களை விளங்குகிறதே? மகோந்நதமான சிவபக்தப் பெருஞ் செல்வத்துக்கு உரியவனாகக் காணப்படுகிறானே? இவன் ஏன் இந்தக் கொலைத் தொழிலில் பிரவேசித்தான்?'' என்று வினவினார்.

இதைக் கேட்டதும் நமசிவாய வைத்தியரும் அவருடைய சகோதரியும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை புரிந்தார்கள். உமையாளும் தன் கணவனுடைய முகத்தைச் சிறிது நாணத்துடன் பார்த்துக் குறுநகை புரிந்தாள். பரஞ்சோதியின் முகத்திலும் புன்னகை தோன்றவில்லை என்று நாம் சொல்ல முடியாது.

''சுவாமி! தங்களுடைய திருமடத்தில் சேர்ந்து தமிழ்க் கல்வி கற்பதற்காகத்தான் இவனைப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் காஞ்சிக்கு அனுப்பினோம். விதியானது இவனை இந்த நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்தது. இவனோடு என்னையும் சேர்த்துக் கட்டிப் போர்க் களத்துக்கு இழுக்கிறது!'' என்றார் வைத்தியர்.

நாவுக்கரசர் பரஞ்சோதியை இன்னொரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, ''இவனையா விதி இழுத்துச் சென்றது என்கிறீர்கள்? விதியையே மாற்றி அமைக்கக் கூடிய உறுதி படைத்தவன் என்று இவன் முகக் களை சொல்லுகிறதே?'' என்றார்.

தளபதி பரஞ்சோதி அந்தக் கணமே எழுந்து திருநாவுக்கரசரின் அடி பணிந்து, ''குருதேவரே! தங்களுடைய திருவாக்கை ஆசி மொழியாகக் கொள்கிறேன்!'' என்று சொன்னார்.

பரஞ்சோதியின் தாயார் அப்போது எழுந்து நின்று வணக்கத்துடன், ''சுவாமி! முன்னொரு சமயம் தாங்கள் திருவெண்காட்டுக்கு வந்திருந்தபோது இவன் தங்களை நமஸ்கரித்தான். 'சீக்கிரம் விவாகம் ஆக வேண்டும்' என்று ஆசி கூறினீர்கள். அதன்படியே விவாகம் நடந்தது'' என்று சொல்லி நிறுத்தினாள்.

''என் வாக்குப் பலித்தது பற்றி மிகவும் சந்தோஷம் அம்மா!'' என்றார் வாகீசப் பெருமான்.

''தங்களுடைய திருவாக்கிலே எது வந்தாலும் அது பலிக்கும். கருணை கூர்ந்து இவனுக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும்படி ஆசீர்வதிக்க வேண்டும்'' என்று அந்த மூதாட்டி கூறினாள்.

திருநாவுக்கரசர் மலர்ந்த முகத்துடன் பரஞ்சோதியையும் உமையாளையும் பார்த்தார். ''கதைகளிலும் காவியங்களிலும் பிரசித்தி பெறப்போகும் உத்தமமான புதல்வன் இவர்களுக்கு உதிப்பான்!'' என்று அருள் புரிந்தார்.

(தொடரும்)



பெயரில் மங்களம் பார்வைக்கு மனோகரம்

'நாம் மங்களூர் போகிறோமா அல்லது கேரளா பக்கத்துக்குப் போகும் பஸ்ஸில் தவறி உட்கார்ந்துவிட்டோமா?' என்று ஒரு சந்தேகம் உண்டாகிவிட்டது. காரணம் வண்டி செல்லும் வழியெல்லாம் கேரள பாணியில் தென்னஞ் சோலைகளும் செழிப்பான கழனிகளும் தென்பட்டதுதான்.

கர்நாடகத்தின் மேற்குக் கடற்கரையில், கேரள மாநிலத்தை ஒட்டியிருக்கும் ஊர் மங்களூர். அதை அடைய மேற்குத்தொடர்ச்சி மலைகளைக் கடந்து போக வேண்டும்.

மங்களூர் நகரிலும்கூட வீடுகளும் வீதிகளும் சமவெளியில் அமைந்திருக்கவில்லை. மலை நாட்டில் இருப்பதுபோல் ஏற்றத்தாழ்வுடன் விளங்கின. ஆலயங்களும் கூட கேரளப் பாணியில்தான்.

பங்களூருக்கும் மங்களூருக்கும் ஓர் எழுத்து வித்தியாசமானாலும் நாகரிகத்திலும் எண்ணத்திலும், பேச்சிலும் ரொம்ப ரொம்ப வித்தியாசம். மைசூரிலிருந்து இயற்கை அரணை மலைகளால் மங்களூர் பிரிக்கப்பட்டிருக்கிறது. மங்களூர்க்காரர்கள் அதிகம் பேசுவது துளுவும் கொங்கணியும்தான். கன்னடம் மிகக் குறைவு. தென் கன்னட ராஜ்யமான மங்களூர்ப் பகுதி துளு நாடு என்றுதான் ஆதியில் வழங்கி வந்திருக்கிறது. மங்களூர்க்காரர்களோடு நெருங்கிப் பழகினால் அவர்கள் பங்களூர்க்காரர்களை அவ்வளவாக விரும்புவதில்லை என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.


புராதனமான புகழ்மிக்க சரித்திரப் பின்னணியும் மங்களூருக்கு உண்டு. ஆதியில் இந்நகருக்குக் 'கோடியால்' அல்லது 'கூடலா' என்று பெயர். துளு மொழியில் இதற்குக் 'கூடுமிடம்' என்று பொருள். மேற்குக் கடற்கரையில் புகழ்மிக்க துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்த இங்கு பாரசீகம், ஏமன், போர்த்துகல், இங்கிலாந்து இங்கிருந்தெல்லாம் வியாபாரிகள் வந்து கூடியதால் கூடுமிடம் என்று அழைக்கப்பட்டது போலும். 1342ல் இந்தியாவுக்கு வந்த இபின் படுடா என்ற ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த யாத்திரிகர் தம் குறிப்புக்களில் மங்களூர் நகரின் அழகையும், செல்வச் செழிப்பையும் பற்றிப் பாராட்டியிருக்கிறார். 1345லிருந்து 1600 வரை தென்னகத்தில் தன்னிகரில்லாமல் விளங்கிய விஜயநகர சாம்ராஜ்யத்துக்கு அரபுக் குதிரைகள் அபரிமிதமாக வந்து இறங்கியது இந்த மங்களூர்த் துறைமுகத்தில்தான்.

மதுரையை ஆண்ட பாண்டியர்கள் சாளுக்கியர்களை மங்களபுரா என்னுமிடத்தில் வெற்றி கொண்டதாக வரலாறு. இந்த மங்களபுரா என்பது மங்களூர்தான். இப்படி இதன் சரித்திரப் புகழுக்கு எத்தனையோ அடுக்கிக் கொண்டு போகலாம். அது சரி, துளுவர்களால் கூடலா என்று அழைக்கப்பட்ட இதற்கு மங்களூர் என்ற மங்களகரமான பெயர் எப்படி வந்தது ?

மாயா மச்சீந்திரா என்ற பழங்காலத் தமிழ்ப் படம் நினைவில் இருக்கிறதா? அந்த மச்சீந்திரநாத், அவரது சீடர் கோரக் நாத் இவர்களுக்குக் கோயில்களும், மடங்களும் மங்களூரில் உள்ளன. ஒன்பதாம் நூற்றாண்டில் 'மங்களி' என்ற மாதரசிக்கு யோகி மத்ஸ்யேந்திர நாத் ஞானோபதேசம் செய்திருக்கிறார். மங்களி என்ற அப்பெண் தமது ஞான குருவைக் காண வந்து கொண்டிருக்கும் போது நோய்வாய்ப்படவே இன்றைய மங்களூரை அடுத்துள்ள போலார் என்னுமிடத்தில் தங்க நேரிடுகிறது. அங்கேயே சித்தி அடைந்தும் விடுகிறாள் மங்களி. அங்கு சக்தி தேவியை நிறுவி ஒரு கோயிலையும் கட்டியிருக்கிறார்கள். இப்பகுதி மக்கள் பக்தியோடு நாடிச் செல்லும் மங்களா தேவியின் பெயராலேயே இந்த ஊருக்கும் மங்களூர் என்று பெயர் ஏற்பட்டு விட்டது.

நகர்வலம்





மங்களாதேவி கோயிலைத் தேடிப் போன போது வியப்புத்தான் காத்திருந்தது. எதிர் பார்த்தது போல உயர்ந்த கோபுரமோ மதில் சுவரோ இல்லை. ஒரு பெரிய வீட்டைப் போலத் தான் இருந்தது. ஆனால் உள்ளே தூய்மை, துப்புரவு, சாந்நித்யம், பக்தி பரவசத்துக் குரிய சூழ்நிலை இத்தனையும் கொண்டதாக விளங்கியது.

மங்களூரை அடுத்த கதிரி என்ற இடத்தில் இரண்டாம் குந்தவர்மன் ஒரு அழகான கோயிலைக் கட்டி இருக்கிறான். இங்குள்ள மூர்த்தியின் பெயர் லோகேசுவரர். பஞ்ச லோகத்தினாலான உத்ஸவ விக்ரகத்தின் அழகு சொல்லி முடியாது! இந்தக் கதிரியின் மலைப் பகுதிகளில் யோகி மடம் ஒன்றுள்ளது. விசாலமான இந்த மடத்தில் சந்நியாசிகள் வசிக்கின்றனர். பேராசிரியர் கல்கி அவர்களின் சரித்திர நாவல்களில் வரும் காளாமுகர்கள் என்ற சைவ வழிபாட்டு முறையைப் பின்பற்றும் யோகிகள்தான் இவர்கள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்குள்ள யோகிகளுக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து, யோகிகளின் மன்னராக அவருக்கு முடிசூட்டுவார்களாம். அந்தப் பழக்கம் இன்றும் இங்கு உள்ளது. இந்த மடத்துக்கும் மேலே மலைப் பாங்கான காட்டுப் பகுதிகளில் பலப் பல குகைகள் உள்ளன. ஒவ்வொரு குகையையும் ஒவ்வொருவருடைய பெயரால் அழைக்கிறார்கள். பட்டப் பகலில் வழிகாட்டியோடு ஒற்றையடிப் பாதை வழியே அந்தக் குகைகளைக் காணச் செல்



1. கதிரியிலுள்ள லோகேஸ்வரமூர்த்தி.
2. கதிரி கோயில்.
3. மங்களூர் கெமிக்கல்ஸ் அண்ட் பெர்டிலைசர்ஸ் தொழிற்சாலையில் யூரியா உரம் தயாரிக்குமிடம்.
4. 'புதிய துறைமுகத்தில் எப்போது வந்து நங்கூரமிட்டு நிற்கிறது?' என்று கேட்கிறது இந்தக் கப்பல்.



கௌசிகன்



லவே பயமாக இருக்கிறது. அவைகளில் யோகிகள் தங்கி எப்படித்தான் தவம் இருந்தார்களோ என்று நாம் எண்ணுகிறோம்.

ஆனால் குகைகள் யோகிகளுக்கு வசதியாகவே இருந்திருக்கின்றன.

உடுப்பி ஹோட்டலை நாடாத சென்னைவாசி யார்? நம் பசிக்கும் ருசிக்கும் ஏற்ற வகையில் பக்குவமான உணவு வகைகளைச் செய்து குவிப்பதில் வல்லவர்களான உடுப்பிக்காரர்களின் பிறப்பிடம் மங்களூருக்கு வெகு அருகில்தான் இருக்கிறது. உடுப்பி, கிருஷ்ணன் கோயிலுக்குப் புகழ்பெற்ற ஸ்தலம். இங்கு பல ஆலயங்களும் எட்டு மடங்களும் உள்ளன. தென் கன்னட ராஜ்யத்தில் இரண்டாவது பெரிய ஊர் உடுப்பிதான். சிறந்த கல்விக் கூடங்களும் ஆயுர்வேதக் கல்லூரியும் உடுப்பியின் சிறப்புக்கள். உடுப்பி கிருஷ்ணன் கோயிலில் ஒரு மிகப் பெரிய அன்னசாலை. ஒரு நாளைக்கு இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் இங்கு வயிறு முட்ட வகை வகையான உணவு படைக்கப்படுகிறது இலவசமாக — இன்றைக்கும்கூடத்தான். மங்களூர் என்றதும் ஜவ்வு போன்ற ஒரு வகை போண்டாவும், பஞ்சு போன்ற போளியும் நினைவுக்கு வந்து நாவில் நீர் சுரக்க வைக்கும். அது கிடக்கட்டும். மங்களூர் ஓடுகள் உலகப் பிரசித்தியாயிற்றே! மங்களூரை அடுத்துள்ள நதியோரப் பிரதேசங்களில் ஏராளமான ஓடு தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன.

பாரதத்துக்குப் பல கோடி ரூபாய்களை அந்நியச் செலாவணியாக அள்ளிக் கொட்டும் முந்திரிப் பருப்பு தொழிற்சாலைகளும் மங்களூரில்தான் அதிகம். நாம் ருசிக்கும் முந்திரியெல்லாம் கழிக்கப்பட்ட கடைசி ரகம். ஏற்றுமதி ரகத்தைப் பார்த்தால்... அடடா! குண்டு குண்டாக எத்தனை அழகாக இருக்கிறது. இந்த முந்திரிகளை நாம் சாப்பிட முடியவில்லையே என்ற ஏக்கம் எழுந்தாலும் அந்நியச் செலாவணியை எண்ணி ஆசையை அடக்கிக் கொள்ளுகிறோம்.

பீடித் தொழிலில் மன்னர்கள் தமிழ் நாட்டில் இருந்தால் மங்களூரில் பீடிச் சக்கரவர்த்திகளே இருக்கிறார்கள்! ஐந்து பிரும்மாண்டமான பீடித் தொழிற்சாலைகள் எக்கச்சக்கமாகப் பீடிகளை ஏற்றுமதி செய்கின்றன.

மங்களூரில் மாரிக் காலம் கொஞ்சம் அசௌகரியமானது என்று குறிப்பிட்டவர்கள், ''ஆனால் எத்தனை மழை பெய்தாலும் எங்கும் ஒரு பொட்டு நீர்கூடத் தங்காது'' என்றும் பெருமையாகக் கூறினார்கள்.

பனம்பூர் என்னுமிடத்தில் எல்லாப் பருவநிலைக்கும் ஏற்றதாக மங்களூர் துறைமுகத்தை விஸ்தரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. வளமான வாழ்வுக்குத் திறக்கப்படும் ஆசார வாசலாக வர்ணிக்கலாம் இதை.

சுற்றுப்புற ஜில்லாக்களில் ஏராளமான கனிஜ வளம் புதையுண்டு கிடக்கின்றன. அக்கனிவளம் நூற்று முப்பது மில்லியன் டன்கள் வரை கிடைக்கும் என்று உத்தேசமான மதிப்பீடு. இந்த இரும்புத் தாதுவைப் பூரணமாகப் பயன்படுத்த முடியவில்லை. ஏனென்றால் மங்களூர்த் துறைமுகத்துக்கு நேரடியான ரயில் தொடர்பு கிடையாது. தலையைச் சுற்றி மூக்கைத் தொட வேண்டும். திட்டமிடப்பட்டுள்ள ஹாஸன் மங்களூர் மீட்டர்கேஜ் இணைப்புப் பூர்த்தியாகும் போது போக்குவரத்துத் தேக்க நிலை அகற்றப்படும். இரும்புத் தாது அத்தனையையும் விரைவாகவும், குறைவான செலவிலும் மங்களூர்த் துறைமுகத்தின் வழியாக ஏற்றுமதி செய்யலாம்.

அறுபத்தைந்து கோடி ரூபாயில் ஒரு பிரும்மாண்டமான உரத் தொழிற்சாலையையும் உருவாக்கி வருகிறார்கள். மங்களூர் கெமிக்கல் அண்ட் ஃபெர்டிலைசர் என்ற நிறுவனமான இது, மங்களா என்ற பெயரில் யூரியாவைத் தயாரித்துக் குவிக்கப் போகிறது. **என்ஜினீயர் திரு டி. ரங்கராஜன்** அவர்கள் மங்களா உரத் தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளுக்கும் அழைத்துக் கொண்டு போய்க் காட்டினார். அவரது அன்பான விருந்தோம்பலும் உபசரணையும் மறக்க முடியாதவை. இந்தத் தொழிற்சாலை பூர்த்தியாகி உற்பத்தியைத் தொடங்கும்போது ஒரு நாளைக்கு 660 மெட்ரிக் டன்கள் அமோனியாவையும் 1030 மெட்ரிக் டன்கள் யூரியாவையும் உற்பத்தி செய்யும் திறனுடையதாக இருக்குமாம். கர்நாடகாவில் மட்டுமல்லாது அண்டை மாநிலங்களுக்கும் மங்களா பசுமைப் புரட்சிக்குப் பணியாற்ற முடியும்.

மாநில அரசு இருபது கோடி ரூபாயில் ஒரு நைலான் தொழிற்சாலையையும் மங்களூரில் ஆரம்பிக்க விருக்கிறது.

அறிவை வளர்க்கும் மகத்தான பணியிலும் மங்களூர் முன்னணியில் உள்ளது. சிறந்த கல்விக் கூடங்கள் பல மங்களூரிலும் அதை யடுத்த மணிபாலிலும் உள்ளன. கஸ்தூரிபா மெடிகல் காலேஜ், மணிபால் என்ஜினீயரிங் காலேஜ் ஆகியவை புகழ் பெற்றவையாயிற்றே! சிண்டிகேட் பாங்கியின் தலைமையகமும் மணிபாலில்தான் உள்ளது. அழகான கம்பீரமான நவீன பாணி கட்டடங்கள் மணிபாலை அழகு செய்கின்றன. மங்களூரிலேயே புராதனமானதும் புகழ்பெற்றதுமான செயிண்ட் அல்யோஷியஸ் கல்லூரி கல்விப் பணியைச் செய்து வருகிறது. இக்கல்லூரியைச் சேர்ந்த மாதாகோவிலில் பண்டைய இத்தாலிய ஓவியர்களின் அற்புதமான கைவண்ணங்களைக் காணலாம்.

மங்களூரின் முழு அழகையும் கண்டு களிக்க இட்கா ((Idgah)) என்னுமிடத்துக்குப் போக வேண்டும். இது நகரின் உயர்ந்த பகுதி.

மங்களூரின் சுற்றுவட்டாரத்தில் பல க்ஷேத்திரங்களும், சுற்றுலாக் கேந்திரங்களும் உள்ளன. மத்வாச்சாரியார் பிறந்த இடமான **காடபாடி**, ஜைனர்களின் காசி என்று அழைக்கப்படும் **மூதபத்ரி**, ஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூகாம்பிகா தேவி கோயிலில் உள்ள **கொல்லூர்**, மற்றும் **தர்மசாலா, சுப்ரமண்யா** ஆகிய ஸ்தலங்கள் மங்களூருக்கு அருகே உள்ளன. இங்கெல்லாம் யாத்திரீகர்கள் வசதியாகப் போய் வர நல்ல சாலைகளும் பஸ்களும் உள்ளன. செழிப்பான வளம் மிக்க மலைப் பிரதேசம். மங்களூர்ப் பிராந்தியத்தில் பிரயாணம் செய்வதே மகிழ்ச்சியாக, மனோகரமாக இருக்கும்.



வாடிய பயிருக்கு வான்முகில் காமராஜ்

எஸ். வி. எஸ்.

காந்திஜியும் ராஜாஜியும் மனித வாழ்வில் சத்தியமும் நல்லொழுக்கமும் நிலவ வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டனர். அவர்களுக்குப் பின் தேச நலனுக்கு அடிப்படையான தார்மீக வாழ்வை மக்கள் மனத்தில் பதிய வைப்பவர்கள் இல்லையோ என்று நினைத்து ஏங்கிய சமயம் தலைவர் காமராஜ், ''இதோ இருக்கிறேன் நான்'' என்று தமிழகத்தில் பட்டிதொட்டிக் கிராமங்களில் எல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். எனவே நாமும் தலைவர்



காமராஜ் சுற்றுப் பயணம் பற்றிய இந்தக் கட்டுரையை ராஜாஜி தொடங்கிய திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்துக்குக் காமராஜ் வந்ததிலிருந்து ஆரம்பிப்பது பொருத்தமாயிருக்கும்.

தலைவர் காமராஜ் காந்தி ஆசிரமத்தில் நிகழ்த்திய உரை ராஜாஜியே மீண்டும் வந்து, தார்மிகக் குரலை எழுப்பியது போலிருந்தது.

காமராஜரின் பெருந்தன்மை மக்களை நெக்குருகச் செய்து விட்டது. காந்திமகானின் வாரிசுதான் அவர் என்று நன்றாகப் புரிந்து கொண்டார்கள்.

அப்படி என்ன பெருந்தன்மையைக் காமராஜ் வெளியிட்டார்?


எந்த அரசியல்வாதியும் தான் செய்த தவற்றை ஒத்துக் கொண்டதில்லை. அதற்கு ஒரு விதிவிலக்கு காந்தி மகான். தாம் செய்த ஒரு சிறு தவற்றைத் தாம் ஏதோ ஹிமாலயப் பிழை செய்து விட்டதாக ஒப்புக் கொண்டார்.

அடுத்தாற் போல் தலைவர் காமராஜிடந்தான் அந்த நெஞ்சத் துணிவையும் சத்திய வேட்கையையும் காண்கிறோம். அன்று காந்தி ஆசிரமப் பொன்விழாப் பேருரையின்போது, ''சுதந்திரப் பாரத நாட்டு அரசியலில் நான் முக்கிய பங்கு வகித்தவன்தான். நானே தவறுகள் செய்திருக்கிறேன். ஆனால் இன்று அவை யெல்லாம் திருத்தப்பட வேண்டும். சத்தியம், நேர்மை, ஒழுக்கம் முதலியவற்றை மதிப்பவர்களை ஆட்சியில் இருத்த வேண்டும்'' என்று பேசினார் காமராஜ்.

காந்தி ஆசிரமத்தைச் சுலபத்தில் அடைய முடியாது. போக்குவரத்து வசதி குறைவு. ஆயினும் தலைவர் காமராஜரின் உரையைக் கேட்கச் சுமார் பதினாயிரம் பேர் குழுமியிருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் தலைவர் காமராஜரின் சொற்கள் உள்ளத்தைத் தொடுவதை யுணர்ந்தார்கள். காந்திஜி, ராஜாஜி வாழ்ந்த காலத்தை விட இன்றைக்குத் தார்மீகச் சீர்குலைவு அரசியலில் அதிகரித்துக் கொண்டே போவதைக் கண்கூடாகக் காணும் ஒவ்வொருவருக்கும் தெரியும், காமராஜ் ஒருவரால்தான் இந்த நிலையைச் சமாளித்துச் சீர்படுத்த முடியும் என்று.

காமராஜ் அவர்களின் அடுத்த கட்ட சுற்றுப்பயணம் ராஜாஜி பிறந்து பாலிய பருவத்தைக் கழித்த ஹோசூரிலிருந்து தொடங்கியது.

ஹோசூரில் கணிசமான மக்கள் தெலுங்கு பேசுபவர்கள். அதனால் முதலில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.வான ராமச்சந்திர ரெட்டியார் அவர்கள் தெலுங்கில் தலைவரை வரவேற்றுப் பேசினார். ஹோசூர்என்றும் முன்னாளைய



அக்னிபுத் தெய்வமும் அறிவுச் சுடரும் ★ சுப்பிரமணிய சிவா



காங்கிரஸ் அபிமானிகளுக்குக் காலஞ்சென்ற அப்பாவுப் பிள்ளை நினைவு வராமலிருக்காது. அவருடைய மகனான திரு மனோகரன் இன்று பஞ்சாயத்துத் தலைவர். பஞ்சாயத்துச் சபை சார்பில் திரு மனோகரன் தமிழில் வரவேற்புரை வாசித்தளித்தார்.

பிறகு காமராஜ் பேசினார். முடிவில் திரு ராமச்சந்திர ரெட்டியாரும் திரு மனோகரனும் ஒன்றுசேர்ந்து உழைத்துக் காங்கிரஸை இப் பகுதியில் பலப்படுத்த வேண்டும் என்று சொன்னார்.

உடனே கூட்டத்திலிருந்து ''இரண்டு பேரையும் 'ஒற்றுமையாக வேலை செய்வோம்' என்று உங்கள் எதிரில் சத்தியம் செய்யச் சொல்லுங்கள்'' என்று குரல் எழுந்தது. பலரும் அதே கருத்தை வெளியிட்டனர்.

இதைப் பார்த்த போது, ஓர் ஊரில் இரண்டு பெரிய மனிதர்கள் விரோதம் பாராட்டிக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டு நின்றால் ஊர் மக்களுக்கு அது எவ்வளவு வேதனையளிக்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது. திரு ராமச்சந்திர ரெட்டியாரும், திரு மனோகரனும் இருவருமே காங்கிரஸ்காரர்கள். இருவருமே உள்ளூர் நாட்டாண்மையில் — பஞ்சாயத்துத் தேர்தல் சட்டசபைத் தேர்தல் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் போட்டியிட்டதால் உள்ளூர் மக்கள் மிகவும் கசந்து போயிருந்தார்கள். அந்தக் கசப்பைத்தான் ஊர் மக்கள் அடக்கிக் கொள்ள முடியாமல் தலைவர் காமராஜ் முன்னால் வெளியிட்டார்கள். ஹோசூர் பொது மக்களின் உணர்ச்சியைப் புரிந்து கொண்ட மூத்தவரான திரு ராமச்சந்திர ரெட்டியார் அவர்கள் இளைஞரான திரு மனோகரன் கரம் பற்றித் தலைவர் காமராஜ் முன்னிலையில் ''நாங்கள் இனி ஒற்றுமையாக ஒருவருக்கொருவர்விட்டுக்கொடுத்து ஸ்தாபனக் காங்கிரசின் வெற்றிக்குப் பாடுபடுவோம்!'' என்று வாக்களித்தார். மக்கள் பலத்த கரகோஷம் செய்து இந்த நட்புடன்படிக்கையை வரவேற்றனர். ஓர் ஊருக்குப் பெரியவர்கள் வந்தால் ஊர் ஒன்றுபட்டு நல்ல சூழ்நிலை பிறக்கும் என்பதற்குத் தலைவர் காமராஜரின் ஹோசூர் விஜயம் ஓர் எடுத்துக் காட்டாக அமைந்தது!

ஹோசூர் கூட்டத்தை முடித்துக் கொண்டு தெங்கினிக்கோட்டையை அடைந்தார் காமராஜ். மணி எட்டரைக்கு மேல் இருக்கும். கூட்டம் பெருகி வழிந்தது.

அங்கு காமராஜ் பேசுகிறார்:

''பிரிட்டிஷ் ஆட்சியை மாற்றியது போல் இந்த ஆட்சியையும் மாற்ற வேண்டும்.

''பிரிட்டிஷ் ஆட்சியை விரட்டத் தடியடி படவேண்டியிருந்தது. சிறைவாசம் செய்ய வேண்டியிருந்தது. துப்பாக்கி குண்டுகளை ஏற்க வேண்டியிருந்தது. தூக்குமேடை ஏற வேண்டியிருந்தது. இன்னும் எவ்வளவோ இன்னல்களை அநுபவிக்க வேண்டியிருந்தது. உங்களை இப்போது அதையெல்லாம் அநுபவிக்கச் சொல்லவில்லை. உங்கள் வோட்டை எங்களுக்குக் கொடுங்கள் போதும்.

''தி. மு. க., அ. தி. மு. க.வின் பசப்பு வார்த்தைகளுக்கு ஏமாந்து போகாதீர்கள். காங்கிரஸ் பயிரைக் காப்பாற்ற, தி. மு. க., அ. தி. மு. க. களைகளைப் பிடுங்கி எறியுங்கள். ஏமாந்து விடாதீர்கள்!''

முன்னாலிருந்த சிறுவர்கள் ''நாங்கள் ஏமாற மாட்டோம்'' என்றார்கள்.

''சிறுவர்களாகிய நீங்கள் ஏமாற மாட்டீர்கள் என்று எனக்கு நிச்சயம் தெரியும். பெரியவர்கள்தான் ஏமாந்து போகிறார்கள். நீங்கள்தான் அவர்களை ஏமாந்து போக விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!'' என்றார் காமராஜ்.

மறுநாள் காலை மேகலசின்னம்பள்ளிஎன்ற கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் ரூ. 28,000 செலவில் அமைந்த சுதந்திர வெள்ளி விழா ஞாபகார்த்தக் கட்டிடத்தைத் தலைவர் காமராஜ் திறந்து வைத்து, குத்துவிளக்கு ஏற்றினார். குத்துவிளக்கு ஏற்றி வைத்து விட்டு நிமிர்கையில் சுவரில் பதிக்கப்பட்ட கரும் பலகையில் மிக அழகாகப் பின்வரும் வாக்கியம் வண்ணச் சாக்கட்டியால் எழுதப் பட்டிருந்தது. அவர் கண்களில் பட்டது.

''காந்திஜி பள்ளியில் படித்தவன் நான்''
— காமராஜ்

இதைப் பார்த்ததும் பொருள் பொதிந்த புன்னகை ஒன்று திரு காமராஜ் முகத்தில் தவழ்ந்தது.

இந்த வாக்கியத்தைப் படித்ததும் காமராஜரின் வாழ்க்கை முழுதுமே என் மனத்திரையில் சில கணங்கள் ஓடி மறைந்தன. பலப்பல பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டங்களுக்கு மேல் பட்டங்கள் பெற்றவர்கள் எல்லாம் காமராஜரின் யோசனைகளைக் கேட்கும்படியான உயர் பதவியில் காமராஜர் எத்தனை ஆண்டு காலம் இருந்தார்! இதையெல்லாம் அவர் பெற்றது அவர் கூறுகிறபடி காந்திஜி பள்ளியில் படித்ததலன்றோ என்று எண்ணி வியந்தேன். அன்று அப்பள்ளிக்கூடத்தில் திரு காமராஜ் நிகழ்த்திய உரையில் அவர் கூறிய ஒரு கருத்து, அவர் படித்த காந்தி பள்ளியின் சிறப்பை வெகு நன்றாக எடுத்துக் காட்டியது.

பொதுவாக நம் நாட்டில் படித்தவர்களிடையே அரசியலைப் பற்றி அலட்சியமும், அருவருப்பும் நிலவுவதைக் காண்கிறோம். இதற்கு, எதையும் வேடிக்கையாகவும் குதர்க்கமாகவும் பேசும் டாக்டர் ஜான்ஸனின் ஒரு கருத்தை மேற்கோளாகவும் காட்டுவார்கள். ''அயோக்கியனின் கடைசி புகலிடம் அரசியல்'' என்று அவர் சொன்னதை நமக்குத் திரும்பப் படிப்பார்கள்.

இப்படிப் பேசுபவர்கள், காந்தி மகான், ராஜாஜி, திலகர், லஜபத்ராய், சித்தரஞ்சன் தாஸ் — போன்ற மகான்கள் எல்லாம் அரசியலில் ஈடுபட்டு எவ்வளவு மகத்தான தேசப்பணி செய்திருக்கிறார்கள் என்பதை நினைப்பதில்லை. இப்படிப் பேசுவதால் இத்தகைய மகான்களுக்கு எத்தகைய இழுக்கும் அபசாரமும் செய்கிறோம் என்பதை நினைத்தும் பார்ப்பதில்லை.

அதுமட்டுமல்ல. சுதந்திர பாரதத்தில், சிந்திக்கும் திறன் படைத்த படித்த மக்கள், பாமர மக்களுக்கு நல்வழி காட்டப் போதிய

கண்ணாடியைக் கல்லால் வெகு இலகுவில் தூளாக்கி விடலாம். ஆனால் உள்ளத்தைச் சுக்கல் நூறாக உடைத்தெறியக் கல்லினும் மென்மையான சொல் போதுமே!
—அலெக்சாண்டர் போப் — அனுப்பியவர்: ''அம்மு''

அளவில் அரசியலில் பங்கு கொள்ளாததால் தானே நம் ஜனநாயகம் நிலை தடுமாறுகிறது.

இதைத்தான் அன்று, மேகலை சின்னம் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழாப் பேச்சின் இடையில் சர்வ சாதாரணமாகக் காமராஜர் கூறினார் :

''அரசியல் வெறுக்கக் கூடிய விஷயமல்ல. அரசியல் மிக அவசியம். உடலிருந்து உயிரில்லையானால் பிணம் தானே!'' எவ்வளவு உணர்ச்சி வேகத்தோடு சிந்தனைக் குழப்பமின்றி உறுதியான மொழிகளில் சொல்லி விட்டார் காமராஜர்! இது அநுபவப் பள்ளியில் பயின்ற பாடம், காந்திஜி பள்ளியில் கற்ற பாடம் என்பது மிகத் தெளிவாக நமக்குப் புரிகிறதல்லவா?

விடுதலைப் போர் காந்திமகான் தலைமையில் நடந்தபோது, அதற்கு உறுதுணையாக மேகலசின்னம் பள்ளியில் நின்றவர் திரு முனுசாமி செட்டியார். பெரிய செல்வந்தர். தமது செல்வமெல்லாம் நாட்டு விடுதலைப் பணிக்கே செலவிட்டவர். ''அத்தகைய தியாக வள்ளலான முனுசாமி செட்டியார் ஊருக்கு வந்ததில் பெருமைப்படுகிறேன். முனுசாமி செட்டியாரின் இந்த ஊர் தியாக பூமி'' என்று திரு காமராஜர் உள்ளம் நெகிழக் குறிப்பிட்டார்.

இன்று அவர் குமாரர் திரு சோமசுந்தரம் அடக்கமாகவும் மிகச் சீரிய முறையிலும் பொதுப்பணி செய்து வருகிறார். பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறார். அவர் முயற்சியின் காரணமாகவே அரசாங்கத்திடமிருந்து, சுதந்திர வெள்ளிவிழா ஞாபகார்த்தக் கட்டடத்துக்கான தொகையைப் பள்ளிக் கூடத்துக்குப் பெற முடிந்தது. அவருடைய பொதுப்பணியைத் திரு காமராஜ் பாராட்டியதோடல்லாமல், உள்ளூர் மக்களையும் வாழ்த்தச் சொன்னார். ''அரசாங்கம் பட்டம் பதவி கொடுத்துக் கௌரவிக்குமுன் நாமே மனமார நல்லவர்களைப் போற்ற வேண்டும். அப்போதுதான் தன்னலம் கருதாத பொதுப் பணியாளர்கள் தோன்றுவார்கள்'' என்றார்.

இதே வைபவத்தில் ஸ்தாபன காங்கிரஸ் செயலாளர் திரு குமரி அனந்தன் ''சத்ரபதி சிவாஜி'' திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். அவருக்குப் பிறகு பேசிய தலைவர் காமராஜ், ''நான் ஆசிரியர்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். சிவாஜியின் தாயார், சிவாஜிக்கு ராமாயண பாரதக் கதைகளைக் கூறி நாட்டுப்பற்றும் வீர உணர்ச்சியும் உண்டாக்கினார். அதே போல் உங்களிடம் வரும் குழந்தைகளுக்கு காந்திமகானின் வாழ்க்கையையும் தத்துவத்தையும் எடுத்துக் கூற வேண்டும். அவர்களை உண்மைக்கும் நேர்மைக்கும் தன்னலமற்ற வாழ்க்கை நடத்துவதற்கும் பயிற்ற வேண்டும். அதில் ஆசையுண்டாக்க வேண்டும். இன்று நம் நாட்டில் ஏற்பட்டுள்ள துன்பங்கள் துயரங்களுக்கெல்லாம் காரணம் பெரியவர்கள் காந்திஜியை மறந்ததுதான்!'' என்றார்.

அன்று மாலைபெண்ணாகரத்தில் பேசினார். எங்கிருந்தோ பதினாயிரம் பேருக்கு மேல் அங்கு குழுமியிருந்தார்கள். வழியில் பாப்

காஞ்சியில் அதிருத்ரம்

மக்கள் நலனை முன்னிட்டு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அநுக்கிரகத்துடன் மே மாதம் 5ந் தேதி முதல் ஆதி சங்கரரின் பிறந்த தினமான 16ந் தேதி வரை 12 நாட்கள் அதிருத்ரம், சஹஸ்ர சண்டி, சஹஸ்ர போஜனம், மற்றும் சாந்தி சூக்தங்கள் பாராயண ஹோமங்கள் காஞ்சிபுரத்தில் காமாக்ஷி அம்மன் பிராகாரத்தில் நடைபெறவிருக்கின்றன.

இதற்குக் கங்கையிலிருந்து குமரி வரை சகல தீர்த்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. சங்கர ஜயந்தி அன்று ஆதி சங்கரருக்கும் காமாக்ஷி அம்மனுக்கும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கும் அபிஷேகங்கள் செய்விக்கப்படும். பிறகு பக்தர்களுக்கு அபிஷேக தீர்த்தம் வழங்கப்படும்.

இந்த நற்பணிக்குப் பொருளுதவி செய்கிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்:

மானேஜர், ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம், காஞ்சிபுரம், தமிழ்நாடு.

பாரப்பட்டி என்ற கிராமம் உள்ளது. தேச பக்த பரம்பரையில் வந்தவர்களுக்குப் புனித க்ஷேத்திரம். ஏனெனில் தேசபக்தர் சுப்பிரமணியசிவா தமது இறுதி நாட்களைக் கழித்துச் சமாதியடைந்த ஊர் பாப்பாரப்பட்டி. அந்த ஊருக்கு அண்மையிலுள்ள பெண்ணாகரத்தில் தலைவர் திரு காமராஜ் பேசிய போது அவர் சிந்தனை முழுவதையும் சிவாவே ஆக்கிரமித்துக் கொண்டாரோ என்று நினைக்கும்படி இருந்தது.

தேசபக்தர் சிவா பிறந்தது மதுரையில். அரசியல் வாழ்க்கையைத் திருநெல்வேலியில் தொடங்கினார். தேசம் முழுதும் சென்று விடுதலை வேட்கையை மக்களிடை பரப்பினார். கடைசியில் பாப்பாரப்பட்டியில் தங்கினார். இங்கு பாரத மாதாவுக்குக் கோயில் எழுப்ப வேண்டும் என்று பேராவல் கொண்டார். அதற்காகக் கல்கத்தாவிலிருந்து தேசபந்து சித்தரஞ்சன் தாஸை வரவழைத்து அடிக்கல் நாட்டச் செய்தார். ஆம், 1903-ல் தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் இதே பாப்பாரப்பட்டிக்கு வந்திருக்கிறார். இந்தப் பாப்பாரப்பட்டியில் சிவா சமாதியிருக்கிறது.

''அவர் நாட்டு விடுதலைக்காக அரும்பாடு பட்டார். மக்களின் சுதந்திர வாழ்க்கைக்காகப் பாடுபட்டார்.

''ஆனால் இன்று தி.மு.க ஆட்சியோ கட்சிக்காரர்களின் சுயநலத்துக்கு வழி தேடுவதாகி விட்டது!'' இப்படி பேசி வந்த காமராஜ், ''உங்கள் ஊரில் கால் வட்டம், அரை வட்டம் இருக்கிறார்கள் அல்லவா?'' என்று கேட்டார், பொதுமக்களை நோக்கி.

''ஓ! இருக்கிறார்கள். இங்கு அரை வட்டம்!'' என்று மக்களிடமிருந்து பதில் வந்தது!

(தொடரும்)

40. வட்டத் தொட்டி

தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் — திருக்குறள்

கல்கியின் மூன்றாவது படைப்பிலக்கிய நூல், ''கணையாழியின் கனவு''. அதற்கான விரிவான முகவுரையில் டி. கே. சி., தமிழில் வசன இலக்கியம் தோன்றி வளர்ந்த வரலாற்றை, முதல் மூன்று பகுதிகளில் சொல்லியிருக்கிறார். நாலாவது பகுதியில், அந்தப் புத்தகம் தோன்றிய வரலாற்றையே தெரிவித்திருக்கிறார் :



பொன்னியின் புதல்வர்

சுந்தா

சென்ற இரண்டு வருஷமாகத் திருநெல்வேலியில் 'வட்டத் தொட்டி' என்ற பெயரோடு இருபது முப்பது நண்பர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடி, தமிழ் சம்பந்தமாய்ப் பேசிப் பொழுது போக்குவது உண்டு. கூடுகிறவர்களுக்கு வயசு பதினைந்து முதல் எண்பது வரையும் இருக்கும். ஆனால், எல்லாருக்கும் ஒரேவிதமான மோகம் தமிழிடத்தில்; வெறி என்று சொன்னாலும் குற்றம் இல்லை. இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ரசிக மணியான இளைஞர்* ஒருவருடைய கல்யாணத்துக்குப் போவதற்காகப் பஸ் ஒன்றைத் தீர்மானித்து எல்லாருமாக ஏறிச் சென்றோம். போகிற வழியில் புஸ்தக டிப்போ ஒன்றின் வாசலில் பஸ் நின்றது. எல்லாரும் வண்டியை விட்டு இறங்கி டிப்போவுக்குள் புகுந்தோம். கல்யாணப் பரிசுக்காகப் புத்தகங்களை அங்குமிங்குமாய்ப் போய்த் தேடினோம்.



கணையாழியின் கனவு-சம்பத் நிய பதிப்புக்குத் திரு கோபுலு வின் மேலட்டைச் சித்திரம்.

திருப்திகரமான புத்தகம் ஒன்றும் நண்பர்களுக்கு அகப்படவில்லை. எடுத்த புஸ்தகமெல்லாம் இங்கிலீஷ் புஸ்தகமாகவே இருந்தது. எங்கே திருப்தி வரும்? பரிசு கொடுப்பதற்கான புஸ்தகம் தமிழில் இல்லையா என்று எல்லாரும் ஒரே புகாராய்ச் சொன்னார்கள். சரி, இங்கிலீஷ் கதைக் கொத்துப் புஸ்தகம் ஒன்றை இப்போது வாங்கிச் சமாளித்துக் கொள்ளுவோம்; கல்யாண மாப்பிள்ளை — பெண்கள் படித்து அனுபவிக்கும்படியான, பரிசுக்காகும்படியான கதைக்கொத்து ஒன்று தமிழுக்கு வேண்டும்; எப்படியும் 'கல்கி'யைக் கொண்டு அவர் எழுதிய கதைகளைத் திரட்டி, அழகான முறையில் புஸ்தகம் வெளியிடும்படி செய்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்துவிட்டார்கள். ஆசிரியரைப் பல தடவையும் நெருக்கி நெருக்கித் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வந்தோம்.

அந்தப் புஸ்தகம் 1937 இறுதியில் வெளி வந்தது. அதற்குக் காரணமாய் இருந்த கல்யாணம் அந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்தது. நடந்த ஊர், சிறப்பான இலக்கியத் தொடர்புடைய பெருங்குளம் — மாதவையாவும், அவருடைய ''பத்மாவதி சரித்திரம்'' நாயகியும் பிறந்து வளர்ந்த ஊர். பெருங்குளம் என்பது தான், அந்த நாவலில், நேர்மாறாகச் சிறுகுளம் என்று மாறியிருக்கிறது.

கல்யாண முகூர்த்தம் முடிந்து விருந்துண்டபின் வட்டத் தொட்டி அன்பர்கள், மாதவையா பிறந்த வீட்டைப் பார்க்கச் சென்றார்கள். அப்போது டி. கே. சி., தமது இலக்கிய நண்பர் அப்புஸ்வாமி அய்யர், மாதவையாவுடைய தமையனாரின் குமாரர் என்ற விவரத்தைத் தெரிவித்தார். அத்துடன், ''மயிலாப்பூரிலே அவுக வீட்டிலேதான் நம்ம கல்கியைக் கண்டு சிநேகம் செஞ்சுகிட்டேன்'' என்றும் சொன்னார். ''கல்கி ஏன் இன்னும் நாவல் ஏதும் எழுதவில்லை?'' என்று ஒருவர் கேட்டார்.

(* திரு டி. கே. சி. குறிப்பிடும் இந்த 'இளைஞர்' இக்கட்டுரைத் தொடரை இன்று எழுதிவரும் திரு 'சுந்தா' அவர்கள்தாம். - ஆசிரியர்)



திருப்புகழ் மணி



பாலா



அ. சி. ரா.



பி. ஸ்ரீ.,



கூ



மகாராஜன்



''எழுதி இருக்காக, சீக்கி ரமே வரும் பாருங்க'' என்றார் ரசிகமணி.

அவர் சொன்னபடியே அந்த வருடம் ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்திலிருந்து கல்கியின் நாவல் — கள்வனின் காதலி — ஆனந்த விகடனில் தொடராய் வந்தது. வட்டத் தொட்டி ரசிகர்களில் பெரும்பாலோர் அதைத் தொடர்ந்து படித்து, அதன் செம்மையான நாவல் வடிவம், சீரான கதைக் கோப்பு, தெளிவான குணச் சித்திரிப்பு, நேர்த்தியான நடை முதலிய வற்றை மெச்சிப் பேசிக் கொண் டார்கள். அதற்கு முன் வேறெந் தத் தமிழ் நாவலிலும் அதன ளவு நயங்கள் பொருந்தி இருக்க வில்லை என்பது அவர்களுடைய பொதுவான கருத்து...

வட்டத்தொட்டி என்பது, திருநெல்வேலி வண்ணார்ப் பேட்டையில், டி. கே. சிதம்பர நாதமுதலியார் வசித்த சொந்த வீட்டின் விசாலமான கூடத்தில் அமைந்த வட்ட வடிவ முற்றம். அந்த முற்றத்தில் வட்டமாய்ப் போட்டுள்ள பிரம்பு நாற்காலி களில், டி. கே. சி.யும் அவரு டைய இலக்கிய நண்பர்களும், சீடர்களும் அமர்ந்து உரையாடு வார்கள். வட்டத்தொட்டி என் பது நாளாவட்டத்தில், அந்த இடத்துக்கு மட்டுமின்றி, அதில் அளவளாவிய அன்பர்களின் சங்கத்தையும் வனைத்து வழங்கலாயிற்று. 1935லிருந்து சுமார் ஐந் தாண்டு காலம் அந்தச் சங்கம் இயங்கி, தமிழ் இலக்கியம், கலைகள் ஆகியவற் றின் வளர்ச்சியிலும்; நம் வர லாற்று நாயகரின் வாழ்க்கையி லும், வெவ்வேறு வகையில் பங்குகொண்டது.

அந்த வட்டத்தொட்டிக்கு அவ்வப்போது வந்து போனவர் களிலும், அதன் நிலையான உறுப்பினர்களிலும், கல்கி யுடன் ஏற்கனவே சம்பந்தப் பட்டவர்களும் உண்டு; அதன் மூலமாகவே அவருடன் தொடர்பு கொண்டவர்களும் உண்டு.

கல்கியின் சரித்திர நாவல் களுக்குப் பயன்பட்ட பண்டை யத் தமிழ் நூல்களைப் பதிப் பித்து அளித்த தமிழ்த் தாத்தா சாமிநாதையர், எண்பது ஆண்டு தாண்டிய பருவத்தில், கைத்தாங்கலாக அந்தத் தமிழ்த் தொட்டியில் இறங்கி அமர்ந்து, எளிமையும், இனிமையும், அருமையும் தவழப் பேசிஇருக் கிறார்.



தீபன்



மகாபூஷணம்



மாறன்



பாஸ்கரத் தொண்டைமான்



சோமு

அவருக்குச் சற்றே இளையவரும், கம்பனின் கவிச் சுவையைச் ''செந்தமிழ்'' பத்திரிகையின் மூலம் முதன் முதலாகக் கல்கிக்கு ஊட்டியவருமான வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் வாலிப மிடுக்குடன் அந்தத் தொட்டியில் வீற்றிருந்து, தமது அகவிகை வெண்பாவைப் பாடிக் காட்டியிருக்கிறார்.

'' குமரி முனையிலிருந்து காற்றலைகளிலே களி நடனம் புரிந்து வந்த இனிய கவிதைக் குரலோசை'' எழுப்பியவர் எனக் கல்கி வர்ணித்த தேசிகவிநாயகம் பிள்ளை, அந்த ரசிகர் வட்டத்தில், தமது பாமணத்தைப் பரப்பி இருக்கிறார்.

''வரும் பொருள் உரைக்கும் வல்லமை கொண்ட இராஜ தந்திர மேதை'' —இவ்வாறு கல்கி போற்றிய ராஜாஜி, அந்த ரசிகமணித் தொட்டியில் அரசியல் சந்தடியை மறந்து இலக்கியத்தின் அமைதியை அனுபவித்திருக்கிறார்.

''அன்பும் ஆர்வமும், பக்தியும் பரவசமும், தமிழும் தயாளமும், இசையும் தாளமும் ஓர் உருவெடுத்தாற் போன்ற பெரியார்.'' கல்கியின் இவ்விதப் புகழ் மொழிக்குப் பாத்திரரான டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், அந்த வட்டத் தடாகம் நிரம்பத் திருப்புகழைப் பொழிந்திருக்கிறார்.

இகழ்வாய்க் கல்கி கருதிய ஒன்றை, தெய்வமாக் கலை என அவர் உணரும்படி செய்து, அந்த உணர்ச்சியினால் சிவகாமி என்ற அமரக் கதைச் செல்வியைக் கற்பனை செய்யக் காரணமாயிருந்த பாலசரஸ்வதி, அந்த வட்ட அரங்கிலே சதங்கை ஒலிக்க ஜதிக் கோலம் இழைத்திருக்கிறார்; தாயார் ஜயம்மாளின் நவரச இசைச்சொற்கள் ஒவ்வொன்றுக்கும் நவ நவ நாடகங்களை அபிநயித்துக் காட்டி யிருக்கிறார்.

பாலசரஸ்வதியின் கலைச் சிறப்பை முதன் முதலாகச் சென்னையில் கல்கி கண்ட போது, உடனிருந்து அக்கலையின் நுட்பங்களை விளக்கிக் கூறினார் ஒரு கல்லூரி ஆசிரியர். அதே ஆங்கிலப் பேராசிரியரை முதன் முதலாகக் கல்கி, தமிழன்பர் மகாநாட்டில் சந்தித்த போது, சில ஆங்கிலக் கவிதைகளைச் சொல்லச் செய்து, ''பேஷ், பேஷ்'' என்று ரசித்தார். அதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, ஜவாஹர்லால் மணி விழா மலருக்கென ''மோகினித் தீவு'' என்ற கதையைக் கல்கி எழுதிய போது, அதை ஆங்கிலத்தில் ஆக்கித் தரும்படி அவரைக் கேட்டுக் கொண்டார். அந்தப் பேராசிரியர், அ. சீநிவாசராகவன் வட்டத் தொட்டிக்கு மதிப்பூட்டியவர்களில் ஒருவர்.

இவருடன் வீரராகவபுரத்திலிருந்து வட்டத்தொட்டிக் கூட்டங்களுக்கு அடிக்கடி வருபவர், வழக்குரைஞர் மகரபூஷணம். சென்னையில் சட்டக் கல்லூரி மாணவராய் இருந்த போதே கல்கியைத் தெரிந்து கொண்டு அவருடன் நெருங்கிப் பழகியவர்; கல்கியின் தொடக்கக் கால எழுத்துக்களைக் கொண்டே, அவருடைய வருங்காலச் சாதனைகளின் சிறப்பைக் கணித்தவர்.

இவர், புகழ் மிக்க பி.ஸ்ரீ. ஆச்சாரியாரின் இளைய சகோதரர். தம்பியின் மூலமாகத்தான் தாம் கல்கியின் நண்பரானதாக, ''நான் அறிந்த தமிழ் மணிகள்'' என்ற கட்டுரைக் கோவையில் பி. ஸ்ரீ. சொல்லி யிருக்கிறார். கம்பன், ஆழ்வார்கள், நாயன்மார்கள், பாரதியார் முதலியோரின் கவிச் செல்வங்கள் பற்றிய இவருடைய நெடிய கட்டுரைத் தொடர்களை, தமது பத்திரிகைகளில் கல்கி வெளியிட்டு, அவருக்குப் பெருமை அளித்துத் தாமும் பெருமை அடைந்தார். அத்துடன், தமிழ் இலக்கிய சம்பத்தின் அருமை பெருமைகளை லட்சக்கணக்கான மக்கள் உணரச் செய்தார்.

மற்றொரு நல்லறிஞர், ஏ. வி. சுப்பிரமணிய அய்யர். முதன் முதலாக நூல் ஒன்றில் (தமிழ் இலக்கியம்—தற்காலம்) கல்கியின் எழுத்துப் பணியை மதிப்பிட்டவர் இவர்.

பாஸ்கரத் தொண்டைமான் என்ற வண்ணப் பெயர் கொண்ட நற்கலைப் பித்தர், வட்டத் தொட்டியில் ''ரசிகமணியின் ரசிகர்'' என்ற பட்டம் பெற்றவர். நில வரி இலாகாவின் அடித்தளத்திலிருந்து கலெக்டர் பதவி வரை உயர்ந்த தொண்டைமான், அவருடைய குமாரி ராஜேசுவரி நடராஜன் எழுதியிருப்பது போல், ''எங்கெல்லாம் மாற்றலாகிச் சென்றாரோ அங்கெல்லாம் பொதிகைத் தென்றலும் பொருனைத் தமிழும் சென்றன; அவற்றைத் தொடர்ந்து ரசிகமணி டி.கே.சி. யும் அவருடைய வட்டத் தொட்டி அங்கத்தினர்களுமே சென்றார்கள்.''

சிற்பத்தையும் கவிதையையும் இணைத்துத் தொண்டைமான் வரைந்த கட்டுரைகளைத் தமது சிறப்பு மலர்களில் கல்கி வெளியிட்டு, அவரிடமும் அந்தக் கலைகளிடமும் மக்கள் ஆர்வம் கொள்ளச் செய்தார். 1953ல், தஞ்சைக் கலைக் கண் காட்சியை அமைப்பதில் பெரும் பங்கு கொண்டார் தொண்டை



என் நினைவுகளில் சதா சிங்காரமிடுகிறாள் அவள் - ஆனால்
அவள் நினைவுகளில் அவன்தான் சிங்காரமிடுகிறான் நான் இல்லை -- அந்த
அவனோ வேறொருத்திக்காகக் காத்து நிற்கிறான் -- என்னுடையவளுக்காக இல்லை!
எனக்காக வேறொரு பெண் வேறு வாடி நிற்கிறாள். ஐயோ! கடவுளே!
என்ன சோதனை! —ஜான் பர்ரோ (ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது)



சிந்தை கவரும்
இந்தியப் பிரிண்டுகள்
முந்தைய உலகின்
மோகனச் சாயல்
கட்டழகு மேனியைத்
தவழும் உறவு
கவர்ச்சி நிறைந்த
டெரிகோஸா
கட்டாவ்
டெரிகோஸா சேலைகள்
'டெரீன்'



விண்டாஸ்-PZ.VI.2a-140 TM

மான். ராஜாஜியுடன் அந்தக் காட்சியைக் கண்டு களித்த கல்கி, அவர் ''சில காலமாகத் தஞ்சை ஜில்லாவில் உத்தியோகம் பார்த்து வருவது சிற்பக் கலை செய்த அதிர்ஷ்டம்'' என்று தமது பத்திரிகையில் எழுதினார்.

வட்டத் தொட்டியின் மற்றொரு முக்கிய உறுப்பினர், ரசிகமணியின் பள்ளித் தோழரான ஆவுடையப்ப பிள்ளை. திவான்பகதூர் பட்டமும், ஜரிகைத் தலைப்பாகையும் சூடியவர்; சர்க்கார் வக்கீல் பதவி வகித்தவர்; சாரட்டு சவாரி செய்தவர். ஆனாலும், அந்த வெளி ஆடம்பரங்களுக்கும் அதிகாரத்துக்கும் இடையே எளிய உள்ளமும் இனிய நகைச்சுவையும் கொண்டிருந்தவர். வேடிக்கைக் குறள்கள் இயற்றுவது அவருடைய பொழுதுபோக்கு. அவற்றை அவர் கல்கியிடமே சொல்லிச் சிரிப்பூட்டி இருக்கிறார். கல்கிக்கு மிகவும் பிடித்த குறள் இது:

''டை கட்டி வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம்
கைகட்டிப் பின்செல்ப வர்.''

டி.கே.சி.யின் நண்பர்களை எல்லாம் தம்முடைய நண்பர்களாய் ஆவுடையப்ப பிள்ளை பாவித்து, அவருக்கு இணையாக அவர்களுடைய நேசத்தைக் கொண்டாடினார். ஒரு சமயம் அவர், கல்கி தம்பதியரைக் கன்னியாகுமரியில் தமது விருந்தினராய் ஒரு வார காலம் கொண்டிருந்து உபசரித்தார்.

அந்த ஒரு வார காலமும், ஓயாக் கடலோசை எத்தனையோ விதமான நினைவுகளைக் கல்கியின் மனத்தில் எழுப்பிற்று; எத்தனையோ கனவுகளையும் சிந்தனைகளையும் தோற்றுவித்தது. காலையும் மாலையும் அவர், பல வர்ணங்களிலும் வடிவங்களிலும் அமைந்த சிப்பிகளும் சங்குகளும் பதிந்த ஈர மணலில் நடந்தார்; வெள்ளலைகள் தவழும் பாறைகள் மீது மாறி மாறி நின்றார்.

அதோ அந்தப் பெரிய பாறை மீது தான் பரமஹம்ஸரின் சீடர் விவேகாநந்தர் தியானம் செய்தார்; அலைகளுடன் சேர்ந்து பாரத அன்னையின் பாதங்களைத் தொழுதார். அன்னையின் பழம் பெருமைகளை எண்ணி எண்ணி உள்ளம் பூரித்தார்; அன்னியர் ஆதிக்கத்தில் அவள் இன்னலுற்றிருந்ததை நினைந்து நினைந்து மனம் நொந்தார். நெடுகிலும் சென்று மக்களைத் தட்டி எழுப்பி, அன்னையின் துயரினைப் போக்கிடத் தியாகப் பணி செய்யுமாறு கூவி அழைக்க வேண்டும் என உறுதி பூண்டார்.

திருச்சியில் படிக்கையில், இந்து செகண்டரி பள்ளியின் சரித்திர ஆசிரியர் எம். எஸ். நடேச அய்யர், விவேகாநந்தரைப் பற்றி நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் கேட்டுத் தாம் மெய் சிலிர்த்ததைக் கல்கி நினைத்துப் பார்த்தார். தம்மைப் போலவே, விவேகாநந்தரின் போதனையினால் ஆயிரக்கணக்கான பாரதப் புதல்வர்கள் தெய்வ பக்தியும் தேசபக்தியும் ஊட்டப் பெற்றுப் பாரத பக்தர்களாய் மாறியதை எண்ணிப் பார்த்தார். அவருடைய போதனையினால்தான், முத்துக்கிருஷ்ணன் துறவறம் பூண்டு அன்புப் பணி செய்கிறார்; ராஜாஜி தேச பக்தராய்ப் பரிணமித்து நாட்டின் விடுதலைக்காகவும் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகவும் பாடுபடுகிறார். பாரதியாரின் உள்ளத்தில் தேச பக்தி பொங்கியதற்கும் அந்த வேதாந்த கேசரியே ஓரளவு காரணமாய் இருந்திருக்கிறார்.

பாரத நாட்டைப் பற்றி, தமிழ் நாட்டைப் பற்றி, விடுதலை வேட்கையைப் பற்றி, பாரதியார் பாடிய பாடல்கள் எல்லாம், கல்கியின் உள்ளத்தில் அலை அலையாய் எழுந்தன. சில பாடல்களைக் கடலோசையைச் சுருதியாய்க் கொண்டு குரல் எடுத்தும் பாடினார். ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு வரியிலும், எத்தகைய உணர்ச்சியுடன் பொங்குகிறது தேசபக்தி என்று வியந்து கொண்டே பாடினார். பாரத சக்தியே பாரதியாய் உருக் கொண்டு பாடல்களைப் பொழிந்ததோ? நாட்டின் வேதனை அல்லது சோதனைக் காலமே அவரை ஒரு கருவியாகக் கொண்டதோ?

''என்னையும் நான் இக்காலத்தின் கருவியாய், சாதனமாய் ஆக்கிக் கொள்வேன்! எனக்குள்ள வாய்ப்பையும், வசதியையும் பயன்படுத்திக் கொண்டு, பாரதியின் பெருமையையும், அவருடைய பாடல்களின் அருமையையும் பலரும் உணர்ந்து போற்றும்படி பரப்புவேன்; பிறந்த பொன்னாட்டைப் பிணைத்திருக்கும் தளைகளைத் தகர்த்து எறியும்படி தூண்டுவேன். பாரதியாரின் ஒவ்வொரு வரிக்கும் விரிவான விளக்கமாக, விளக்கச் சித்திரங்களாகக் கதைகளும் கட்டுரைகளும் எழுதுவேன். ''புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு'' என்ற ஒரு வரியையே எத்தனை எத்தனையோ வரிகளாய் விரித்துப் பெருக்கலாமே!

இவ்விதமாய்ப் பற்பல இலக்கிய ஆசைகள்!



ஒவ்வொரு ஆணும் 'பெண்ணின் முதல் காதலனாக'த் தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறான். ஒவ்வொரு பெண்ணும் 'ஆணின் கடைசிக் காதலி'யாகத் தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறாள்!

—ஆஸ்கர் ஒய்ல்டு

இவை பொங்குவதற்கு வாய்ப்பு அளித்த ஆவுடையப்ப பிள்ளைக்கு, கல்கி மனமார நன்றி கூறிவிட்டுச் சென்னைக் குத் திரும்பினார். திரும்பியவுடன், டி.கே. சிக்குக் கடிதம் எழுதி, ''தங்கள் அருமை நண்பர் மூலமாய், குமரிக் கடலோரத் தில் ஓர் ஆனந்த விடுமுறை அனுபவிக் கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது'' என்று அவருக்கு நன்றி தெரிவித்தார்.

ரசிகமணியின் அன்புத் தோழமையை யும் ஆனந்தக் கவி விருந்தையும் அனுப விப்பதில், தம்மைவிடப் பாக்கியசாலி யாக, எஸ். மகராஜனைக் கல்கி கருதி, ''கொடுத்து வைத்த மகராஜன்'' என்று அவரைக் குறிப்பிடுவதுண்டு. உயர்நீதி மன்றத்து நீதிபதியாய் இருந்து இன்று ஓய்வு பெற்றுள்ள மகராஜன், முன்பு பெரும்பாலும், திருநெல்வேலியிலேயே இருந்ததால், டி. கே.சியுடன் அதிகமாய் அளவளாவும் வாய்ப்பைக் கொண்டிருந் தார். கம்பனின் மகிமையை உலகெலாம் பரப்ப வேண்டும் என்று டி. கே.சி. கொண்டிருந்த ஆசையை, கம்பராமா யணத்தை ஆங்கிலத்தில் ஆக்கியதன் மூலம் ஓரளவு நிறைவேற்றி யிருக்கிறார் மகராஜன். இத்துடன், ஷேக்ஸ்பியரின் ஹாம்லெத், மக்பெத், ஒதெலோ ஆகிய நாடகங்களை இவர் தமிழிலே பெயர்த்துத் தந்திருக்கிறார். தமிழிலும் ஆங்கிலத்திலும் கொண்ட புலமை யுடன், ஃபிரெஞ்சு மொழித் தேர்ச்சி யையும் சேர்த்துக் கொண்டுள்ளார். இத்தகையவர், ''சிவகாமியின் சபதம்'' நாவலில் வரும் காதற் காட்சிகள், உலக இலக்கியத்தின் மிகச் சிறந்த பகுதி களுடன் ஒப்பிடத் தக்கவை என்று மதிப் பிட்டிருக்கிறார்.

மகராஜனுக்குச் சமமாக டி.கே.சி. யின் அன்பையும் பாராட்டையும் பகிர்ந்து கொண்டவர் மீ. ப. சோமு. புல்லாங்குழல் பற்றிய அவருடைய சிறு கதை ஒன்றைக் கல்கி குறிப்பிட்டு, அதை நினைத்துப் பார்க்கையில் ''உடம்பு புல்லரிக்கின்றது'' என்று ஒரு கடிதத்தில் எழுதினார். அந்தப் புல்லாங் குழல் போன்ற பல சிறு கதைகளையும், நாவல்களையும், கவிதைகளையும் சோமு எழுதுவதற்குக் கல்கிதான் உற்சாகம் ஊட்டி ஆதரவு அளித்தார். பதினைந்து வயது இளைஞராக முதன் முதலில் வட்டத் தொட்டியில் சோமுவைக் கண்ட கல்கி, அந்த வட்டத்தில் சுற்றிய மற்ற இளைஞர்களைப் போல் அவரும் தமக்குக் கதைகள் எழுதி அனுப்பினால் என்ன என்று கேட்டார். அதற்கிணங் கச் சோமு தயங்கிக் கொண்டே அனுப் பிய ''சந்திரிகையின் சகோதரன்'' என் னும் கதையைக் கல்கி தயங்காமல் ஆனந்த விகடனில் வெளியிட்டார். கல்கி ஊட்டிய ஊக்கத்தினால் சோமு புரிந்த இலக்கியப் படைப்புச் சாதனைகள் சாகித்திய அகாதெமி பரிசு வரை பல பாராட்டுக்களும் வெகுமதிகளும் அவ ருக்குக் கிடைக்கச் செய்தன; இலக் கியத் துறையிலும் வானொலித் துறையி லும் உயரிய பதவிகள் வாய்க்கச் செய் தன. கல்கிக்குப் பின், அவருடைய பத்திரிகையின் ஆசிரியர் பதவியைச் சிறிது காலம் வகிக்கும் வாய்ப்பும் பெரு மையும் அவருக்குக் கிடைத்தன. ''என் னுடைய நன்றிக்கும் அன்புக்கும் உரிய பேராசிரியர்'' என்று, அந்தப் பதவியை ஏற்கையில், கல்கிக்கு உணர்ச்சியுடன் அஞ்சலி செலுத்தினார் சோமு.

வட்டத்தொட்டி இளைஞர்களில், வண்ணாரப்பேட்டைக்கு மிக அருகே கொக்கிர குளத்தில் வசித்தவர் சுகி சுப்பிரமணியம். அக்காலத்தில் அவர் சாது சுப்பிரமணியம் என்று சொல்லும் படியாய், வருவதும் போவதும் இருப்ப தும் தெரியாதபடி நடந்து கொண்டார். அந்தச் சாதுத் தோற்றத்துக்கு உள்ளே, கேலியும் நையாண்டியும் குத்தலும் நிறைந்த நகைச்சுவை எழுத்தாளர் ஒருவர் மறைந்திருந்தார் என்பது பின் னர்தான் தெரிய வந்தது. அவருடைய முதல் எழுத்து முயற்சியான ''ஏழைகள் தோணி'' என்பதன் வெள்ளோட்டத் தைக் கல்கிதான் நடத்தினார். அந்தத் தோணியைத் தொடர்ந்து எத்தனையோ சிறிய பெரிய கலங்கள் — உல்லாசப் பயணக் கப்பல்கள், கனமான சரக்குக் கப்பல்கள், பீரங்கி கொண்டு சுடும் போர்க் கப்பல்கள்.

''ஆயிரங்கால் மண்டபம்'' எனும் தமது இருபத்திரண்டாவது நூலில், கல்கிக்கு ஒரு மாளிகையைச் சுகி ஒதுக்கி, ''அதன் அழகும் அமைப்பும் வான வில்லின் வர்ணக் கலவை'' என வர்ணித்துள்ளார். சுகி பெற்றுள்ள இலக்கியப் பரிசுகள் பல. அவற்றில், முதலாவது கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில், ''துறவி'' என்ற கதைக் கெனத் தமக்குக் கிடைத்த முதல் பரிசை மிகப் பெருமை தருவதாய்க் கருதுகிறார். கல்கியின் மீது தாம் கொண்டுள்ள வியப்புப் பாராட்டைத் தமது புனைபெயரிலேயே இவர் பதித்துக் கொண்டுள்ளார். ''சுகி'' என்பதன் முதல் எழுத்து இயற் பெயரையும், இரண்டாம் எழுத்து கிருஷ்ணமூர்த்தி யையும் குறிக்கும்.

சுகியுடன் சேர்ந்து வட்டத் தொட் டிக்கு வந்து போனவர் ''மாறன்'' என்ற கே. பி. கணபதி. அவருடைய முதல் எழுத்துக்களைக் கல்கி வெளியிடா



நாம் செய்த 'சிறு தவறுகளை' ஒப்புக்கொள்கிறோம், பெரிய தவறுகள் ஏதும் செய்யவில்லை என்று பிறரை நம்ப வைப்பதற்காக!

—ரோச்சி பௌகால்ட்

விட்டாலும், பெரும்பாலானவற்றை வெளியிட்டார்.

மற்றொரு வட்டத்தொட்டி இளைஞன், இந்த வரலாற்றின் ஆசிரியன். அப்போது அவன், மூன்று மைலுக்கு அப்பாலுள்ள மேலநத்தம் என்ற தனது சொந்த ஊரில், பரம்பரைக் கிராம முனிசிபு வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்துக் கொண்டே, கல்கியின் ஆதரவுடன் ஆனந்தவிகடனுக்குக் கட்டுரைகள் எழுதியபடி, போதும் என்ற மனத்துடன் இருக்கையில், புதிதாக அமைந்திருந்த திருச்சி வானொலி நிலையத்திலிருந்து, எதிர்பாராதவிதமாய் ஒரு கடிதம் வந்தது. அந்த நிலையத்தின் நாடகப் பிரிவு எழுத்தாளர் வேலைக்கு அவனை ஒருவர் சிபாரிசு செய்திருக்கிறார் என்றும், விருப்பம் இருந்தால் அதற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்றும் அதில் கண்டிருந்தது. அதன்படியே செய்து வந்த வேலையை அடைந்தபின், தன்னைச் சிபாரிசு செய்தவர் கல்கி என்பது அவனுக்குத் தெரிய வந்தது. தாமாகவே கல்கி செய்த அந்த உதவியினால், நவீனத் தொடர்பு சாதனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது; திருச்சியிலிருந்து தில்லிக்கும், அங்கிருந்து லண்டனுக்கும் மாற்றலாகி, செய்திகள், பேட்டிகள், நாடகங்கள், கதைகள் முதலியவற்றை ஒலிபரப்பும் பெருமை அவனுக்குக் கிடைத்தது.

வட்டத்தொட்டியிலிருந்து முதலாவதாக ஒலிபரப்புத் துறையில் ஈடுபட்டவர், டி.கே.சி.யின் ஒரே குமாரர், தீத்தாரப்பன். அந்தப் பெயரின் 'தீபன்' என்ற சுருக்கம் அவருடைய புனைபெயர். அந்தப் புனைபெயருக்கு முன்னமேயே அமைந்து அதனுடன் சேர்ந்து வழங்கியது, செல்லையா என்ற செல்லப் பெயர். பார்ப்பதற்கு அழகாய் இருந்த செல்லையா, பார்வையிலும் அழகைக் கொண்டிருந்தார்; குணத்திலும், பேச்சிலும், பாட்டிலும், எழுத்திலும் கொண்டிருந்தார்.

தந்தையின் வட்டத்தொட்டிக்குத் துணையாகத் தனயனின் வட்டம் ஒன்று, அதே வீட்டில், அவருடைய மாடி அறையில் இயங்கிற்று. நகைச்சுவையுடன் கவிச் சுவையைக் கலந்து தாம் எழுதி ஆனந்தவிகடனில் வெளியாகும் கதை கட்டுரைகளை, இளைய வட்டத்தாருக்கு வாசித்துக் காட்டுவார். ''எப்படி?'' என்று புகழுரையைக் கேட்டு மகிழ்வார். அதே மகிழ்ச்சியுடன், நண்பர்களின் எழுத்துக்களையும் புகழ்வார். குற்றம் குறைகளையும் சுட்டிக் காட்டுவார்.

தந்தையைப் போலவே தீபனும் சட்டம் படித்த போதிலும் வக்கீலாய்த் தொழில் நடத்த விரும்பவில்லை. ஏதேனும் வேலை செய்ய வேண்டுமே என்பதற்காக, அவரை டி. கே. சி., உள்ளூர்ப் பணக்காரர்கள் சிலர் சேர்ந்து நடத்திய பாங்கி ஒன்றில் ஏஜெண்டாய் இருக்கச் செய்தார். அந்த வேலையை ஒரு தண்டனையாய்த் தீபன் கருதி, பல்லைக் கடித்துக் கொண்டு செய்து வந்தார். அவருடைய சங்கடத்தை மற்ற நண்பர்களைப் போல் கல்கியும் அறிந்திருந்தார்.

சென்னை ரேடியோ நிலையத்தின் முதலாவது இயக்குநர் விக்டர் பரஞ்சோதி, தாம் துவக்கவிருந்த ஒலிபரப்பு நிகழ்ச்சிப் பத்திரிகைக்குத் தக்க ஆசிரியர் ஒருவரைச் சிபாரிசு செய்யும்படி கல்கியைக் கேட்டுக் கொண்டார். உடனே கல்கி தீபனைச் சிபாரிசு செய்ததுடன், தந்தி கொடுத்து அவரைச் சென்னைக்கு வரவழைத்து, வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளச் செய்தார். விரைவிலேயே தீபன், 'வானொலி' பத்திரிகையின் முதல் மெய்யாசிரியராக அமர்ந்தார்.

புதிய பத்திரிகை ஒன்றை, அதுவும் சிவப்பு நாடா கட்டிய பத்திரிகை ஒன்றைத் துவக்கி நடத்தும் சிரமங்களை எல்லாம் தீபன் சமாளித்து, அதை நன்றாக வெளியிட்டு வருகையில், கொடிய காச நோய் அவரைப் பற்றிக் கொண்டது. எவ்வளவோ வைத்தியம் செய்தும் அவர் குணம் அடையாமல், 1941ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் உயிர் நீத்தார்.

தீபனின் கதை கட்டுரை பாடல்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை ''அரும்பிய முல்லை'' என்ற பொருத்தமான பெயருடன் புதுமைப் பதிப்பகத்தார் வெளியிட்டார்கள். கல்கிக்கும் தீபனுக்கும், பொது நண்பரான கி. சந்திரசேகரன் அதற்கு உருக்கமானதொரு முன்னுரை எழுதினார்.

அந்த முன்னுரையின் இறுதி வாக்கியங்கள் இவை :

> செல்லையாவை இழந்த நமக்கு இன்னும் காண்பது போலிருக்கிறது — அவர் முகத்தின் பொலிவும், கலை நிறைந்த பேச்சும், கலையுணர்ச்சி ததும்பும் கடிதமும் கட்டுரையும். அரும்பிய இந்த முல்லையை, நன்றாக மலர்வதன் முன்பே, யாரோ பறித்துவிட்டார்கள். ஆனால், எங்கிருந்தோ அதன் நறுமணம் நம் மனத்தை அதன்பால் கட்டி இழுக்கின்றது.

அந்த அழகு முல்லையின் நறுமணம் கல்கியின் புகழ் மணத்துடன் கலந்து கமழ்கிறது. (தொடரும்)



பிறருக்கு நீ சொல்லும் அறவுரைகளை நீயே பின்பற்றினால் வாழ்க்கையில் வெற்றியைச் சுலபமாக அடையலாம்.
—யாரோ

மூன்று வயதே ஆகிறது...



அதற்குள் உலகமெல்லாம் பரவிப் பெருகியுள்ள நோய் இவளைப் பீடித்துவிட்டது

நூற்றுக்கு 95 பேரைப் பாதிக்கும் நோயான பற்சிதைவு குழந்தைகளையே பெருமளவில் பீடிக்கிறது. பற்சிதைவின் காரணமாக அகாலமாக, பால் பற்கள் விழுந்து, புதிய பற்கள் முளைக்கும் பருவத்தில், பல் வளர்ச்சிக்குக் குழந்தைகளுக்குத் தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்படுகிறது.

பினகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே நாள்தோறும் காலையிலும், படுக்கை வேளையிலும், உங்கள் குழந்தைகளை பினகா ஃப்ளோரைடினால் பல் துலக்கச் செய்யுங்கள். அதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல் பல் எனாமலைப் பலப்படுத்துகிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது. அதுமட்டுமல்லாமல், பினகா ஃப்ளோரைடினால், 14 வயது வரை, தவறாமல் பல் துலக்கி வந்தால், பற்சிதைவை எதிர்க்கும் நீடித்த ஆற்றல் வந்தடைகிறது.



**பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—**

பினகா ஃப்ளோரைட்

U-BF/38/75 Tam.

தேன்நிலவில் ஒரு மனத்தேக்கம்

கல்யாணமான கையோடு தேன் நிலவுக்கு மாமல்லபுரம் ஸில்வர் ஸாண்ட்ஸுக்குப் போனான் கோவர்த்தன். சாரதா—கோவர்த்தன் திருமணம் பெரியோர்கள் நிச்சயித்த ஒன்றுதான். ஆனால் எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற சாரதாவைப் பெண் பார்க்கப் போய், அவள் முக தரிசனம் கிடைத்த மறுகணமே கோவர்த்தன் தன் உள்ளத்தை அவளிடம் பறிகொடுத்து விட்டான். கொள்ளை அழகு என்றால் என்ன அர்த்தம் என்பது அவனுக்குப் புரிந்தது. அவன் இதயத்தில் அவளை அடைய ஒரு வேகம் பிறந்தது. டாக்டர் என்ற முறையிலே கை நிறைய சம்பாதிக்கவும் செய்தான். கோவர்த்தனே ஸிவில் இன்ஜினீயரிங் பட்டம் பெற்றவன். ஏற்கனவே சில கட்டட கண்ட்ராக்டுகள் வந்து கொண்டிருந்தன. வாழ்க்கையில் எந்தவிதமான குறையும் இருப்பதற்கு இடமேயில்லை.

ஆனால் இதோ அவன் எதிரில் கடல் நீர் பொங்கி விழுவது போலவே அவன் உள்ளமும் அலைபாய்ந்து கொண்டிருந்தது. தேன்நிலவுக்கு என்று வந்த இடத்தில் இரண்டாம் நாளே இப்படி ஒரு மனப் போராட்டமா ?

சற்றுத் தொலைவில் சாரதாவும் சபேசனும் கடலில் குளித்துவிட்டு நீச்சல் உடையில் சிரித்துப் பேசிக் கொண்டே திரும்பி வருவதைப் பார்த்த போது அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சபேசனை ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு இங்கு — மகாபலிபுரத்தில் சந்தித்தாள் சாரதா. சென்னை மருத்துவக் கல்லூரியில் அவளுடன் சேர்ந்து படித்தவன், திருநெல்வேலிக்குத் திரும்பி அங்கே டாக்டராகப் 'பிராக்டிஸ்' செய்து கொண்டிருந்தான். சென்னைக்கு ஒரு மருத்துவ மகாநாட்டை முன்னிட்டு வந்தான். அப்படியே மஹாபலிபுரத்திலும் ஒரு நாள் 'காம்ப்' போடத் தீர்மானித்தான். அவனுக்குத் தன் கணவனை அறிமுகப் படுத்தினாள் சாரதா.

''ஒய் டோண்ட் வி டேக் எ டிப்?'' என்று கேட்டான் சபேசன்.

''இப்போது வேண்டாம்'' என்று கோவர்த்தன் கூறும்போதே — இல்லை அதற்கு ஒரு கணம் முன்பாகவே — சாரதா ''ஓ.கே.'' என்று விட்டாள்.

பிறகு நாகரிகம் அவனைத் தடுக்கக் கோவர்த்தனை அனுமதிக்கவில்லை. தன்மானம் காரணமாகச் சமுத்திர ஸ்நானம் செய்யாதிருக்கச்



ஜெயந்தி

சாரதாவால் முடியவில்லை. விட்டுக்கொடுத்து அவர்களுடன் சேர்ந்து கொள்ளக் கோவர்த்தனுடைய ஆண்மை தடையாக நின்றது. நிகர விளைவு: நீச்சல் உடைகளை அணிந்து கொண்டு சபேசனும் சாரதாவும் அலைக்கரங்களின் அணைப்பை நாடிப் போனார்கள். கோவர்த்தன் மனம் புகைய உட்கார்ந்து கொண்டிருந்தான்.

'இது சிநேகம்தானா, நட்பு மட்டும்தானா?' என்று அவன் உள்ளம் சிந்திக்க ஆரம்பித்தது. 'கல்லூரி நாட்களிலேயே அவர்கள் இப்படி அடிக்கடி வந்திருக்கலாம் அல்லவா? இதே போல் நீச்சல் உடையுடன் கடலில் நீராடியிருக்கலாம் அல்லவா? அப்புறம்...'

சாரதாவுடன் தேன் நிலவுக்கு என்று வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்ட நிலையில் கோவர்த்தனுக்கு அவளுடைய உடல் தூய்மை பற்றிச் சந்தேகமே இருக்கவில்லை. ஆனால் மனத் தூய்மை என்று ஒன்று இருக்கிறதல்லவா ? அது பற்றி அவன் எண்ண ஆரம்பித்தான். கற்பனைகள் சிறகடித்துப் பறந்தன. 'சபேசனை அவள் விரும்பியிருக்கலாம் ; ஜாதி வேற்றுமை காரணமாகப் பெற்றோர்கள் அனுமதி கிட்டாமல் போயிருக்கலாம்; பிறகு என்னைக் கணவனாக ஏற்றிருக்கலாம். ஏன் அப்படி இருக்க முடியாது? இப்போதுகூட அவர்கள் அன்னியோன்னியமாகப் பழகுகிறார்களே ஒழிய அளவுக்கு மீறிய நெருக்கம் இல்லைதான். எப்படி இருக்க முடியும் ? என் எதிரேயே நெருங்கிப் பழக எப்படித் துணிவார்கள்? அதற்கு என் தலை மறைய வேண்டும் !'

''வாருங்களேன் ! இந்த வெய்யிலுக்குக் கடலில் குளிப்பது சுகமாயிருக்கிறது'' என்று கோவர்த்தனின் கையைப் பிடித்து இழுத்தாள் சாரதா. இருவரும் சொட்டச் சொட்ட நனைந்து நின்று கொண்டிருந்தார்கள். சபேசன் மணலில் ஒரு ஜமுக்காளத்தை விரித்துப் படுத்தான். பிற்பகல் வெய்யிலில் உடலைக் காயவிட்டான்.

கோவர்த்தன் நீச்சல் உடை அணிந்து மனைவியுடன் சேர்ந்து கொண்டான். இருவருமாக நீரில் இறங்கினார்கள். கடல் அலைகள் வந்து நெஞ்சைத் தாக்கியபோது அதில் சற்று முன் எழுந்த சந்தேகங்கள், சஞ்சலங்கள் எல்லாம் அந்த நீரில் கரைந்து போய்விட மனம் சுத்தமானதுபோல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது கோவர்த்தனுக்கு. சாரதாவுடன் கரம் கோத்துக் கொண்ட போது ரத்த நாளங்களிலெல்லாம் சர்க்கரைப் பாகே ஓடுவதுபோல் ஓர் இனிமை உடலெங்கும் பரவியது.

ஆனால் ஐயோ ! இதென்ன பெரிய அலையாக ஒன்று வந்து தாக்கிச் சாரதாவை அவனிடமிருந்து வெடுக்கென்று பிடுங்கிக் கொள்கிறதே ! ஆ! இந்த அலையின் வேகத்தை என்னால் தாங்க முடிகிறது. ஆனால் சாரதா ? அடடா ! அவளை அலை இழுத்துக் கொண்டு போகிறதே ! ஐயோ ! சாரதாவைப் பறிகொடுத்தே விடுவேனா ?

கோவர்த்தன் சுலபத்தில் விட்டுக் கொடுக்கவில்லை. அவள் பின்னால் பாய்ந்தான். அவள் முகவாய்க்குக் கீழாக இடது கரத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு வலக் கரத்தால் அலைகளுடன் போராடி நீச்சலடித்தபடி கரையை நெருங்கினான். இடுப்பளவு ஆழத்துக்கு வந்ததும் சாரதாவைத் தூக்கிக் கொண்டு நடந்தான். மணல் பரப்பில் அவளைக் கிடத்தினான்.

இதற்குள் ஏதோ ஆபத்து என உணர்ந்து சபேசன் அருகே ஓடி வந்தான். சாரதா மயங்கிக் கிடந்தாள். பேச்சு மூச்சு இல்லை. கோவர்த்தனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவனுக்கு முதலுதவி சிகிச்சை முறை ஏதும் தெரியாது. சட்டென்று அவனுக்குச் சபேசன் ஒரு டாக்டர் என்பது நினைவு வந்தது. ''டாக்டர்! இவளைக் காப்பாற்றுங்கள், ப்ளீஸ்!'' என்றான், கெஞ்சுகிற குரலில். அப்படி உயிர்ப் பிச்சை கேட்டபோது அவன் எதற்கோ மன்னிப்புக் கோருவது போல் இருந்தது.

அந்த ஒரு கோரிக்கை அவனிடமிருந்து பிறக்க வேண்டும் என்பதற்காகவே காத்திருந்தவன் போல் சபேசன் விநாடிப் போதும் தாமதியாமல் இயங்கினான்.

சாரதாவை இடுப்பைப் பற்றித் தூக்கினான் சபேசன். தலைக்கு மேல் வைத்துக் கொண்டு கரகரவென்று சுற்றினான். சில விநாடிகளில் சாரதா உட்கொண்டிருந்த உப்பு நீரெல்லாம் வெளியே வந்தது. பிறகு சபேசன் அவளை மல்லாக்கப் படுக்க வைத்து அவள் வாயில் தன் உதடுகளைப் பதித்துக் காற்றை உள்ளுக்கு ஊதிச் செலுத்தினான். சற்றுநேரம் இப்படிச் செய்த பிறகு அவளைக் குப்புறப் படுக்க வைத்துத் தலையை மட்டும் ஒருக்களித்தான். நீச்சல் உடையைத் தளர்த்தியபிறகு, அவள் பக்கத்தில் மண்டியிட்டு அமர்ந்து அவள் நெஞ்சுக்குக் கீழே உள்ளங் கைகளைப் பதித்து, விட்டுவிட்டு அழுத்தினான்.


உயிர் மூச்சு திரும்புவதற்கான முதல் சிகிச்சைகள் படிப்படியாகப் பலன் தந்தன. சாரதாவின் உடலில் சலனம் ஏற்பட்டது. முகத்தில் உயிர்க் களை தோன்றியது.

இத்தனையையும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கோவர்த்தன் தன் உள்ளத்தில் சிறிதுகூட விரச உணர்ச்சி ஏற்படவில்லை என்பதைக் கண்டு கொண்டான். அவன் டாக்டர், அவள் நோயாளி. அந்த அளவில் தான் சபேசன் நடந்து கொண்டான். அதில் இயந்திர ரீதியான, இலகுவான இயக்கத் திறமை காணப்பட்டதே யொழிய உணர்ச்சிகளால் பாதிக்கப்படும்தன்மையைக் காணோம்.

சட்டென்று கோவர்த்தனுக்கு இன்னொரு விஷயம் நினைவு வந்தது. சாதாரணமாக டாக்டர்கள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சிகிச்சை செய்வதில்லை !

சில நிமிஷங்களில் சாரதா எழுந்து உட்கார்ந்தாள். ''என்ன நடந்தது ?'' என்று இமைகள் படபடக்கக் கேட்டாள். கோவர்த்தன் அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறவில்லை. அதற்கு எத்தனையோ அவகாசம் இருக்கிறது. ஒரு வாழ்நாளே இருக்கிறது. அவன் சபேசனை ஆலிங்கனம் செய்து கொண்டு நன்றி தெரிவித்தான். அதே சமயம் தன் விழிகளில் துளித்திருக்கும் கண்ணீரை டாக்டர் பார்த்துவிடாதிருக்கவும் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டு அதில் வெற்றி பெற்றான்.


பின்னி கூட
என்றும்
மாற்ற விரும்பாத
சில பொருட்கள்
உள்ளன!
நல்ல வேளை,
சில பொருட்கள் என்றும் மாறுவதே இல்லை!
இந்த நாட்களில் இயல்பான நிலைகளின் தோற்றத்
தையும் பின்னியின் தரம் என்றும்போல் நம்பிக்கையூட்டு
வதையும் காணும்போது களிப்படைகிறோம்.
பின்னி உயர்ந்த நாகரீகத்தையும் நீடித்த
உழைப்பையும் எப்படி இணைத்துத் தருகிறது
என்பதைப் பாருங்கள். எண்ண முடியா
வண்ணங்கள்! அள்ள முடியா கோலங்கள்!
பின்னி டெரீன் இழை கலந்த
தரமான ஆடைகளை அணிந்து
களிப்படைவீர்.
நாகரீகம், அத்துடன் நீடித்தும்
உழைப்பவை — பின்னி மட்டுமே
நயமுடன் இணைத்துத்தர முடியும்!
பின்னி டெரீன் இழைகலந்த துணிகள்
Interpub/BB/55/75 Tam



இளம் வயதில்....

மே மாத ஆரம்பத்தில் திரு ஜயப்பிரகாஷ் தமிழகத்துக்கு வருகிறார். லஞ்ச ஊழல் மலிந்து சர்வாதிகாரப் போக்கில் நடக்கும் ஓர் ஆட்சிக்கு எதிராகச் சாத்வீகப் போர்க் கொடி உயர்த்தி யிருக்கும் தீரருக்குப் பாரதியின் பாடல் முழுமையுமே பொருந்துமென்றாலும் ஒரு வரியைத் தலைப்பில் கூறி வரவேற்கிறோம்.

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா, வா, வா!

அன்று விஜயதசமி. ஹர்ஸூ பாபுவுக்கு ஏக மகிழ்ச்சி. "என் மகன் ஒரு நாள் மிகப் பெரிய மனிதனாக வரப்போகிறான்!" என்று தம் நண்பர்களிடையே கூறி மகிழ்ந்தார். அது 1902ம் ஆண்டு.

தம் மகன் படித்துத் தேர்ந்து நல்ல உத்தியோகத்தில் அமர்ந்து குடும்பத்தை விளங்க வைக்கப் போகிறான் என்று கனவு கண்டார்.


அந்த நாளில் ஒரு கிராம அதிகாரியின் பிரதிபலிப்பு அந்த அளவுதானே இருக்க முடியும்? அவனோ குடும்பத்தை மட்டுமின்றி நாட்டையே விளங்க வைக்கும் பெரிய மனிதன் ஆனான்.

"உங்கள் பிள்ளை ஊண் உறக்கமின்றிச் சோகமே உருவாக உட்கார்ந்திருக்கிறான்.. சாப்பிட மாட்டேன் என்கிறான்" என்றாள் அவன் அன்னை பூல் ராணி.

"ஏனாம்?" என்று கேட்டார் தந்தை.

"நீங்கள் அவனுக்குத் தந்த புறாக்களில் ஒன்று இறந்து விட்டது. நோய்வாய்ப்பட்டிருந்த அதற்கு அவன் செய்யாத சிகிச்சை இல்லை! அப்படியும் அது இறந்துவிடவே, அவனுக்குத் துக்கமான துக்கம்!"

தந்தை தனயனுக்கு ஆறுதல் கூறினார். "வருந்திப் பயனில்லை, மகனே! இதுதான் வாழ்க்கை. இறப்பும் — பிறப்பும் நம் கையில் இல்லை!" அறியாப் பாலகனுக்கு அநுபவம் வழங்கிய அறிவுரை இது. ஏற்கனவே, இரண்டு குழந்தைகளைப் பறி கொடுத்திருந்த அவர் இப்படிக் கூறாமல் வேறு எப்படிக் கூறுவார்!



பிரபாவதி இன்று இருந்தால்....

வாத்து, மான், நாய், முயல் என்று எத்தனை எத்தனையோ பிராணிகள் வளர்ந்தன, அவன் வீட்டில். ஒரு குதிரையும் இருந்தது.



பி. பி. ஸி. பேட்டி.....

அது குட்டி போட்டது. அந்தக் குட்டியிடம் தன் பிரியத்தைக் காட்டச் சென்ற சிறுவனைத் தாய்க் குதிரை எங்கே அவன் தன் குட்டிக்குத் தீங்கு விளைவித்து விடுவானோ என்ற கவலையில் உதைத்து விட்டது.

அவன் தந்தைக்கு வந்த ஆத்திரத்தில் அந்தக் குதிரையை விற்றுவிடத் தீர்மானித்தார். ஆனால் அன்பே உருவான அந்தப் பாலகன் அதன் உதையைப் பொருட்படுத்தவில்லை. குதிரையை விற்க வேண்டாம் என்று சத்தியாக்கிரகமே செய்து வெற்றி கண்டான்.

ஆதித்ய மிசிரர் என்று ஒருவர் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வந்து கொண்டிருந்தார். அவருக்குப் பயிற்சி போதாது என்று தந்தை அவரை நிறுத்தி விட நினைத்தார். ஆனால் அவருக்கு வேலையில்லாமல் போய்விடுமே என்று எண்ணி அந்தப் பாலகன் அவருக்காக வாதாடி அவர் விஷயத்திலும் வெற்றி கண்டான்!

'பெயர் பொருத்தமாகத்தான் வைத்திருக்கிறோம்!' என்று மனம் மகிழ்ந்தார் தந்தை. ஜயப் பிரகாஷ் — வெற்றி ஒளி — பொருத்தம் தானே?

ஜயப் பிரகாஷ் தமது பதினெழாவது வயதில் பிரபாவதியை மணந்தார். அப்பொழுது அவர் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தார். தந்தையின் ஆசைக் கோட்டை தகர்கிறாற்போன்ற ஒரு காரியம் நடந்தது. காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு

படிப்பை உதறி விட்டார். தந்தை அதற்கு எத்தகைய எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

1921ம் ஆண்டு மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றவர், தம் காலில் நின்று படிப்பைத் தொடர்வதற்காகக் கலிபோர்னியாவில் ஆப்பிள் தோட்டத்தில் வேலை செய்தார். ஆம், பொருளாதாரம் கற்கச் சென்றவர் பொருளைத் தேடி, ஆப்பிள் பழத்தில் நல்லது — கெட்டதைப் பிரிக்கும் பொறுப்பை ஏற்றார். அதுவே பின்னர் நாட்டுக்கு எது நல்லது எது கெட்டது என்பதைப் பகுத்துக் காட்டும் மனப் பக்குவத்தை நல்கியதோ, என்னவோ ?

பொர்க்லி பல்கலைக் கழகத்தின் கட்டணம் அதிகமாகத் தோன்றவே, அயோவா பல்கலைக் கழகத்தைத் தேர்ந்தெடுத்தார். தாமே சமைத்துச் சாப்பிட்டு, வேலையும் செய்து படித்தவர் செல்வச் செழிப்பு மிக்க அமெரிக்காவிலும் வறுமை தாண்டவமாடுவதைக் கண்டு, அதனுடன் போராடக் கங்கணம் கட்டிக் கொண்டார். அதன் பலனை மார்க்ஸியத்தில் தேர்ந்தார்.

விவசாயப் பண்ணையில் பணியாற்றி, இரும்புப் பட்டறையில் தொழிலாளியாகச் சேர்ந்து, உணவுச் சாலைகளில் சர்வராக வேலை செய்து, அவர் கற்ற கல்வி, இந்தியாவின் இன்றையக் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று உணர்த்தியிருக்கிறது. வேலையற்றோரை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகத் திகழும் கல்வி முறையை அவர் எதிர்க்கும் காரணம் இதுவே.

காந்தியடிகளோடு பல வகையிலும் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தாலும், அவரது இயக்கத்தில் ஒருமைப்பாட்டோடு கலந்து கொண்டார். அவரது துணைவி பிரபாவதி தேவியோ காந்தீயமே வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்தவர்; மார்க்ஸியவாதியைக் காந்தீயவாதியாக்கிய பெருமை கொண்டவர்.

பொதுவாகச் சில தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது குடும்பப் பாசத்தையும் துறந்து தேசப் பணியையே வாழ்வாகக் கொண்டவர் என்று புகழ் மாலை சூட்டுவது உண்டு. ஆனால் ஜெயப்பிரகாசர் 'வீட்டில் விளக்கேற்றிய பின்னரே மசூதியில் விளக்கேற்றுவர்' என்னும் ஹிந்திப் பழமொழிக்கு ஏற்பக் குடும்பப் பற்றே தேசப் பற்றுக்கு அடிப்படை என்னும் கருத்தைக் கொண்டவர்.

அவரது சகோதரி நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருக்கிறார் என்பதை அறிந்ததும், நாட்டுப் பணிக்காக வேற்றூர் சென்றவர் ஓடோடி வந்தார். அவளது இறுதி மூச்சுப் பிரியும்போது அருகில் இருந்து இதயம் நெகிழ்ந்து போனார்.

'இன்று பிரபாவதி இருந்தால் இந்த விலைவாசி உயர்வைக் கண்டு ரத்தக் கண்ணீர் வடித்திருப்பாள். ஏழைகள் படும் அல்லல்களைக் கண்டு அழுதிருப்பாள். ஆண் பிள்ளைகளான நமக்குக் குடும்பச் சிரமம் அவ்வளவாகத் தெரியாது' என்று பொதுக் கூட்டங்களில் குறிப்பிடுவார்.

குழந்தை குட்டிகள் இல்லாத இவருக்கு இன்று பாரத நாட்டின் அத்தனை இளந் தலை

வட்ட மேஜை

நான் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எங்களுக்குச் சொத்துக்கள் கிடையாது. இருப்பினும் எனது தங்கைக்காக பல ஆயிரங்களைக் கடன் வாங்கி ''ஜாம் ஜாம்'' என்று கல்யாணம் செய்து வைத்தோம். இன்னும் அந்தக் கடனைத் தீர்க்க முடியாமல் மேலும் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலும் என் பெற்றோர்கள் அடுத்த சகோதரிக்கு இதைவிட இன்னும் சிறப்பாகத் திருமணம் நடத்த ஆகாசக் கோட்டை கட்டுகின்றனர்.

இப்படி இன்னும் அநேக குடும்பங்கள் கல்யாணங்கள் செய்து வைத்தே திவாலா நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன.

அரிசிக்கும் தண்ணீருக்கும் அல்லபட்டுக் கொண்டிருக்கும் இந்த நாளில் ஆடம்பர விழாக்களை அறவே நிறுத்த வேண்டும்.

பதிவுத் திருமண அலுவலகம் என்று ஒன்று இருக்கிறது. அங்கே மேஜை மீது வைக்கப்பட்டுள்ள புத்தகம் புரட்டுவாரின்றிக் கிடக்கின்றது.

இந்தியக் குடும்பங்கள் திருமணத்துக்கென்று செய்யும் செலவுகளை முதலாகப் போட்டால் பல தொழிற்சாலைகளை உருவாக்கி இருக்க முடியும்!

பெண் அல்லது மாப்பிள்ளை பெயரில் வங்கிகளில் 'பிக்சட் டெபாசிட்'டில் போட்டால் கூட வட்டிப் பணம் அந்தக் குடும்பத்தை நடத்த உதவியாக இருக்கும்! பணம் நாட்டின் தொழில் வளப் பெருக்கத்துக்குப் பயன்படும்.

திருமணச் செலவும் தீபாவளிப் பட்டாசும் ஒன்றே!

திருச்சி—2
9—4—75 ''துலாமவன்''

கற்பினில் கண்ணகியும்
கணவனைப் போற்றுகின்ற
பொற்பினில் ஜானகியும்
பெற்றவர்க்கு மதிப்பளிக்கும்
நற்பண்பில் சிராமனும்
நாரணனும் பிறப்பதற்கு
அற்புதக் கவிதைதந்த
அருட்கவிஞர் வாழியவே!

சென்னை—5
11—4—75 முத்து. கதிரவன்

ஆர்.எம். வீரப்பனின் அருமையான கட்டுரை உத்தம உண்மை உள்ளத்தின் உணர்ச்சிப் பிரதிபலிப்பாக இருந்தது. எம். ஜி. ஆரைப் பற்றி எழுதியிருந்த அவரது வரிகளை வாசிக்கையிலே மெய் சிலிர்த்தது, மேனி புல்லரித்தது. அழகிய வண்ணப் படம், அற்புதக் கட்டுரை. வெளியிட்ட கல்கிக்குக் கனிவான வணக்கங்களைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.

கோட்டூர்,
18—4—75 பி. சின்னக்கண்ணன்

முறையினரும் குழந்தைகள்! உலகில் நல்லவர், தீயவர் என்று யாரும் இல்லை. எல்லோரும் சூழ்நிலைக்கு அடிமையானவர்கள் என்னும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஜயப்பிரகாசர், 'பகைவனுக்கருள்வாய் நன்நெஞ்சே!' என்னும் பாரதியின் வாக்கைப் பின்பற்றுபவர். வினோபா அடிகளின் துணையோடு கொள்ளைக் கூட்டத்தினரின் மன மாற்றத்துக்கு அடிகோலியவர்.

மேஹர் சிங்கின் தலைக்கு இரண்டு லட்சம், மாதோ சிங்கின் தலைக்கு ஒன்றரை லட்சம் என்று அரசு ஆசை காட்டி விலை பேசித் தன் கையாலாகாத்தனத்தைக் காட்டிக் கொண்டிருந்த நாட்களிலே, ஜயப்பிரகாசரைச் சந்திக்கக் கண்ட்ராக்டர் ராம்நாத் வந்தார். "கொள்ளையர்களின் சிரத்தைக் கொய்யப் பண பேரம் வேண்டாம். அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதாக உறுதி மொழி அளியுங்கள்! நான் மாதோ சிங்கையே உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்துகிறேன்!" என்றார்.

"நானே எத்தனையோ முறை முயன்று பார்த்து விட்டேன். மாதோ சிங்கைப் பணிய வைப்பது முடியாத காரியம்!" என்றார் ஜயப்பிரகாசர்.

"அவனே மனம் மாறி வந்தால்?..."

"அப்பொழுது பார்க்கலாம்!"

"நான்தான் மாதோ சிங்!" கண்டிராக்டர் ராம்நாத் தம்மையே மாதோசிங்காக அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ஜயப்பிரகாசருக்கு ஒரே வியப்பு. "உங்களைப் பிடித்துக் கொடுத்தால் எனக்கு எத்தனை லட்சம் கிடைக்கும், தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியும். ஆனால் இன்னொன்றும் தெரியும். உங்கள் நல்லிதயம் எங்களைக் காட்டிக் கொடுக்காது. அந்தத் தைரியத்தில்தானே நான் நேரில் வந்தேன்!" என்றார் மாதோசிங்.

ஜே. பி.யின் இன்றைய இயக்கத்திலும் ஹிம்ஸைக்கு இடம் கிடையாது. அதைத் திசை திருப்ப முயலும் தன்னலப் பேய்களுக்கு இடம் இல்லாமல் செய்ய வேண்டியது மக்கள் பொறுப்பு.

நாட்டின் நலனையே தம் மூச்சுக் காற்றாகக் கொண்டு செயல்படும் நிறைகுணச் செம்மல் ஜயப்பிரகாசரிடம் இரண்டு குறைகள் உண்டாம்.

ஒன்று அவரிடம் உள்ள ஷேவிங் செட். அதன் அருமை பெருமைகளை வாய் ஓயாமல் புகழ்வாராம். அப்பொழுது அவர் முகத்தில் எழும் குமின் சிரிப்பைக் காணும்போது மன்னித்துவிடத் தோன்றுமாம்.

இரண்டாவது, அவருக்கு நேர உணர்வு இருக்காதாம். அதுவும் குறிப்பாக அவருக்கு இணையாகப் பேசக்கூடியவர்கள் கிடைத்து விட்டால் பொழுது போவதே தெரியாமல் பேசிக்கொண்டே போவாராம். பேசுபவர் பேசினால் நேரம் போவது தெரியாமல் கேட்டுக்கொண்டிருக்கவும் நாம் தயார்தான், இல்லையா?

—ரா. வீ.

மேலட்டை வண்ணப்படம்: இல்லி ராஜு



சரியானதொரு உம்மணாமூஞ்சி கூட ஹோட்டல் நவ்ரங் நாடகத்தைப் பார்த்தால் சிரிக்காமல் இருக்க முடியாது. ஊருக்கு உபதேசம் செய்கிற விஷயம் சிறிதும் கிடையாது. எளிய கதை, அதற்கு வலுவளிக்கச் சின்ன சஸ்பென்ஸ்; இவற்றை வைத்துக் கொண்டே சக்கைப் போடு போடுகிறார்கள்.

சிரிப்பதற்காகவே எழுதப்பட்ட இந்த நாடகம் சிறப்பு நாடகமாகவும் திகழ்வதற்கு டைரக்ஷன் திறமையும் (விஷ்ணுதாஸ்) கதை சொல்லும் உத்தியும் (ரமி) காரணங்கள்.

கதாநாயகி காபரே நடனக்காரியாக இருந்தாலும் அவளை அந்த உடை அணியச் செய்தோ அல்லது ஒரு நடனமாட வைத்தோ நாடகத்தை அசிங்கப்படுத்தி விடவில்லை. ஒரே ஒரு பெட்டியைப் பார்வையாகக் கொண்டு வந்து வைத்து கதை நடக்கும் சூழ்நிலையை மாற்றிவிடுவதும் கள்ளக் கடத்தல்காரர்களின் சில விநோதமான குணநிசயங்களை நன்கு உணர்ந்து எழுதியுள்ளதும் பாராட்டுக்குரியன. பின்னணியில் இதயத்தைத் தொடவைக்கும் உருக்கத்துக்கும் வாய்ப்பிருக்கிறதே!

ஹாஸ்ய நடிகர்கள் ஐ. எஸ். ஆர். ஸ்ரீராம் ஆகியோர் வெளுத்து வாங்குகிறார்கள். கதாநாயகன், நாயகியாகத் தோன்றும் சந்திரனும் குமாரி ஜெயபுஷ்பாவும் மன நிறைவைத் தருகிறார்கள்.


பொன் விழாக் கொண்டாடும் ஹோட்டல் நவ்ரங் கார்பரண்டம் யுனிவர்ஸல் நிறுவனத்தில் பணியாற்றுவோரின் முதல் முயற்சிதான் என்றாலும் முழு வெற்றியாக அமைந்துவிட்ட முயற்சி.

தோலை எறிய வேண்டாம்!

வெள்ளரிக்காய், பப்பாளி போன்றவைகளைச் சமைப்பதற்காகத் தோல் சீவும் போது, தோலை எறிந்து விடாதீர்கள். அவற்றைக் கொஞ்சம் உப்புப் போட்ட வெந்நீரில் வைத்து நன்றாக உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ளலாம். பப்படம் போல் வறுத்துச் சாப்பிட்டால் ருசியாக இருக்கும்!

நன்றி: 'பெமினா'

அனுப்பியவர்: ஜெயஸ்ரீ விசுவநாத்


கட்சி மாறும் பட்சி
கதை: குட்டி கிருஷ்ணன்
படம்: ராஜு
4
கேடி சொக்கப்ப னுக்குப் பட்சியை மிரட்டி பர்ஸைப் பறிப்பதுதான் நோக்கமேயொழிய கொலை கேஸில் மாட்டிக் கொள்ள அவன் விரும்ப வில்லை. பட்சி கூச்சல் போட்டுப் பயத்தில் மயங்கி யும் விழவே சொக்கப்பனுக்குக் கவலையாகி விட்டது...
...பட்சியின் பர்ஸை எடுத்துக் கொள்ளக் கூடத் தாமதியாமல் ஓடி விட்டான்.
குத்திட்டான் கொன்னுட்டான்னு கூச்சல் போட்டுத் தொலைச்சி ருக்கான். எதுக்கு வம்பு? கம்பி நீட்டுவோம்!
பட்சியின் கூச்சல் கேட்டு வந்த வர்கள் போலீஸுக்குத் தகவல் தர, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டான் பட்சி.
என்ன டாக்டர் ரொம்ப சீரியஸ்ஸா?
அதெல்லாம் ஒண்ணுமில்லே. ரத்தத்தைப் பார்த்துப் பயந்து நினைவிழந்து விட்டான். அவ்வளவு தான். காயம் ஒண்ணும் ஆழமில்லே.
சிறிது நேரத்தில் பத்திரிகை நிருபர்கள் இன்ஸ்பெக்டரைச் சூழ...
பட்சி, தன்னை யாரோ வழி மறித்த தாகவும் பர்ஸை அபகரிக்கும் முயற்சியாக இருக்கலாம் என்றும் சொல்கிறார்....
....ஆனால் வந்தவன் திருடனில்லே. பர்ஸை எடுத்துப் போகவில்லே. அது பட்சி பாக்கெட்டில் இன்னும் இருக்கிறது.
ஆக, இது அரசியல் ரீதியான கொலை முயற் சியாக இருக்கலாமோ?


இருக்கலாம். தாக்க ஆரம்பித்தவன், ஆட்கள் யாரோ வருவது போல் தோன்றவே வேலையை முடிக்காமல் ஓடியிருக்கலாம்!
ரொம்ப தாங்க்ஸ். பர பரப்பான நியூஸ்! ஆபீஸுக்கு ஃபோன் பண்ணிட்டுப்பிறகு சந்திக்கிறோம்.
என் பேரும் இரண்டு இடத்தில் வர மாதிரி பார்த்துக்குங்க!
மறு நாள் காலை தினசரியில்...
கட்சி மாறிய பட்சிக்குக் கத்திக்குத்து!
பிரிந்த கட்சிப் பிரமுகர்கள் ஆஸ்பத்திரியைப் படையெடுக்க...
ஆழ்ந்த அனுதாபங்கள்... செலவுக்கு இதை வைச்சுக்குங்க...
மிக்க நன்றி! அநாகரிக அரசியலுக்கு அஞ்சமாட்டான் பட்சி என அறிவியுங்கள்!
கீதாவைப்பட்சி தனியே சந்திக்க முடிந்த போது...
என்னங்க இதெல்லாம்..?..
அந்தக் கேடி பல்லாண்டு வாழ்க! எப்படி பிரபலமாயிட்டேன் பாரு!
அப்படி பேசாதீங்க... ஏமாத்து வியாபாரமே வேணாம்!
நீ சும்மா இரு! அரசியல் என்ற வார்த்தைக்கு அகராதியே ஏமாற்று வேலை என்று பொருள் தரும் காலம் இது!

தொடரும்



உள்ளம் நிறைந்தது, முகம் சிவந்தது!

சாந்தி நரசிம்மன்

அனு தன் பெற்றோர்களுக்கு ஒரே பெண். அதுவும் தாயில்லாப் பெண். தாமோதரன் அவளைப் பிரிய வேண்டிய நேரத்தில் தம் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டார். அனு சிறியவள்தானே. தாரை தாரையாக வடித்து விட்டாள் கண்ணீரை.

" உன் அம்மா இருந்திருந்தால் கிளம்புவ தற்கு முன் இப்படி அழக் கூடாது என்று முன்னமேயே சொல்லிக் கொடுத்திருப் பாளோ என்னமோ ? நீ சந்தோஷமாகப் புருஷன் வீட்டுக்குத்தானே போகிறாய் ? அதற்கு அழக் கூடாது" என்று சமாதானம் செய்தார் தாமோதரன். நந்துவிடம், "அனு செல்லமாக வளர்ந்தவள். சற்று ஏறத்தாழ இருந்தாலும் நீங்கள்தான் பொறுத்துக் கொள்ள வேண்டும். உங்களுடன் பழகப் பழக அவளே எல்லா விஷயங்களிலும் தேறிவிடு வாள் என்று நினைக்கிறேன்" என்றார்.

ஒரு வழியாகப் பச்சைக்கொடி காட்டி வண்டி கிளம்பியது. கையை ஆட்டி விடை பெற்றுக் கொண்டனர். அவர்கள் இருந்தது முதல் வகுப்பு கூபேயானதால் எதை வேண்டு மானாலும் பேசிக் கொள்ள முடிந்தது.

"அனு, நான் என்ன ராட்சசனா ? உன்னைக் கடித்தா தின்று விடுவேன் ? நீயும் யாரும் இல்லாத காட்டுக்கா போகிறாய்? நாம் இரு வரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் நம்முடன் கூட வருகிறேன் என்று சொன்ன என் பெற் றோர்களைத் தடுத்து நிறுத்திவிட்டேன். போகப் போக எல்லாம் சரியாகிவிடும். ஆனால் இப்போது என் மகாராணியின் துக்கம் தணிய நான் ஒரு கோமாளியாக மாறட்டுமா ?"

"ஐயையோ! அதெல்லாம் ஒன்றும் வேண் டாம். அப்பாவைப் பிரிந்தது கொஞ்சம் கஷ்டமா யிருந்தது. அவ்வளவுதான் !" என்று சிறு முறுவலுடன் சொன்னாள்.

"அப்பாடா, நீ பெங்களூர் வரும் வரையில் சோகமாகவே இருந்துவிடுவாயோ, இந்தப் பிரயாணத்தை அனுபவிக்க முடியாதோ என்று நினைத்தேன்" என்று கூறியபடியே அவளை நெருங்கினான். இனி மேலும் அங்கு இருக்க நமக்கு அதிகாரம் இல்லை.

மல்லேசுவரத்தில் வீடு வசதியாகவே அமைந்திருந்தது. அனுவும், நந்துவும் முதல் ஒரு வாரம் ஹோட்டலிலேயே சாப்பிட்டு விடுவது என்று திட்டமிட்டிருந்தார்கள். நந்து ஆபீஸிலிருந்து திரும்பியதும் அவளைத் தன் நெருங்கிய நண்பர்கள் சிலர் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். வெளியிலிருந்தே விதான் சௌதாவைக் காட்டினான். லால் பாக், கப்பன் பார்க் பார்க்க அழைத்துப் போனான். இப்படியே ஒரு வாரம் வேகமாக ஓடிவிட்டது.

"நாளையிலிருந்து உன் கைச் சமையலைச் சாப்பிட வேண்டும். என் உடம்பு என்ன ஆகப் போகிறதோ ?"

" அப்படிப் பயப்படுவதாக இருந்தால், நீங்கள் ஹோட்டலில் சாப்பிடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. நான் ஹோம் ஸயன்ஸ் கிராஜுவேட்டாக்கும். விதம் விதமாகப் பண்ணி நான் உங்கள் எதிரிலேயே சாப்பிடு வேன்."

"ஐயையோ ! அதை மறந்துவிட்டேனே ! வாபஸ், வாபஸ், வீட்டிலேதான் என் சாப் பாடு."

" அப்படி வாங்க வழிக்கு!"

அடுத்த நாள் காலை அவனுக்கு முன்ன தாகவே எழுந்து காப்பி தயார் பண்ணிக் கொண்டு வந்து அவனை எழுப்பினாள். சட் டென்று விழித்துக்கொண்ட நந்து குளிய லறைக்குள் நுழைந்து விட்டான். பல்தேய்த் துக்கொண்டு வந்தவன், "நானென்ன பெட் காப்பி குடிப்பேன் என்று நினைத்தாயா,

என்ன? காப்பியுடன் வந்து எழுப்பினுயே?'' என்றான். அனுவின் முகம் இலேசான ஏமாற்றத்தைக் காட்டியது. ஆனால் அவன் அதைக் கவனிக்கவில்லை. அவன்தான் காப்பியை வாங்கிக் கொண்டு பேப்பரில் மூழ்கிவிட்டானே. பிறகு எழுந்து போய்க் குளித்துவிட்டு வந்த அவன் அவசர அவசர மாகச் சாப்பிட்டான். தலை வாரி, டிரஸ் செய்து கொண்டு, ஷூவை மாட்டிக் கொண்டு அரக்கப் பரக்கக் கிளம்பினான். கையைக்கூட அசைத்து விடைபெற்றானே, என்னமோ தெரியவில்லை. ஸ்கூட்டரை ஓர் உதைவிட்டுக் கிளம்பிவிட்டான்.

சாயங்காலம் ஆபீஸிலிருந்து வந்தவனுடைய ஷூவைக் கழற்றப் போனாள் அனு. ''என் வேலையை நானே செய்து கொள்கிறேனே!'' இப்போதும் அனுவின் முகம் இலேசாக வாடியது. வெளியில் சுற்றிவிட்டு வந்த பிறகு சாப்பிட்டுவிட்டுப் படுக்கை. அந்த இரவின் சுகத்தில் அனு காலையில் அடைந்த ஏமாற்றத்தை மறந்தாள்.

இப்படியே அவள் தினம் ஆவி பறக்கும் காப்பியுடன் அவனை எழுப்புவதும், அவன் நிதானமாகப் பல் விளக்கிவிட்டு வந்து குடிப்பதுமாக ஒரு வாரம் ஓடிவிட்டது. அனுவின் முகம் வாடியிருப்பது போல் தோன்றியது. நந்து சந்தேகத்தை நிவர்த்தி செய்துவிடலாம் என்று அவளையே கேட்டு விட்டான்.

தயங்கித் தயங்கிச் சொல்ல ஆரம்பித்தாள் அவள். ''உங்களுக்கு என் மேல் பிரியம் இருக்கா என்று சமயத்தில் எனக்குச் சந்தேகம் உண்டாகிவிடுகிறது.''

'' இது என்ன பெரிய குற்றச்சாட்டாக இருக்கிறதே!''

''பின்னே என்ன தினம் நான் உங்களைக் காப்பியோட எழுப்பறேன். நீங்க போய்க் குளியலறைக் கதவைச் சாத்திக்கிறேளே?''

''என்ன அனு காலையில் எழுந்ததும் பல் தேய்க்க வேண்டாமா? நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாய்?''

''இல்லே. காப்பியோட வந்து மனைவி எழுப்புகிற போது பொய்த் தூக்கம் தூங்கிப் பிறகு அவள் தொட்டு எழுப்பும்போது பிடித்து இழுத்துக் கொள்வார் கணவர் என்று நினைத்தேன்!'' இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது.

'' இப்படியெல்லாம் நடக்கும் என்று யார் சொன்னது?''

''சினிமாவிலேயும் கதைகளிலேயும் அப்படித்தானே நடக்கிறது?''

'' ஓஹோஹோ! அதை வைத்துக் கொண்டு சொல்கிறாயா? உங்க வீட்டிலே யாராவது அப்படிச் செய்து பார்த்திருக்கிறாயா? அடாடா! நீதான் ஒரே பெண்ணாயிற்றே! உனக்குத் தெரிந்திருக்காது. காலையில் அவனவனுக்கு ஆபீசுக்குப் பறக்கத்தான் நேரம் இருக்கிறது. இந்த மாதிரி சல்லாபம் எல்லாம் மத்திய தரக் குடும்பங்களில் நடக்காது. இதை நீ புரிந்து கொள்ள வேண்டும்.''

மாலை பூ வாங்கி வந்தவன், ''ஸ்வாமிக்கு வைத்துவிட்டு நீயும் வைத்துக் கொள்'' என்றான். அவள் முகம் போன போக்கைப் பார்த்துவிட்டு, ''நானே வைத்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறே போலிருக்கே

ஒரு கிரிக்கெட் ரசிகர்: ''ஸார்! உங்களுக்கு ஒருநாள் கிரிக்கெட் பிடிக்குமா? ஐந்து நாள் கிரிக்கெட் பிடிக்குமா?''

''ஐந்து நாளும் இதே மாதிரி டிபனும் காப்பியும் நீங்க 'சப்ளை' செய்யறதாயிருந்தா ஐந்து நாள் கிரிக்கெட்டே தேவலே!''

காப்பியில் இன்ஸ்டெண்ட் காப்பி போல, இன்ஸ்டெண்ட் ஒருநாள் கிரிக்கெட் சென்னையில் நடந்தது.

'' இந்த ஒருநாள் கிரிக்கெட் புரொபஷனல் ஆட்டக்காரர்களுக்கு வரப் பிரசாதம்! நூறு ரன்கள் எடுத்தால் 100 பவுன்! ஐந்து விக்கெட் எடுத்தால் ஐம்பது பவுன் என்று கில்லெட் கோப்பைப் பந்தயம் போன்ற ஒருநாள் போட்டிகளில் புரொபஷனல் ஆட்டக்காரர்களை ஊக்குவிக்கிறார்கள். இதனால் பிரிட்டனில் ஐந்து நாள் பந்தயங்களின் மவுசு இப்பொழுது குறைந்து போய் விட்டது! ஆனால் இந்தியாவுக்கு ஒருநாள் கிரிக்கெட் பந்தயம் சரிப்பட்டு வராது!'' என்கிறார் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு திரு சின்னசாமி.

''ஒரு நாள் கிரிக்கெட் பந்தயம் இங்கு பிராபல்யம் ஆவதும் ஆகாததும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களைப் பொறுத்தது!'' என்பது எம்.ஜே. கோபாலன் கருத்து. ''இன்று நடந்த ஒருநாள் பந்தயத்தில் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் விக்கெட்டைக் கோட்டுக்குள் நின்று காக்கும் பணியிலேயே நேரத்தைக் கடத்தினர்! கோட்டை விட்டு வந்து பந்தைத் தட்டிவிட்டு ஓடும் பழக்கத்தைக் கைக்கொண்டால் ஆட்டம் சுவாரசியமாக இருக்கும்!''

''போர் — டே!'', ''போர்டே!'' என்று அன்றைய ஆட்டத்தைப் பற்றிக் கிரிக்கெட் ரசிகர்கள் கத்தினார்கள்! கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று ஆட்டத்தைக் காண வந்திருந்த போர்டே சிரித்துக் கொண்டார். அந்நாளைய விறுவிறுப்பான ஆட்டத்தை நினைத்துக் கொண்டாரோ என்னவோ?

வெங்கட் தலைமையில் ராம்சந்த் நிர்வாகத்தில் செல்லும் இந்திய அணி உலகக் கோப்பையைப் பெறுகிறதோ இல்லையோ, உலகப் புகழ் பெறுகிற மாதிரி நடந்து கொள்ள வாழ்த்துவோம்.

—குண்டுமணி

வெங்கட்
கார்ட்டூன்: ராமா





சரி, ஸ்வாமிக்கு வைத்துவிட்டு வா. நானே உனக்கு வைத்துவிடுகிறேன்'' என்றான். 'இவளை முதலில் மாற்ற வேண்டும்' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டான்.

அடுத்த நாள் கம்பெனியில் ஏதோ மீட்டிங் காம். டிரிம்மாக டிரஸ் செய்து கொள்ள வேண்டும் என்று கல்யாண சூட்டைப் போட்டுக் கொண்டான். அவன் டை கட்டிக் கொள்ளப் போகும் சமயத்தில் அனு ஓடி வந்தாள். ''நான் கட்டிவிடறேனே. என் கஸின் சம்பத் கிட்டே டை எப்படிக் கட்டணும்னு தெரிந்து கொண்டிருக்கிறேன். ப்ளீஸ்.''

''இல்லே, அனு. நீ கட்டினால் எனக்குப் பாந்தப்படாது...''

''டை கட்டக் கூடாது, ஷூ கழற்றக் கூடாது. இதெல்லாம் என்ன உத்தரவுகளா?''

''இதோ பாரு அனு. எனக்கு என்னுடைய வேலையை நானே செய்து கொண்டால்தான் பிடிக்கும். அதனால் நீ செய்தால் பிடிக்காது என்று அர்த்தம் இல்லே.....''

அலுவலகத்தில் சாரதியிடம் தன் மனைவியின் மனக் குறையைச் சொன்னான் நந்து. ''மாலே நம் வீட்டுக்கு அழைத்து வா. மருந்து கொடுத்து விடலாம்'' என்றான் நண்பன்.

அலுவலகத்திலிருந்து வந்தவன் அனுவை அழைத்துக் கொண்டு சாரதியின் வீட்டுக்குப் போனான். அப்போது சாரதி வீடு திரும்பி இருக்கவில்லை. சாரதியின் மனைவி சாந்தி மிகவும் நல்ல பெண். முதல் தடவை அவளைப் பார்த்த போதே அனுவுக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது. சிறிது நேரம் மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது சாரதியின் குழந்தை பாஸ்கர் (கிட்டத்தட்ட ஒரு வயதிருக்கும்) தூக்கத்திலிருந்து எழுந்து அழ ஆரம்பித்துவிட்டான். பால் கரைத்துக் கொடுத்துவிட்டு வருவதாகச் சொல்லிச் சாந்தி உள்ளே போனாள்.

உள்ளே அவள் பால் கரைக்கும் சத்தம் கேட்டது. கூடவே குழந்தையையும் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்! சாரதி அப்போதுதான் வந்தான். வந்தவுடன், ''ஏய், சாந்தி, இந்த ஷூவைக் கழற்று''என்றபடியே சோபாவில் தொப்பென்று உட்கார்ந்தான். பயந்தபடியே ஓடி வந்த சாந்தி அவன் சொன்ன வேலையைச் செய்து முடித்தாள். சாரதி, அனு, நந்து இருப்பதைப் பற்றிக் கவலைப்பட்டவனாகவே தெரியவில்லை.

இதற்குள் குழந்தையின் அழுகை அதிகமாகவே அனுவினால் தாங்க முடியவில்லை. உள்ளே சென்று, ''நான் வேண்டுமானால் பால் கொடுக்கிறேன். நீங்கள் அவரைக் கவனியுங்கள், சாந்தி'' என்றாள். நண்பர்களுக்கு டிபன், காப்பி கொடுத்துவிட்டு வந்த சாந்தியிடம், ''இதென்ன இவ்வளவு கோபம் உள்ளவரா உங்களவர் ?'' என்றாள் அனு.

''எல்லாம் நான் செய்த பைத்தியக்காரத்தனம்தான். கல்யாணமான புதிதில் ஷூவைக் கழற்றுவது, டை கட்டிவிடுவது, ஷூ பாலிஷ் போடுவது என்று எல்லா வேலைகளையும் செய்து காட்டி அவர் சோம்பேறித்தனத்தை வளர்த்துவிட்டேன். இப்போது குழந்தை பிறந்த பிறகு அவருக்கு என் கஷ்டம் புரிவதில்லே. இதுவாவது தேவலே. காலையில் எழுந்திருக்கும் போதே, காப்பி, பேப்பர் இரண்டின் முகத்தில் விழிக்க வேண்டும். பேப்பர் வருமுன் எழுப்பிவிட்டால் அன்று முழுவதும் இவருடைய மூட் மோசம் தான்!''

''ஆனால், சாந்தி! சினிமா, கதைகளில் வேறு மாதிரியாக அல்லவா நடக்கின்றன?''

'' நானும் அதைப் பார்த்து ஏமாந்துதான் போயிருக்கிறேன். அப்புறமாகத்தான் புரிந்தது. நடுத்தரக் குடும்பத்தில் காலை வேளையில் இந்தச் சல்லாபத்துக்கு இடமில்லே என்பது. இவர்களைச் சொல்லியும் குற்றம் இல்லே. காலையில் எழுந்ததும் அரக்கப் பரக்க வேலைகளை முடித்துவிட்டுக் கம்பெனிக்கு ஓட வேண்டியிருக்கிறது. தொடர்ந்து லேட்டாகப் போனால் வெளியே அனுப்பிவிடுவார்கள். அதனாலேதான் இத்தனை சங்கடங்கள்'' என்று முடித்தாள் சாந்தி.

வெளியே, ''ஏண்டா பழி, எப்படிடா குழந்தை அழற சமயத்துக்குச் சரியா வந்தே? உன் மனைவி கிட்ட நம்ப பிளானைப் பத்தி எப்போ சொன்னே ?'' என்றான் நந்து நண்பனிடம் தனியாக.

''வாசல் வராந்தாவிலே சில நிமிஷங்கள் காத்திருந்தேன். குழந்தை அழ ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்தில் திடீரென்று வருகிறாற் போல நுழைஞ்சேன். மத்தியானம் லஞ்ச் டைம்லே ஸ்கூட்டரை ஓர் உதை விட்டு வீட்டுக்கு வந்து இப்படி இப்படி நடந்துக்கணும்னு சொல்லிவிட்டுப் போனேன். இப்போ உள்ளே என் மருந்து வேலை செய்யறது என்று நினைக்கிறேன்.''

அனு, நந்து இருவரும் கிளம்பும் நேரம் வந்தது.

''அடிக்கடி வந்து போய்க்கொண்டிருடா!''

''ஷ்யூர்'' என்றபடி அனுவுடன் கிளம்பினான் நந்து.

வீடு திரும்பும் வழியில் அனு ''என்னங்க, உங்க சிநேகிதர் இப்படி இரக்கமில்லாதவராக இருக்கிறாரே, பாவம் சாந்தி! அவங்க பேருக்கேத்த மாதிரி ரொம்பப் பொறுமையாக இருக்கிறாங்க. அவர்களோட அருமை தெரியாதவராக இருக்கிறாரே, உங்கள் நண்பர்'' என்று விளாசித் தள்ளினாள்.

அடுத்த தினத்திலிருந்து நந்துவை எழுப்பி விட்டு, அவன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்த பிறகுதான் அனு சூடான காப்பியுடன் அவனை ஹாலில் சந்திக்கிறாள். மனக் குறை ஒன்று மில்லாமல் மூன்று மாதங்கள் ஓடிவிட்டன.

ஒரு நாள் ''என்ன அனு இந்த மாசம் நீ பீரியட் மிஸ் பண்ணிட்டே போலிருக்கே. ஒரு நல்ல லேடி டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்ட வேண்டும். அட, அட, உன் முகம் ஏன் என்னமோ போல் ஆகிறது? ஓஹோ, இதை நீயே சொல்லிப் பிறகு சினிமாக் கதைகளிலே வருகிற மாதிரி 'அடி கள்ளி! என்னிடம் சொல்லவே இல்லையே' என்று நான் சொல்ல முடியாதபடி முன்னாடியே கேட்டு விட்டேனே என்று நினைத்தாயா என்ன?'' என்றான் நந்து.

''போங்க! உங்களுக்கு எப்போதும் இதே குறும்புதான்'' என்று கூறிய அனு வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.



பெண்ணின் வாழ்க்கையில் காதல் 'ஒரு சரித்திரம்'. ஆணின் வாழ்க்கையில் அது 'ஒரு சம்பவம்'.

—மேடம் டி ஸ்டேல்



AIYARS-M.461 TM

வடியாது படியும் கேசச் சாயம்



புதிய
ட்ரூ-டோன்
ஜெல்

கெட்டியானது,
ஜெல்லி போன்றது...
நரைக்கும் கேசத்திற்கு
வெகு இலகுவாக, ஒருசீரான
கருமைச் சாயமேற்ற மிக
நாசூக்கான வழி—சிந்தல்
சிதறல் இல்லை

பம்பாய் 400 038

சாயத்தோடு டெவலப்பரைக் கலக்கும்போது இறுகலாகி
விடுகிறது ட்ரூ-டோன் ஜெல். கேசத்திலிருந்து நழுவி விழாது...
சாயம் ஆழ ஊடுருவும் ஆதலால் இயற்கைப் பொலிவு
தத்ரூபமாக அமையும். கேசப் பராமரிப்பிலே உலகத்
தலைமை வகிப்போரான ஹெலன் கர்ட்டிஸ் அவர்களின்
நிபுணத்துவத்தோடு உருவாக்கிய தயாரிப்பு இது.

* தவிரவும் கிடைப்பவை: ட்ரூ-டோன் லிக்விட்
டைய் (திரவச் சாயம்)

ரப்பர் கையுறைகள்:

ட்ரூ-டோன் ஜெல்லிலும் இருக்கிறது உள்ளமைப்பான ஒரு ஹேர் கண்டிஷனர்!

தென்னிந்தியாவுக்கான விநியோகஸ்தர்கள்:

பாரி & கம்பெனி லிட்.

everest/39/JKH-tm

4

ஹாலில், மோகினி பெரிதாகச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தது விஜயாவின் காதுகளில் விழுந்தது. அங்கு ராகேஷின் குரலும் கேட்டதுதான் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ராகேஷ் அம்மாவுடன் சண்டை பிடித்து அவள் பார்த்ததே இல்லையாது. சிறிது நேரத்துக்கு முன்னால் கபூர் வந்தது அவளுக்குத் தெரியும். அப்புறம் அவருடைய குரலேயே காணோம். இந்த வீட்டில் அவருடைய குரல் எப்போதுதான் கேட்டிருக்கிறது?

ரூபி தூங்கிவிட்டாள். தானும் தூங்க வேண்டியதுதான். வெறுமனே சாத்தியிருந்த அறைக் கதவைத் தாளிடுவதற்காக அவள் எழுந்திருந்தாள். இதுவரையில் கம்பளிக்குள் முடங்கிக் கிடந்த அவளுக்கு எழுந்ததும் இலேசாகக் குளிரத் தொடங்கியது. நாற்காலியில் கிடந்த சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். அறையின் வெளியில் யாரோ நடப்பது போல் இருந்தது. திறந்து பார்த்தாள். மான் சிங்.

''ராகேஷ் இரைந்து பேச மாட்டாரே!''

''மோகினியைப் பார்த்திருந்தால் காந்திஜியும் அஹிம்சைக் கொள்கையைக் கைவிட்டிருப்பார்'' என்று சொல்லிக் கொண்டே அறையை விட்டு வெளியே போனான் மான் சிங்.

ராகேஷ் ஒருவனுடன்தான் மோகினிக்கு இதுவரை நேரடி மோதல் இல்லை. அதுவும் ஏற்பட்டு விட்டது. ஹாலுக்குப் போய் என்ன நடக்கிறது என்று பார்க்கலாமா? காரியமில்லாமல் போனால் மோகினி சீறி விழக் கூடும். எந்தக் காரணத்தை முன்னிட்டு ஹாலுக்குப் போவது?

மோகினி எக்கேடு கெட்டால் நமக்கு என்ன? நான் தூங்கலாமென்று விஜயாவுக்குப் பட்டது. அறைக் கதவைத் தாளிடப் போனாள். அப்பொழுது மான்சிங் அவசரம் அவசரமாக வந்தான். ''மெம் சாஹப் கூப்பிடுகிறார்கள்.''

எதற்குக் கூப்பிடுகிறாள்? தான் ரூபியின் 'டீச்சரே' தவிர இவளுடைய அந்தரங்கக் காரியதரிசி இல்லையே? — கூப்பிட்டு ஏதாவது ஒரு தர்மசங்கடமான வேலையைச் செய்யச்

தீவுகள்

இந்திரா பார்த்தசாரதி



அறையைக் கடந்து சென்றவன், விஜயாவைப் பார்த்ததும் திரும்பி வந்தான்.

''சாஹப் வந்து விட்டாரா?'' என்று கேட்டாள் விஜயா.

''வந்தார். போய்விட்டார்.''

மான்சிங் அறைக்குள் நுழைந்தான்.

''ஹாலில் பெரிய சண்டை நடக்கிறது. மெம் சாஹப்புக்கும் ராகேஷ் பாபுவுக்கும்.''

''ராகேஷ் பாபுவா?''

''ஆமாம். எனக்கும் இதே ஆச்சரியம் தான். சாஹப் வந்தும் அவருடன் சண்டை போட ஆரம்பித்தாள் மகராசி. சாஹப் எப்பொழுதும் போல் பேசாமல் இருந்தார். அவரை அவள் சாப்பிட விடாமல் அடித்து ....சே... அவள் மனுஷியா?... நல்லவேளை ராகேஷ் பாபு வந்து அவரை விடுவித்தார். சாஹப் ஒன்றும் சொல்லாமல் காரை எடுத்துக்கொண்டு எங்கோ போய் விட்டார். இப்பொழுது அம்மாவுக்கும் பிள்ளைக்கும் சண்டை...''

சொன்னால் என்ன செய்வது? இந்த வீட்டில் யாரைப் பகைத்துக் கொள்ள முடியும்?

ஹாலில் சோபாவில் எந்த விதமான சலனமும் இன்றி மேல்கூரையைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் மோகினி. ராகேஷ் அங்கு இல்லை.

விஜயா அவள் எதிரே போய் நின்றாள்.

மோகினி அவளைப் பார்க்காமலே சொன்னாள்: ''கொஞ்சம் வெளியிலே போகலாம் வருகிறாயா?''

''எங்கே?''

மோகினி தலையைத் தாழ்த்தி அவளை நோக்கினாள். ''எங்கே என்று சொ[illegible]யாக வேண்டுமா? கூப்பிட்ட இடத்[illegible]க் கூடாதா?''

உபசாரத்துக்காகத்தான் தவளு[illegible]ப விருப்பத்தைக் கேட்டாளே ய[illegible]ள[illegible]ம் வராததும் பற்றிய முடிவு தன்[illegible]டம் இல்லை யென்பதை விஜயா உணர்ந்தாள்.

மோகினி எழுந்தாள். ''சரி, புறப்படு.''

''நான் அறைக்குப் போய் ஒரு 'புல்-ஓவர்' போட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்.''

''வேண்டாம். அதோ மாட்டியிருக்கிறேன் பார், என் ஓவர்கோட், அதைப் போட்டுக் கொள்'' என்று சொல்லிக் கொண்டே, ''மான் சிங்'' என்று கூப்பிட்டாள் மோகினி.

மான்சிங் வந்தான்.

''கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள். நாங்கள் கொஞ்சம் வெளியில் போய்விட்டு வருகிறோம்.''

''ஹா(ங்)ஜி'' என்று கூறிக் கொண்டே விஜயாவை ஒரு கேள்விக் குறி பாவனையுடன் நோக்கினான் மான்சிங். அவன் தன்னை அநுதாபத்துடன் பார்ப்பதுபோல் அவளுக்குப் பட்டது.

மோகினி கோட் போட்டுக்கொள்ளவில்லை. மேலே சால்வையைத்தான் போர்த்தியிருந்தாள். வெளியே நல்ல குளிராக இருப்பதைப் பார்த்ததும் அவள் விஜயாவிடம் சொன்னாள்: ''என் அறைக்குப் போய்க் கோட்டை எடுத்துக் கொண்டு வா. இவ்வளவு குளிராக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.''

''இந்தக் கோட்டைப் போட்டுக் கொள்ளுங்கள். எனக்குச் சால்வை போதும்.''

''இந்தத் தியாக உணர்ச்சியெல்லாம் வேண்டாம். உள்ளே போய் என் கோட்டை எடுத்துக் கொண்டு வா.''

மறுபடியும் உள்ளே போய்க் கோட்டை எடுத்துக் கொண்டு வர வேண்டும் என்பது அவளுக்கு அலுப்பைத் தந்தது. 'காலிங் பெல்லை' அழுத்தினாள். மான்சிங் கதவைத் திறந்தான்.

அவள் மோகினியின் அறையை நோக்கிச் சென்றாள். அறை வாசலில் ராகேஷ் நின்று கொண்டிருந்தான்.

விஜயா உள்ளே போய், 'ஹாங்க'ரில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு கோட்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

''வெளியே போகிறீர்களா?'' என்று கேட்டான் ராகேஷ்.

''ஆமாம்.''

''எங்கே?''

''தெரியாது.''

''இந்த வீட்டில் என்ன வேலை என்பதாக நீ வந்தாய்?''

விஜயா பேசாமல் இருந்தாள்.

''இந்த வீட்டு எஜமானி அம்மாள் உன் எளிமையை மிகவும் பயன்படுத்திக்கொள்கிறாள் என்று நினைக்கிறேன். அதை நீ அநுமதிக்கக் கூடாது.''

''நான் போக வேண்டும். மிஸஸ் கபூர் வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

''அவள் வெளியில் போக வேண்டுமென்றால் போகட்டும். நீ எதற்குப் போகிறாய்? ரூபிக்குத்தானே நீ பொறுப்பு?''

''ரூபியை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவளுடன் இருப்பதே எனக்கு ஊதியம். மற்றப்படி எனக்குக் கொடுக்கப்படும் சம்பளம், போடப்படும் சாப்பாடு, இட வசதியெல்லாம் மிஸஸ் கபூரைக் கவனித்துக் கொள்ளத்தான் என்று நினைக்கிறேன்!'' என்றாள் விஜயா.

ராகேஷ் சிரித்துக் கொண்டே சொன்னான்: ''அப்படியானால் நீ செய்கிற வேலைக்கு விகிதாசாரமாகப் பார்க்கும்போது உலகத்திலேயே மிகவும் குறைந்த சம்பளம் வாங்குகிறவள் நீதான்...''

விஜயா ஒன்றும் பேசாமல் புன்னகையுடன் வாசலை நோக்கிச் சென்றாள். அம்மாவுடன் இவ்வளவு பெரிய சண்டை போட்டுவிட்டு, எப்படி இவனால் மிகவும் இயல்பாக நகைச்சுவையுடன் பேச முடிகிறது? — குண அமைப்பில் இவன் மிகவும் வலுவானவன்தான். சந்தேகமில்லை...

மோகினி காரில் உட்கார்ந்திருந்தாள். விஜயா காரின் பின் கதவைத் திறக்கப் போனாள்.

''அங்கே வேண்டாம்... இங்கே வா.'' மோகினி முன் ஸீட் கதவைத் திறந்தாள்.

''என் அருமைக் கணவர் கோபித்துக் கொண்டு ஓடி விட்டார். அவரைத் தேட வேண்டும்.''

''எங்கே என்று போய்த் தேடுவீர்கள்?''

''கோபித்துக் கொண்டு போகும் கணவர்கள் எங்கே போவார்கள்?''

விஜயா பேசாமல் இருந்தாள். இது கணவனின் தன்மையைப் பொறுத்த விஷயம் என்று அவளுக்குத் தோன்றிற்று. 'இன்




ஒரு பெண்' இருந்தால், அங்கே போகலாம். ஆனால் கபூரைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லை. சிநேகிதிகள் கூடக் கிடையாது. மோகினிக்காவது சிநேகிதர்கள் இருக்கிறார்கள். மோகினியைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள் அவளுடன் தொடர்ந்து சிநேகமாக இருப்பது ஆச்சரியம்தான்!

''எங்கே போவார்கள்! சொல்லேன், ஏன் பேசாமல் இருக்கிறாய்?''

''எனக்குத் தெரியாது. எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை.''

இவ்வாறு சொன்ன பிறகு மோகினியிடம் தான் இப்படிப் பேசியிருக்கக் கூடாது என்று அவளுக்குத் தோன்றிற்று. ராகேஷுடன் விளையாட்டாகப் பேசியதன் காரணமாக ஏற்பட்ட ஒரு மகிழ்ச்சி நிலையி



பரீட்சையின்போது...



கண்காணிப்பாளர் இன்னொரு ஆசிரியரிடம் சொல்கிறார்:

"அந்தப் பையனைப் பார்த்தா எனக்குச் சந்தேகமாக இருக்கு. எல்லாரும் காப்பி அடிக்கும்போது அவன் மட்டும் காப்பி அடிக்காம எழுதறான். அவனைக் கொஞ்சம் கண்காணியுங்க."

டைம்ஸ் ஆஃப் இந்தியா ஜோக் — பாபு

விருந்த அவள், தான் யாருடன் பேசுகிறோம் என்பதை மறந்து, மனத்தில் தோன்றியதை அப்படியே சொல்லிவிட்டாள். அதிகப்பிரசங்கித்தனமான பதில் என்று மோகினி கோபித்துக் கொள்வாளோ என்ற பயம் அவளுக்கு ஏற்பட்டது. ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக மோகினி புன்னகை செய்தாள்.

அவள் மௌனமாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்றாள். அவள் போன வேகத்தைப் பார்த்ததும் விஜயாவுக்குக் கொஞ்சம் பயமாக இருந்தது. பனி மூட்டத்தைப் பற்றி அவள் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

"இந்தக் 'கிளப்'பில் ஒருவேளை இருந்தாலும் இருக்கலாம். உள்ளே போய் விசாரித்துவிட்டு வா" என்றாள் மோகினி.

கிளப் வாசலில் நிறையக் கார்கள் இருந்தன. 'ஊரில் இத்தனை மோகினிகளா இருக்கிறார்கள்? கணவர்கள் இந்த நேரத்தில் இங்கு வருவதற்கு?' என்று நினைத்தாள் விஜயா.

ஒரு பெரிய 'ஹாலி'ல் பல மேஜைகள் போடப்பட்டிருந்தன. மிக நாகரிகமாக உடை அணிந்த 'பெரிய மனிதர்கள்' சீட்டாடிக் கொண்டும் குடித்துக் கொண்டுமிருந்தார்கள். தில்லியின் செல்வம் முழுதும் இந்தக் கணத்தில், இப்பொழுது இந்த அறையில் இருக்கிறது என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் விஜயா. அவள் அப்பாவும் இப்படித்தான் ஒரு கிளப்பில் தினசரி சீட்டாடிப் பணத்தை யெல்லாம் கரைத்தார். ஆனால் அது, பொருளாதார ஜாதியில் குறைந்தவர்களுக்கென்று இயங்கி வந்த, வேறு ஒரு 'கிளப்'. இந்தக் 'கிளப்'பின் வாசலில் நிறையக் கார்கள் இருப்பன போல், அங்கு வாசலில் நிறைய ஸ்கூட்டர்களும், சைக்கிள்களும் இருக்கும்.

'அலுவலக அறை' என்ற பெயர்ப் பலகையைப் பார்த்ததும், அவள் உள்ளே நுழைந்தாள். அலுவலக நேரம் முடிந்துவிட்டது போல் இருக்கிறது. குறுந்தாடி இளைஞன் ஒருவனும், மாக்ஸி அணிந்த ஒரு பெண்ணும் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

"மன்னிக்கவும்.... நான் ஒரு விஷயம் பற்றி விசாரிக்க வந்தேன்" என்றாள் விஜயா, முகம் சிவக்க. அவர்கள் இருவரும் உட்கார்ந்திருந்த நிலையைப் பார்த்ததும், விஜயாவின் முகம், அவளை அறியாமலேயே, தன்னிச்சையாகச் சிவந்தது.

"என்ன வேண்டும் ?" என்று கேட்டான் அந்த இளைஞன்.

"மிஸ்டர் கபூர் இங்கே வந்தாரா ?"

இருவரும் பதில் சொல்லாமல் சிரித்தார்கள்.

விஜயாவுக்குக் கோபம் வந்தது. "எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" அவர்கள் பதில் சொல்லவில்லை. தொடர்ந்து சிரித்துக் கொண்டேயிருந்தார்கள். விஜயா அறையை விட்டு வெளியே வந்தாள். அந்தக் கட்டடத்தையே பீரங்கி கொண்டு இடிக்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றிற்று.

அவள் ஹாலுக்கு வந்ததும், அவள் அந்தக் 'கிளப்'போடு ஒட்டவில்லை என்பதை உணர்ந்த ஒருவன் அவளிடம் வந்து கேட்டான்: "யாரைத் தேடுகிறீர்கள்?"

"மிஸ்டர் கபூர். இண்டஸ்ட்ரியல் கன்ஸல்டண்ட் !"

"ஓ ! அவரா...? கொஞ்ச நேரத்துக்கு முன்னால் வந்தார். போய்விட்டார். கொஞ்சம் இருங்கள். யாருடன் போனார் என்று விசாரித்துச் சொல்கிறேன்."

பல மேஜைகளிலிருந்து, ஆரவாரத்துடன் கூடிய மிகப் பெரிய சிரிப்பொலிகள் கேட்டன. 'சதீஷும் இங்குதான் தினம் குடிக்க வருகிறான் போலிருக்கிறது. இன்று அவன் குடித்துவிட்டுத் தள்ளாடிக் கொண்டு வந்த விதம்.....! மோகினி அவனுடன் ஒன்றுமே பேசவில்லை..... அவன்தான் சொன்னான்: "மைடியர் மதர், ஐ ஆம் ட்ரங்க், ட்ரங்க் லைக் எ ஃபிஷ்" இதைச் சொல்லிவிட்டு அவன் சிரித்த சிரிப்பு.

பா பீ தன் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டாள். அப்புறம் சதீஷை மாடி வராந்தாவுக்குப் பக்கத்திலிருந்த விருந்தினர் அறையில் படுக்க வைத்தார்கள். **பா பீ** அவனைப் பற்றிக் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. ஏன்?—

"மிஸ்டர் கபூர் மிஸ்டர் ரத்தன்லாலுடன் போனதாகச் சொல்கிறார்கள்."

"மிஸ்டர் ரத்தன்லாலுடைய டெலிபோன் நம்பரைச் சொல்ல முடியுமா ?"

"வாருங்கள்... அங்கே டெலிபோன் பூத் இருக்கிறது. டைரக்டரியில் பார்க்கலாம்."

அவன் 'டைரக்டரி'யில் பார்த்து ரத்தன்லால் நம்பரைச் சொன்னான்.

"என் பேர் கட்டாரியா. நான் இங்கு ஆஃபீஸ் அஸிஸ்டெண்டாக இருக்கிறேன். நீங்கள்....?" என்று இழுத்தான்.

"என் பேர் விஜயா. மிஸஸ் கபூருடைய காரியதரிசியாக இருக்கிறேன்....."


"எதற்காக அவரைத் தேடிக் கொண்டு வந்தீர்கள்? முக்கிய விஷயமோ ?"

"ஒன்றுமில்லை... சரி. தாங்க்ஸ்..." என்று சொல்லிக் கொண்டே எண்களைச் சுழற்றினாள் விஜயா. டெலிஃபோன் அடித்துக் கொண்டேயிருந்தது. பதில் இல்லை. நாலைந்து தடவைகள் முயற்சி செய்தாள். ரத்தன்லால் வீட்டில் யாரும் இல்லை போலிருக்கிறது..... இருவரும் எங்கே போயிருப்பார்கள் ?

(தொடரும்)


உங்கள் வீட்டில் மூட்டைப்
பூச்சிகளா ?
ராலீஸ் ஹவுஸ்ஹோல்டு பூச்சிக் கொல்லிகள்
மூலம் அவற்றிலிருந்து விடுதலை பெறுவீர்.
மூட்டைப் பூச்சிகள்
டிக்-20
கரப்பான்கள் மற்றும் எறும்புகள்
ஹெக்ஸிடோல் பி 10
கொசுக்கள்
ரீப்ளெக்ஸ்
செல்லுகள்
சூபர் டெர்மெக்ஸ்
ராலீஸ் இந்தியா லிட்.
வருடக்கணக்காக பூச்சிக்கள் கட்டுப்படுத்தலுக்கே !

RADEUS/R-SP-9


ஓரியண்ட்
வலிமை மிக்கது
ஓசையற்றது
நம்பிக்கை வாய்ந்தது
ஓரியண்ட் மின்விசிறிகள் நவீன மோஸ்தரில் கட்டப்பட்டுள்ள வீடுகள், ஆபீஸ்கள் மற்றும் அலுவலகங்களின் எழிலுக்கு ஏற்றவாறு இணைந்து பரிமளிக்கும் வகையில் அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளன. உங்களுடைய குறிப்பிட்ட தேவைகளுக்கு தகுந்தவாறு பற்பல விதங்களில் கிடைக்கின்றன—சீலிங், டேபிள், டெஸ்க், ஸ்டாண்ட், ஆல் பர்ப்பஸ் மற்றும் எக்ஸ்ஹாஸ்ட் மாடல்கள்.
இந்தியாவின் மிகச் சிறந்த அனுபவமிக்க மின்விசிறி தயாரிப்பாளர்களால் தேர்ந்து அளிக்கப்படும் எல்லாவிதமான ஓரியண்ட் மின்விசிறிகளும் அவற்றின் ஈடிணையற்ற சிறப்புத் தன்மைகளுக்கு இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் பெயர் பெற்றவை.
எல்லா மின்விசிறிகளும் இரண்டு வருட உத்தரவாதம் உள்ளவை.
மிக அதிக அளவில் விற்பனையாகும் பெருமை மிக்க திறுசுகள்.
டெஸ்க் மின்விசிறி
சூப்பர் டிலக்ஸ் டேபிள் மின்விசிறி
டிலக்ஸ் டேபிள் மின்விசிறி
ஆல் பர்ப்பஸ் மின்விசிறி
ஸ்டாண்ட் மின்விசிறி
ஓரியண்ட் விசிறி
உலக முழுவதும் தேர்ந்தெடுக்கப்படும் பெயர்
ஓரியண்ட்
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், 6,
தொழிற்சாலைகள் : கல்கத்தா, பரிதாபாத்

CC-O-4/73



திருக்குறள் தந்த திருவள்ளுவர்

திருவள்ளுவரைப் பற்றி நமக்குத் தெரிந்ததெல்லாம் திருக்குறள் ஒன்றுதான். கர்ண பரம்பரையாக வழங்கி வரும், ஆதாரம் இல்லாத பல கதைகள் வள்ளுவரைப் பற்றி உண்டு. எதையுமே சரியான சான்ருகக் கொள்ளுவதற்கில்லை.

இந்நிலையில், அவரைப் பற்றி ஒரு நடன நாடகம் நடத்துவதென்ருல் எவ்வளவு சிரமமான காரியம்? கலைத் தம்பதி நடராஜ்—சகுந்தலா துணிந்து அந்நாடகத்தை அரங்கேற்றியும் விட்டனர்.

வள்ளுவர் பிறந்ததிலிருந்து காட்டுகிருர்கள். அவர் நெசவுத் தொழில் பயின்றது, பிறகு அவ்வையாரைக் கண்டது, அவ்வையார் மூலம் திருமூலரிடம் சென்று தமிழ் மொழி பயின்றது, அப்புறம் வாசுகியை மணந்தது, திருக்குறள் இயற்றியது....

இந்நடன நாடகம் மாண்புமிகு முதலமைச்சர் திரு மு. கருணநிதி அவர்களின் தலைமையில் அரங்கேறியது. முதல் அமைச்சர் நடராஜ் — சகுந்தலாவின் நடனங்களை மனமாரப் பாராட்டிப் பேசினலும் கதையம்சத்தில் உள்ள குறைகளையும் எடுத்துக் கூறிஞர்.

''வள்ளுவர் வாழ்ந்திருந்த காலத்தில் அவ்வையாரைக் காண்பித்து, அதுவும், — ''ஆத்திசூடி'' பாடும் அவ்வையாரை—அவர் வள்ளுவருக்கு உறுதுணையாயிருந்து திருக்குறள் அரங்கேற்றத்தில் பங்கு கொண்டதாகக் காட்டுவது பொருத்தமானதல்ல; அதேமாதிரி திருமூலரை அரங்கில் ஏற்றி அவர் வள்ளுவருக்குத் தமிழ்ப் பயிற்சி செய்வித்ததாகக் காட்டுவதும் சரியல்ல; இவர்களது காலத்தைக் குழப்பம் ஏற்படும்படி செய்திருப்பதைத் தமிழ்ப் புலவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்'' என்று குறிப்பிட்டார் முதல்வர். தமிழ்ப் புலவர்கள் வரிசையில் மூன்று அவ்வையார்கள் இருந்திருக்கிருர்கள் என்பதையும் எடுத்துச் சொன்ஞர்.

தாம் இயற்றிய திருக்குறளின்படி வள்ளுவர் வாழ்ந்தார் என்று காட்ட அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய முப்பால்களிலும் சான்றுகளைத் தேடிச் சுவையாகக் கதையைத் தொகுத்திருக்கின்றனர்.

இந்நடன நாடகத்தில் பாராட்டுப் பெறும் அம்சங்களில் முக்கியமானது இசை. திருவள்ளுவர் குறட்பாக்களை எடுத்துச் சொல்லுவதைத் தனியான தொரு குரலில் (பத்திரிகைகளில் முக்கியமானவற்றைக் கொட்டை யெழுத்தில் போடுவது போல்!) கணீரென்று பாடியது மிகவும் நன்ருயிருந்தது. இம்மாபெரும் நடன நாடகத்தை அலுப்பில்லாமல், விறுவிறுப்போடு நிகழ்த்தியது ஒரு மகத்தான சாதனை.

அரங்கேற்றத்துக்கு, புல்லி சங்கீத நாடக அகாடமியும், தமிழ்நாடு அரசும் நிதியளித்துப் பேராதரவு காட்டியுள்ளன.

பாடல்களை இயற்றியவர் எம். எஸ். சுந்தரம் (அம்பலத்தரசன்)

இலக்கிய மணமும், இன்னிசை இதழ்களும், அபிநய வண்ணமும் கொண்ட அழகிய மலரான இந்நடன நிகழ்ச்சி கலைத் தேவிக்குக் காணிக்கையாக்கப்பட்டுள்ளது. —**காந்தன்**



ஓரவஞ்சனை !

உயர்நீதி மன்ற பிரதம நீதிபதியின் காரில் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்ட பிறகு நாக்பூரில் எல்லா உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கும் போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு நீதிபதிக்கு மட்டும் கொடுக்கப்பட வில்லை. காரணம், அவர் ஜெயப்பிரகாஷ் நாராயணனின் குடும்ப நண்பர்! ஜெயப்பிரகாஷ் நாக்பூர் வரும்போதெல்லாம் இந்த நீதிபதியின் வீட்டில்தான் தங்குவாராம்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா — பாலி

அவன்தான் மனிதன்



சிவாஜியின் நடிப்பாற்றலுக்குச் சவால் விடும் சம்பவங்கள் கொண்ட ஒரு நல்ல கதை கிடைத்துவிட்டால், அவர் பிய்த்து உதறி விடமாட்டாரா? ஒரு சந்தர்ப்பத்தில் கூட அவர் நடிப்பு தொய்வடையவில்லை.

சிங்கப்பூரில் ஓர் அழகியின் பின்னாலேயே ரவி தொடரும் காட்சி அபாரமாகப் படமாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காட்சிகளில் பேச்சே இல்லை. ஆனால் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும் பார்வை இருக்கிறதே, அப்பப்பா! அது என்ன பேச்சுப் பேசுகிறது! விதம் விதமான காட்சிகள் மாறிக்கொண்டு வரும்போது அந்தப் பெண்ணின் உடைகளும் மாறிக் கொண்டே வருவது நன்றாயிருக்கிறது. வண்ணப் படத்தின் கவர்ச்சிக்கு மேலும் கவர்ச்சியூட்டுகிறது. அந்தக் காட்சியில் மஞ்சுளாவும் சிவாஜியும் பார்த்துக்கொள்ளும் பார்வைகளும், வீசிக்கொள்ளும் புன்னகைகளும் அற்புதமாகப் படமாக்கப் பட்டிருக்கின்றன.

அக்காட்சியிலிருந்து பிரசவித்து இறந்து விடுகிற காட்சி வரையில் மஞ்சுளா இன்பத்தில் மிதந்து, பிறகு துன்பத்தில் தவித்துச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

எம். ஆர். ஆர். வாசு, சந்திர பாபு நடிக்கும் காட்சிகள், சந்திர பாபு மறைந்துவிட்டாலும் அவர் நடிப்பு மறையவில்லை என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. சந்திர பாபுவைத் தவிர இந்தக் காமெடிக் காட்சிகளில் மற்றவர்கள் சோபிக்கவில்லை. ஆனால் 'சோ'வின் பொருள் பொதிந்த பேச்சும், சந்தர்ப்பத்துக்கேற்ற நடிப்பும் ரசிகர்களின் கையொலியைப் பெறுகின்றன.



கவியரசு கண்ணதாசனின் ''அன்பு நடமாடும்'', ''ஆட்டுவித்தால் யாரொருவர்'' என்ற பாடல்கள் மிகவும் இனிமையாக இருக்கின்றன.

ஜெயலலிதாவுக்குக் குணச்சித்திர விளக்கமான பாத்திரம். அடக்க ஒடுக்கமாக வந்து அமைதியாக நடித்துப் பாத்திரப் படைப்புக்கு உயிர் ஊட்டுகிறார்.

ஏ. சி. திருலோகசந்தர், உணர்ச்சி மயமான இக்கதையைத் திறம்பட இயக்கியிருக்கிறார்; திரைக் கதையைச் சுவையாகத் தீட்டியிருக்கிறார். சிந்திக்க வைக்கும் சிறப்பான வசனங்களுக்குப் பஞ்சு அருணாசலம் பாராட்டுப் பெறுகிறார்.

முத்துராமனுக்கு நல்ல வாய்ப்பான பாத்திரம். அமர்க்களப்படுத்தி விட்டார். மேஜர் சுந்தரராஜனுக்குப் பழக்கப்பட்டுப் போன மிடுக்கான பாத்திரமல்ல; எஜமான விசுவாசமுள்ள வேலைக்காரன் பாத்திரம். மாறுதலான நடிப்பு. உணர்ந்து நடித்திருக்கிறார்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் ஒரு நல்லவனுக்குத்தான் எத்தனை சோதனைகள்! இதைப் பார்த்தால், உலகத்தில் நல்லவனாயிருப்பதே தவறு என்ற எண்ணம் தோன்றாதோ? கதாநாயகனின் சோக முடிவை மாற்றியிருக்கலாமே? — **காந்தன்**

கடைசிப்பக்கம் — கண்ணதாசன்



நம்பிக்கை

'என் பையன் மிகவும் நல்லவன்' என்று நீ நம்பிவிட்டால் எந்த விதத் தொல்லையும் உனக்கு இருக்காது.

பையன் கெட்டவனாகவே இருக்கலாம்; அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டியவன் அவனே.

மனைவி உத்தமி, பத்தினி என்று நம்பிவிட்டால், உன்னைப் பொறுத்தவரை காதல் சுகமாகிவிடும்.

தவறான நடத்தைக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டியவள் அவளே.

வேலைக்காரனையும் நீ நம்பிவிடவேண்டும்; அதற்கு அவன் துரோகம் செய்தால் அவனை விலக்கிவிடு. அதற்காக யாரைக் கண்டாலும் அவநம்பிக்கை கொள்ளாதே.

நம்பிக்கையோடு கோவிலுக்குப்போ.

'நம்பினோர் கெடுவதில்லை' என்பது நான்கு மறைத் தீர்ப்பு.

வாஸ்கோடகாமாவின் நம்பிக்கை புதிய நிலத்தைக் கண்டுபிடித்தது.

கொலம்பஸின் நம்பிக்கை அவன் தாய் நாட்டுக்கு ஒரு புதிய நிலத்தைத் தந்தது.

ஆயுதங்களில்லாத சர்ச்சிலின் நம்பிக்கை இரண்டாவது உலகப் போரில் இங்கிலாந்துக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

கடலில் விழுந்து தத்தளித்த ஒருவன் இரண்டு மாதங்கள் நீந்திக் கொண்டிருந்தானென்றும், பிறகொரு கப்பலில் கரை சேர்ந்தானென்றும் நான் படித்திருக்கிறேன்.

நம்பிக்கை மட்டும் இல்லாதிருந்தால் அவன் பிணமாகி மீன்களுக்கு இரையாகியிருப்பான்.

பிரகலாதனின் நம்பிக்கை கடவுளைக் காட்டிற்று.

கண்ணனின் நம்பிக்கை பாரதப் போரில் வெற்றி பெற்றது.

நான் முன்னேறியது படிப்பினால் அல்ல; நம்பிக்கையால்.

அப்போது எனக்குப் பதினாலு வயது. கவிதை எழுதுவதில் எனக்குக் கொள்ளை ஆசை.

ஒருநாள் அதிகாலையில் எழுந்து நாலு வரி எழுதினேன்.

'வீணை கானம் விடியுமுன் கேட்டது;
கர்ணாமிர்தம் காதுக்கினிமை;
தூக்கம் கலைந்தது துள்ளி எழுந்தேன்;
படுக்கையி லிருந்தே பருகினேன் அமுதம்!' —

இந்த நாலு வரிக்கு மேல் எழுதத் தெரியவில்லை; விட்டுவிட்டேன்.

பதினேழாவது வயதில் முதன் முதலாக முழுக் கவிதை எழுதினேன். அந்த வயதிலேயே ஒரு பத்திரிகையில் ஆசிரியரானேன்.

ஒரு நண்பர் எத்தனை ஆயிரம் ரூபாய் இருந்தாலும் என்னிடம் கொடுத்து வைப்பார். — நம்பிக்கை.

நம்பிக்கைக்குத் துரோகம் செய்பவன் பெரும் தண்டனைக்கு ஆளாவான் — கண்ணாரக் கண்டிருக்கிறேன்.

என்னிடம் அநியாயமாகப் பணம் வாங்கியவர்கள், அந்தப் பணத்தை நியாயமாகச் செலவழித்ததில்லை. அது துரோகத்துக்குத் தக்க தண்டனை.

தேசத்தை நம்பு; தெய்வத்தை நம்பு; உலகம் உன்னைப் புகழும்.

'இது நம்மால் முடியும்' என்று எண்ணு; முடிந்துவிடும்.

மனோதிடமும் வைராக்கியமும் இந்த நம்பிக்கையின் குழந்தைகளே.

ஒரு துறையில் முனைந்து நின்று, நம்பிக்கையோடு முன்னேறினால், நீ நினைக்கும் அளவுக்குப் புகழும் பொருளும் வந்து சேரும்.

கடலைக்கடக்கக் கப்பலைத் தந்தது எவனோ ஒருவனின் நம்பிக்கை.

இவற்றுள் தலையாயது தெய்வ நம்பிக்கை.

தெய்வ நம்பிக்கை பொருள் தருகிறது; நிம்மதி தருகிறது; நியாயமாக நடக்கச் சொல்கிறது.

மருத்துவரிடம் நம்பிக்கை வைத்தால் மருந்தில்லாமலே பாதி நோய் தீர்ந்துவிடுகிறது.

நம்பிக்கையுடையவன்தான் வேதாந்தியாவான், விஞ்ஞானியாவான்.

நம்பிக்கை இல்லாதவனுக்குச் சுகமும் அற்பம், ஆயுளும் அற்பம்.

தண்ணீரைப் பால் என்று நம்பினால் அது பால்தான்.

வேப்பிலை இனிக்கும் என்று நம்பினால் இனிக்கும்.

நம்பிக்கைக்கு மிகவும் தேவையானது, மனம்.

அது உன்னிடமே இருக்கிறது; அதற்காக நீ ஒரு பைசாவும் செலவழிக்கத் தேவையில்லை!

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran


ஆரஞ்சு வண்ணத்தின் சங்கமம்
ஆனந்த வாழ்வின் சங்கீதம்...
Gold Spot
கொழிக்கும்
ஆரஞ்சு மணம்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
இலங்கையில் விலை 60 சதம் (தபால் செலவு தனி)



SIMOES/AG/8/75